அகண்ட தமிழ் உலகம்

3வது மாநாட்டு மலர்

“தமிழர் நாம் ஒன்றுபட்டு உலகை வழி நடத்துவோம்”

உலகத் தமிழர் 3வது இணையதள மாநாடு

ஸ்ரீ சார்வரி வருடம், பங்குனி மாதம், 13, 14 மற்றும் 15

26th, 27th & 28th March 2021

ORGANISED BY :

CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES (CCGS)

136, ARCOT ROAD, SHYAMALA TOWERS, 7TH FLOOR, WEST WING,
SALIGRAMAM, CHENNAI - 600 093, TAMIL NADU, INDIA.
Web : www.chennaicgs.org E-mail : chennaicgs2014@gmail.com

Web : www.tamilulagam.org E-mail : info@tamilulagam.org

WORLD PEACE FOUNDATION
உலக அமைதி நிறுவனம்

Founder & President Lion Dr. ANANDAR CHANDRAHASAN M.A., M.D(acu)., Ph.D., D.F.Tech.,
PHILOSOPHER, TRAINER, COACH, COUNSELOR, HEALER

Flat No. 7, 2nd Floor, 15/6A, 3rd Street, Alagiri Nagar, Vadapalani, Chennai - 600 026.
Mobile : 98410 41478 / 99412 88380 / 98410 41456
E-mail : anandar@wpf.co.in / anandarchandrahasan@gmail.com
Website : www.wpf.co.in / www.anandar.in / www.anandar.com

Following Therapies & Trainings Undertaken ௐ கீழ்க்கண்ட பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன

- ★ YOGASANAS - யோகாசனப் பயிற்சிகள்
- ★ PHYSICAL EXERCISES - உடற்பயிற்சிகள்
- ★ MEDITATIONS - தியானப் பயிற்சிகள்
- ★ PRANAYAMAS - மூச்சுப் பயிற்சிகள்
- ★ KAYAKALPA YOGA - காயகல்ப பயிற்சிகள்
- ★ PRAYERS - பிரார்த்தனை பயிற்சிகள்
- ★ INTROSPECTIONS - தற்சோதனைப் பயிற்சிகள்
- ★ ALTERNATIVE THERAPIES - மாற்று மருத்துவம்
- ★ HEALING - குணப்படுத்துதல்
- ★ PERSONALITY DEVELOPMENT - ஆளுமை வளர்ச்சி பயிற்சிகள்
- ★ LEADERSHIP SKILLS - தலைமைப் பண்பு பயிற்சிகள்
- ★ LIFE SKILLS TRAINING - திறமை மேம்பாட்டு பயிற்சிகள்
- ★ COUNSELLING - ஆலோசனை வழங்குதல்
- ★ SUB CONSCIOUS POWER - ஆழ்மன சக்தி பெருக்கம்
- ★ SPIRITUAL SATHSANGAM - ஆன்மீகக் கூட்டங்கள்
- ★ JOYFUL, PEACEFUL, CELEBRATION LIFE DESIGNING
  மகிழ்ச்சியான, அமைதியான, இரசித்தல், கொண்டாட்டத்துடன் கூடிய வாழ்க்கை வடிவமைப்பு

அகண்ட தமிழ் உலகம்

“தமிழர் நாம் ஒன்றுபட்டு உலகை வழி நடத்துவோம்”

உலகத் தமிழர் 3வது இணையதள மாநாட்டு மலர்

நாள்

சார்வரி வருடம், பங்குனி மாதம், 13, 14 மற்றும் 15

SOUVENIR

FOR

TAMIL INTERNATIONAL 3RD VIRTUAL CONFERENCE

(26, 27 & 28 March 2021)

Web : www.tamilulagam.org E-mail : info@tamilulagam.org

CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES

ORGANISED BY

Chennai Centre for Global Studies (CCGS)

136, Arcot Road, Shyamala Towers, 7th Floor, West Wing,
Saligramam, Chennai - 600 093, Tamil Nadu, India.
Web : www.chennaicgs.org E-mail : chennaicgs2014@gmail.com

கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

- ஔவையார்

தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

- மனோன்மணியம் பெ.சுந்தரனார்.

அருள்திரு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்

ஆசியுரை

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.

அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாட்சி உமையே.

CCGS மூலமாக நடத்தப்படும் அகண்ட தமிழ் உலகம் என்ற மாநாடு உலகெங்கிலும் வாழும் தமிழர் பங்கு பெறும் வகையில் இணைய வழி நிகழ்ச்சியாக நடைபெறுகிறது.

தமிழ் மரபையும் பக்தியையும் தமிழ் கலாச்சாரம் சார்ந்த விஷயங்களையும் தமது குழந்தைகளுக்கு கொண்டு செல்ல ஏதுவாக காஞ்சி மடம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள சில நல்ல நூல்களை தமிழ் வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். உதாரணத்திற்கு, அறவழி வாசகம் என்ற நூல் தமிழ் வரலாறு, தமிழ் மரபு, தமிழ் மொழி மீது ஆர்வத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தமிழ் பாடசாலை என்ற பெயரில் சென்னை சேத்துப்பட்டில் ஏற்படுத்தியுள்ள அமைப்பு எல்லா வயதினருக்கும் இரு பாலருக்கும் இலவசமாக தமிழ் கல்வியை வழங்குகிறது.

ஸ்ரீ சங்கர மடத்தின் மூலமாக காஞ்சிபுரம், விழுப்புரம், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் போன்ற ஊர்களில் தமிழ் வழிப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்து சமயம் பற்றிய பல புத்தகங்கள், வினா விடைகள், ஸ்தோத்திர புத்தகங்கள், தமிழ் மரபை விவரிக்கக்கூடிய பல கட்டுரைகள் ஆகியன தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஒரு தெய்வீக மொழி, விஞ்ஞான மொழி, புராதனமான மொழி. பல துறைகளிலும் சிறப்பு வாய்ந்த வல்லுநர்களை உருவாக்கக்கூடிய வல்லமை இம்மொழிக்கு உண்டு. இது பக்தியை வளர்க்கக்கூடிய மொழி.

மத்திய மாநில அரசுகள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும் சமுதாய ரீதியாக மேலும் பல முயற்சிகள் தேவைப்படுகின்றன.

இத்தகைய முயற்சிகளில் வெளி நாடுகளில் வாழும் தமிழர்களும் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

நாம் தமிழின் வரலாற்றை அறியவும், தோத்திர பாடல்கள், இலக்கண ஆராய்ச்சி, சித்தாந்தக் கருத்துக்கள், புதிய விஞ்ஞான பாடங்களை தமிழ் மொழியில் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகியவற்றை நாம் ஆராய வேண்டும்.

உலகத்தமிழர்களுக்கிடையே சமய பற்று, சமுதாய சிந்தனை ஆகியவற்றை வளர்க்கவும், அகஸ்தியர், திருமூலர், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய பலர் போற்றிக் காப்பாற்றிய தமிழை சிறப்பாகப் பாதுகாக்கவும், வளர்க்கவும், அடுத்து வரும் சந்ததியினருக்கு இதை கொண்டு சேர்ப்பதற்கும் ஆகிய முயற்சிகளை அரசாங்கம் சாராத மற்ற அமைப்புகளும் செய்வது முக்கியமாகிறது.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர் போன்றோரெல்லாம் தமிழையும் தமிழ் சார்ந்த கலாச்சாரத்தையும் வளர்க்க எடுத்த முயற்சிகள் போன்று தமிழைப் படித்து,ஆராய்ச்சிசெய்து அதைவளர்க்கவும்பரப்பவும்முனைந்துசெயல்பட வேண்டும். இந்த வகையில் செயல்படும் பாடசாலைகள் தேவைப்படுகின்றன.

உத்தியோக காரணங்களுக்காக சில தலைமுறைகளுக்கு முன்னரோ, சமீபமாகவோ வெளி நாடுகளுக்கு சென்று தங்கியுள்ள தமிழர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுத்தும் வகையில் இந்த இணையதள மாநாடு வழி செய்ய வேண்டும்.

உலகத்தமிழர் அனைவரும் பக்தி, தர்ம சிந்தனை, கலாச்சார நோக்கங்களோடு, ஒன்றிணைந்து பாடல் பெற்ற தலங்கள் மற்றும் திவ்விய தேசங்கள் ஆகியவற்றை மேலும் சிறப்பாக வளர்த்து பலப்பல பக்தி வழி நிகழ்ச்சிகள் நடைபெற்று கிராமந்தோறும் நடை பெற்று வந்த வில்லிபுத்தூரார் பாரதம், கம்ப ராமாயணம் போன்றவை பரப்பப்பட வேண்டும்.

திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள் பரப்பிய பக்தி – தமிழ் கலந்த பிரச்சாரங்கள் போன்ற நிகழ்ச்சிகளும், ஸ்ரீ லங்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பல்வேறு அமைப்புகள் மூலமாக செயல்பட்ட எழுத்தறிவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

சித்தர்களாலும் அகஸ்தியர் போன்ற பல மாமுனிவர்களாலும் வளர்க்கப்பட்ட தமிழ் கலாச்சார மரபுகளை, எந்தெந்த பணியில் இருந்தாலும் தமது பங்களிப்பினை வழங்கி அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல அனைவரும் முயல வேண்டும்.

CCGS மூலமாக நடத்தப்படும் அகண்ட தமிழ் உலகம் என்ற இந்த மாநாடு வெற்றியடைய ஆசிகள்.

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர

குருதேவ் பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகளின்

ஆசியுரை

வாழ்க வையகம் என்று சொல்வதற்கிணங்க நமது தமிழ் மக்கள் உலகெங்கிலும் வாழ்ந்து வருகிறார்கள். எங்கெங்கெல்லாம் தமிழ் மக்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டினை பல அமைப்புகளின் மூலம் வளர்த்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பற்பல அமைப்புகள் *CCGS* நடத்தும் அகண்ட தமிழ் உலகம் என்ற இந்த மாநாட்டின் மூலம் ஒரு தளத்தில் இணைந்து தமிழ் மக்களைப் பற்றி சிந்திப்பது மிகவும் சிறப்பான செய்தி.

இப்படி நாம் அனைவரும் இணைந்து தமிழ் மக்களின் தேவைகளென்ன, அவர்களின் முன்னேற்றத்திற்கு எப்படி நாம் பணியாற்ற வேண்டும் என்பதை சேர்ந்து சிந்திப்பது நாமும், நமது சமுதாயமும், இந்த உலகமும் அமைதியுடனும், சீரும் சிறப்பாகவும், வாழ வழி ஏற்படுத்தித் தரும். இந்த சிறப்பான முயற்சி மேலும் மேலும் வளர வேண்டும்.

ஒற்றுமையின் மூலம் மட்டுமே உலகில் பெரிய சாதனைகளை செய்ய இயலும். நமது சிந்தனைகள் சிறப்பாக இருந்தாலும், பல்வேறு விதத்தில் இருந்தாலும்; ஒற்றுமை இல்லையெனில் முன்னேற்றம் இல்லை. ஒன்று பட்டு முயன்றால் சாதிக்க இயலாத பல அரிய விஷயங்களை மிக எளிதாக சாதிக்கலாம்.

CCGS நடத்தும் அகண்ட தமிழ் உலகம் என்ற மாநாட்டின் மூலமாக ஏற்படுத்தும் இந்த முயற்சியும் ஒற்றுமையும் நீடூழி வாழ எல்லோருக்கும் எனது அன்பும், ஆசிர்வாதங்களும்! வாழ்த்துக்களும்!

திருக்கயிலாய மரபு, மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம், தவத்திரு

சாந்தலிங்க மருதாசல அடிகளார்

ஆசியுரை

ஓம் நமச்சிவாய
எல்லாம் உடையான் குருவாகி ஈங்குளமது
அல்லல் அறுத்தான் என்றுஉந்தீபற
அவன் தாள் தொழுவாம் என்றுஉந்தீபற

CCGS அகண்ட தமிழ் உலக மாநாட்டின் நிர்வாகத்தினருக்கு என்னுடைய மனமார்ந்த ஆசிகள், வாழ்த்துக்கள்.

மிக நீண்டகாலமாக நம்முடைய தமிழ் மக்கள் உலகெங்கும் வாழ்ந்து இருந்திருக்கிறார்கள். நம்முடைய 3000, 4000 ஆண்டு தமிழ் இலக்கியங்களிலே கீழ் நாட்டை சேர்ந்தவர்களும் மேல் நாட்டை சேர்ந்தவர்களும் இங்கிருந்து அங்கு செல்வதும் அங்கிருந்து இங்கு வருவதும் நடைமுறையில் இருந்துள்ளது. நம்முடைய கொங்கு மண்டலத்தில் உள்ள பல இடங்களில் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உள்ள ரோம பேரரசினுடைய ஜூலியஸ் சீசர், அகஸ்திய சீசர் போன்றவர்களுடைய வணிகத்திற்கான நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இப்போது கல்வியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழர்கள் கற்று அதன் மூலமாக வெளிநாடுகளில் சென்று பணிபுரிந்து வருகிறார்கள். இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகெங்கும் பரவி வாழ்ந்து வருகிறார்கள்.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று சொல்வார்கள். பொருளாதாரத்தை தேடுவதற்கு மட்டும் செல்லாமல் அங்கு சென்று நம்முடைய சைவ சிந்தாந்தம், வழிபாட்டு திருக்கோயில்கள், திருமுறை பண்ணிசை போன்றவற்றை எல்லாம்

தமிழர்கள் தொடர்ந்து கடைபிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதை நாம் நினைவுகூர வேண்டும், பாராட்ட வேண்டும். அவர்களுடைய அந்த செயல் மேலும் மேலும் சிறக்க அதற்கு நாம் துணை நிற்க வேண்டும்.

அதே சமயம் உலகெங்கும் பரவி இருக்கக்கூடிய தமிழகத்தின் பல்வேறு வகையான இடதுசாரி சிந்தனைகள், இறை மறுப்புக் கொள்கைகள், நம்முடைய சமய மறுப்புக் கொள்கைகள், கறுப்பு புள்ளிகள் போன்றவை ஒரு பக்கம் இருந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட அதையும் தாண்டி நாம் செயல்பட வேண்டும்.

நம் சமயம் சார்ந்ததாக இருக்கக் கூடிய தமிழையும் சிவனையும் பிரிக்க முடியாது. சிவன் வேறு தமிழ் வேறல்ல, தமிழ் வேறு சிவன் வேறல்ல என்ற வகையில் இருப்பது நம்முடைய தமிழ். நம்முடைய சமுதாயத்தில் தமிழர்களை ஏமாற்றி பல்வேறு வகைகளில் மதம் மாற்றுகிறார்கள். அது தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகெங்கும் பரவலாக நடைபெறுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. அதற்கு அவர்கள் பயன்படுத்தும் முக்கிய காரணி பொருளாதாரம், ஏற்ற தாழ்வுகள் போன்றவை. இதையெல்லாம் கருத்தில்கொண்டு தமிழர்களுக்கு தேவையான பொருளாதார மேம்பாட்டிற்காக இருக்கக்கூடிய சிந்தனைகளை வழங்கி அவர்களை மேலும் மேலும் பொருளாதாரத்தில் வளர்ச்சிபெற துணை நிற்க வேண்டும்.

நம்முடைய சமயக் கொள்கைகள், தத்துவக் கொள்கைகள், வழிபாட்டுக் கூறுகள், பண்பாட்டுக் கூறுகள், நம்முடைய பாரம்பரியம் மிக்கதாக இருக்கக் கூடிய கலைகள் இவையெல்லாம் இணைந்து செயல்பட வேண்டும்.

CCGS என்ற அமைப்பு நடத்தும் இந்த அகண்ட தமிழ் உலகம் என்ற மாநாடு சிறப்பதற்கும், மேற்கொண்ட சிறப்புமிக்க செயல்களை செய்வதற்கும் எல்லா வகையிலும் நம்முடைய பேரூராதீனம் துணை நிற்கும். மாநாடு வெற்றிபெற எங்களுடைய ஆசிகள், வாழ்த்துக்கள்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்...

எல்லோரும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஓம் நமச்சிவாய !

JUSTICE M. KARPAGA VINAYAGAM
FORMER CHIEF JUSTICE OF JHARKHAND HIGH COURT &
FORMER CHAIRPERSON, APPELLATE TRIBUNAL FOR ELECTRICITY,
PETROLEUM & NATURAL GAS, NEW DELHI

SENIOR ADVOCATE
SUPREME COURT OF INDIA

Tel : 011- 41431410
Mobile : 09990324999

நாள் : 20–3–2021

அன்புடையீர்,

வணக்கம் வாழ்க !

தங்களின் 16–3–2021 தேதியிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றேன் !

"அகண்ட தமிழ் உலகம் என்ற சென்னை மையத்தின் 3வது மாநாட்டு மலரில் வெளியிடுவதற்காக எனது வாழ்த்து மடல் வேண்டி எழுதப்பட்ட அன்புக் கடிதம் அது. மிகுந்த மகிழ்ச்சி !

டில்லி மாநகரில் நான் மின்சாரத்துறை அகில இந்திய மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றியபோது 2008ஆம் ஆண்டில் இருந்து 2014ம் ஆண்டு வரை பல வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே நடைபெற்ற மின்சாரத்துறை சம்பந்தப்பட்ட பல மாநாடுகளில் கலந்து அங்கு உரையாற்றும் வாய்ப்புக்களைப் பெற்றேன்.

நான் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் அங்குள்ள தமிழ் சங்கங்கள் என்னை அழைத்து உரையாற்ற வைத்தார்கள்.

மலேசியா, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில், அங்கு வாழும் தமிழர்களை பார்க்கவும் அவர்களோடு நான் அளவளாவவும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களோடு அதிகநேரம் உரையாற்றி அவர்களின் வரவேற்பிலும் அன்பான உபசரிப்புகளிலும் மூழ்கித் திளைத்திருக்கிறேன்.

அங்கே இருந்தபோது தமிழ்நாட்டில் தமிழர்களோடு இருந்த ஆனந்தத்தை அனுபவித்தேன். குறிப்பாக லண்டனில் அமைந்த முருகன் கோவிலிலும் டோரண்டோவில் அமைந்துள்ள சுப்பிரமணியன் ஆலயத்திலும் உரையாற்றி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இருக்கிறேன்.

அவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தமிழையும், தமிழ் நாட்டையும், தமிழ் பண்பாட்டையும், தமிழ் கலாச்சாரத்தையும் மறக்காமல் இருக்கிறார்கள்.

என்னதான் கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் வெளிநாட்டு நாகரிகத்தில் மூழ்கி விடாதபடி தமிழ்நாட்டு பெற்றோர்கள் தங்கள் புதல்வர்களையும், புதல்விகளையும் தமிழ் பண்பாட்டின்படி, கலாச்சாரத்தின்படி வளர்க்கிறார்கள்! நான் வியந்த செய்தி அது.

Office - Cum - Residence :
D-4, 3rd Floor, Jangpura Extn,
New Delhi - 110014

E-mail : karpagavinayagam3@gmail.com

Address for Correspondence :
No. 6288, 2nd Floor, Flat No. 3, Mathura Road,
Jangpura, New Delhi - 110014

JUSTICE M. KARPAGA VINAYAGAM
FORMER CHIEF JUSTICE OF JHARKHAND HIGH COURT &
FORMER CHAIRPERSON, APPELLATE TRIBUNAL FOR ELECTRICITY,
PETROLEUM & NATURAL GAS, NEW DELHI

SENIOR ADVOCATE
SUPREME COURT OF INDIA

Tel : 011- 41431410
Mobile : 09990324999

தமிழர்களுக்கு நான்கு வகையான பக்தி அவசியம்

1. தெய்வ பக்தி 2. தேசபக்தி 3. குரு பக்தி 4. தமிழ் பக்தி

இந்த நான்கும் இருந்தால் வாழ்க்கையில் தமிழர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.

நான் வெளிநாடுகளுக்குச் சென்ற போது அங்கு வாழும் தமிழர்கள் உண்மையான வர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும், பண்புகொண்டவர்களாகவும் இருப்பதைப் பார்த்தபோது அவர்கள் தமிழ்ப்பண்பையும்,பாரம்பரியத்தையும் காத்து,நமது வேர்களை மறக்காமல் தாங்கள் வசிக்கும் இடத்தின் சூழ்நிலைகளைசமாளித்து தமிழையும் தமிழ் கலாச்சாரத்தையும், தமிழ் பண்பாட்டையும் பேணி வருவதைக் கண்டபோது என் மனம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது.

இன்றைய தேவை இன்றைய தமிழ் தலைமுறையினை அவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களை ஒருசேர கூட்டி நமது வேர்களையும் நமது அடையாளத்தையும் அவர்களுக்கு உணர்த்தும் வகையில் நமது மொழியின் பெருமை பற்றியும் நமது மரபுகளின் மாண்பை பற்றியும் அவர்களிடம் பேசி அவர்களையும் பேச வைத்து அந்த தமிழ் சந்ததியினருக்கு நமது வழிகாட்டு நெறிமுறைகளை அறிவுறுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் !

அந்த வகையில் அகண்ட தமிழ் உலகின் மூன்றாவது மாநாடு சிறப்பான முறையில் நடைபெறவிருப்பது உலகத் தமிழர்களுக்கு எல்லாம் உவகை தரும் ஒப்பற்ற செய்தி.

நடைபெறவிருக்கும் தமிழ் மையத்தின் மூன்றாம் மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெறவும் உலகத் தமிழர்களின் உயர்ந்த நோக்கம் நிறைவேறும் வகையில் வெற்றிகரமாக நடைபெறவும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள் !

வெளியிடவிருக்கும் விழா மலர் உலகம் முழுவதும் தமிழ் மணம் பரப்பட்டும்! தமிழின் பெருமை உலகனைத்தும் அறியும் வகையில் அமையட்டும்.

ஒன்றுகூடுவோம் ! ஒன்றுபடுவோம் ! உயர்வோம் ! உலகை உயர்த்துவோம் !

வணக்கம் நன்றி.

Office - Cum - Residence :
D-4, 3rd Floor, Jangpura Extn,
New Delhi - 110014

E-mail : karpagavinayagam3@gmail.com

Address for Correspondence :
No. 6288, 2nd Floor, Flat No. 3, Mathura Road,
Jangpura, New Delhi - 110014

பொருளடக்கம்

தலைப்புகள்	பக்க எண்
கடவுள் வாழ்த்து	ii
தமிழ்த் தாய் வாழ்த்து	iii
வாழ்த்து மடல்கள்	iv
1. ஆசிரியர் குழு கடிதம்	1
2. INTRODUCTION TO CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES	7
3. அகண்ட தமிழ் உலகம் (அறிமுகம்)	18
4. அகண்ட தமிழ் உலகம் - கவிதைகள்	22
5. தமிழர் மொழியாம் தமிழ் மொழியை வளர்த்தல்	26
6. தமிழரின் மண் மருத்துவம்	29
7. தமிழர் விவசாயம்	33
8. தமிழரின் தொல் இசைக் கருவிகள்	37
9. தமிழர் சிற்பக்கலை	42
10. மன அமைதியும் நம் மகிழ்ச்சியும்	45
11. தமிழர் பாரம்பரிய கலைகள்	48
12. Silambam as Mother of Tamil Martial Arts	53
13. தெய்வ சக்தியை வளர்த்து கொள்ளுதல்	60
14. தமிழ் ஈன்றெடுத்த சித்தர்களின் வரலாறு	62
15. தமிழ் யோகி திருமூலரின் எண் நிலை யோகம்	64
16. மலேசியாவில் தமிழ்க்கல்வி	67
17. மன அழுத்தத்தை வெற்றி கொள்ளுதல்	70

வ.எண்	தலைப்புகள்	பக்க எண்

18. இன்றும் வாழ்ந்து வரும் சோழர் வாரிசுகள் தொடரும் தமிழர் பாரம்பரியம்........74
19. திருக்குறள் காட்டும் சைவ நெறி........83
20. தமிழர் உணவியலும் பருவங்களும்........86
21. மலேசியாவில் இந்து சமயக்கல்வி........89
22. தமிழரின் எளிய வீட்டு வைத்தியங்கள்........92
23. நான் யார்? என்னுடைய அடையாளங்கள் எவை? 95
24. தமிழர்கள் இந்து என்பதில் பெருமை கொள்வோம் 99
25. ஞான யோகம்........108
26. யோகக் கலை ஓர் அறிமுகம்........116
27. தமிழுக்கு அமுதென்று பேர்........118
28. ஆத்திசூடி........121
29. ஆய கலைகள் 64 125
30. புறநானூற்றில் பாரததேசம்........131
31. மூன்றாவது அகண்ட தமிழ் உலக மாநாட்டின் தீர்மானங்கள்........148
32. Our 3rd Conference PHOTO GALLERY........149

ஓம்

பேரன்புடையீர், வணக்கம் !

அகண்ட தமிழ் உலகத்தின் மூன்றாவது இணையதள மாநாட்டுக்கு உங்களை வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறோம்.

சென்னையை மையமாகக் கொண்ட *Chennai Centre for Global Studies (CCGS)* ஒரு சிந்தனையாளர் மையம். *CCGS* அமைப்பு உலக தமிழர்களுக்கிடையில் பரஸ்பர அன்பு, ஆதரவு, கலாச்சார விழுமியங்கள், மற்றும் அறிவுசார்ந்த பரிமாற்றத்திற்கு ஒரு தளமாக செயல்பட்டு வருகிறது. தேசிய அளவிலும் உலக அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களைப் பற்றிய கருத்தாக்கங்களை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கம்.

இந்த மாபெரும் முயற்சியின் ஒரு பகுதியாக *CCGS* இரண்டு உலக மாநாடுகளை நடத்தியுள்ளது. *2013* ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அகண்ட தமிழ் உலகம் *– 1* ல் *18* நாடுகளை சேர்ந்த தமிழர்கள் பங்குபெற்றனர். *2017* ஆம் ஆண்டில் வேலூரில் நடைபெற்ற அகண்ட தமிழ் உலகம் *– 2* ல் *30* நாடுகளை சேர்ந்த தமிழ் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

2021, மார்ச் *26, 27 & 28* ஆகிய தேதிகளில் “அகண்ட தமிழ் உலகம்- *3”* ஒரு இணைய வழி மாநாடாக நடத்தப்பட உள்ளது. இதில் *45* நாடுகளைச் சேர்ந்த சுமார் *2,000* ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

CCGS இந்த உலகளாவிய கருத்தரங்கினை ஏற்பாடு செய்வதன் முக்கியமான நோக்கங்களில் சில:

- ✓ உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள அனைத்து தமிழ் மக்கள் மற்றும் அமைப்புகள் இணைந்து செயல்பட ஏற்றதொரு தளத்தை உருவாக்குதல்.
- ✓ தமிழ்க் கலாச்சாரத்தின் அம்சங்களையும், அது சார்ந்த உயரிய பல விழுமியங்களையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வழிமுறைகளைக் கண்டறிதல்.
- ✓ உலக தமிழ் சமூகத்தின் வாழ்வியலை அறிதல் மற்றும் தமிழ் சமூகத்தின் மீது வீசப்படும் சவால்களை திறம்பட கையாளுதல்.
- ✓ அந்தந்த நாடுகளிலும் உள்ள பிளவு சக்திகளிடமிருந்து தமிழ் சமுதாயம், கலாச்சாரம் மற்றும் சமயத்திற்கு வரும் சவால்களை திறம்பட எதிர்கொள்ளுதல்.

இந்தியர்கள் உலகம் முழுதிலும் தடம் பதித்திருக்கின்றனர். உலக அளவில் எத்தனையோ நாடுகளில் இந்தியர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் யாரும் தங்கள் இந்திய வேர்களை மறக்கவில்லை. எந்த நாட்டில் வாழ்ந்து வந்தாலும் இந்தியா அவர்களுக்குப் புண்ணிய பூமியாக இருந்து வருகிறது. இத்தகைய ஒரு சகாப்தத்தில், உலகெங்கிலும் வாழும் தமிழ் சமுதாயத்தின் சிறப்பும் எண்ணிப் பாராட்டத் தக்கது. தாம் குடியேறிய மற்றும் பணிபுரியும் நாடுகளுக்கு பல்வேறு வகைகளில் தமது சீரிய பங்களிப்பினை வழங்கி வரும் தமிழ் மண்ணின் மைந்தர்கள் பலரது அரிய பணிகளும் சாதனைகளும் இந்த உலகம் போற்றும் அளவிலும், தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் அமைந்துள்ளன.

ஐந்தாம் நூற்றாண்டின் போதி தர்மரும், எட்டாம் நூற்றாண்டின் போதிசேனரும் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் செய்த மகத்தான பணிகள் அந்த நாடுகளின் வரலாற்றை மாற்றி அமைத்தன. ஃபிஜித்தீவுகளில் சாது குப்புஸ்வாமியும், இலங்கையில் சிவ யோகஸ்வாமியும், ஸ்வாமி விபுலானந்தரும் பெரும் ஆன்மீகப் புரட்சி ஏற்படுத்தியவர்கள். தில்லையாடி வள்ளியம்மை (தென்னாப்பிரிக்கா). வி.டி.சம்பந்தன் (மலேஷியா). பண்டார வன்னியன் (ஸ்ரீலங்கா) முதலிய ஏராளமான தலைவர்கள் சுதந்திரப் போராட்டங்களில் முதன்மைப் பங்கு வகித்தவர்கள்.

தற்காலத்தின் மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், மொரீஷியஸ், இந்தோனேஷியா, வளைகுடா நாடுகள், ரீயூனியன், தென்னாப்பிரிக்கா, சியாஷெல்ஸ், ஃபிஜி, கயானா, ட்ரினிடாட் & டொபாகோ, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா முதலிய பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். எவ்வளவோ கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும் அவர்கள் தங்கள் பண்பாட்டைக் காப்பாற்றி வந்துள்ளனர். தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் திருக்கோயில்கள் உண்டு. புனித நூல்கள் ஓதும் வழக்கம் உண்டு. ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், வளைகுடா நாடுகள் முதலியவற்றில் வாழும் தமிழர்கள் தமிழ் பேசி வருகின்றனர். இதர நாடுகளில் வாழும் தமிழர்களின் பிள்ளைகளுக்குத் தமிழ் சொல்லிக்கொடுக்கும் வகுப்புகள் முறையாக நடைபெற்று வருகின்றது. தமிழர்களின் தனி அடையாளங்களாகத் திகழும் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் முதலியவற்றைப் போதிக்கும் வகுப்புகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

பல்வேறு நாடுகளில் தமிழர்கள் தலைமைப் பொறுப்பில் இருந்து வருகிறார்கள். எஸ்ஆர் நாதன் சிங்கப்பூரின் அதிபராக இருந்தவர். அந்நாட்டின் உதவிப் பிரதமராக இருந்த தர்மக் ஷண்முக ரத்தினம் ஒரு தமிழரே. மோசசு நாகமுத்து கயானாவின் பிரதமராக இருந்தார். மேலும், மலேஷியாவின் ஆனந்த கிருஷ்ணன், அமெரிக்காவின் ராம் ஸ்ரீராம், தமிழகத்தின் சிவ் நாடார் ஆகியோர் உலக அளவில் அறியப்பட்ட வியாபார ஜாம்பவான்கள். இந்திரா நூயி, சுந்தர் பிச்சை, ரகுராம் ராஜன், ராமதுரை என்று உலக அளவில் அறியப்பட்ட நிர்வாகிகளின் பட்டியல் நீளுகிறது. உலகில் தமிழர்கள் தடம் பதிக்காத துறை இல்லை என்றே சொல்லலாம்.

டாக்டர் சௌமியா சுவாமிநாதன் - உலக சுகாதார அமைப்பின் தற்போதைய துணை இயக்குநர் ஜெனரல், கைலாசவடிவு சிவன் - தலைவர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஸ்ரோ), நூறு வயதைத் தாண்டிய இந்தியாவின் மிக மூத்த யோகா பயிற்சியாளர் பத்மஸ்ரீ *(2018)* நானம்மாள், தென்னாப்பிரிக்க ஜூரிஸ்ட் டாக்டர் நவநீதம் பிள்ளை ஆகியோரது சிறப்புக்கள் தமிழர்களை பெருமை கொள்ளச் செய்கின்றன.

ஒருபுறம், தமிழர்களின் பங்களிப்பு உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது. எண்ணற்ற நாடுகளின் சுதந்திரத்திலும் முன்னேற்றத்திலும் தமிழர்கள் முக்கியப் பங்கு ஆற்றி உள்ளனர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் முன்னெடுத்து நடத்திய இந்திய சுதந்திர போராட்டத்தில் அப்போதைய பர்மா வாழ் தமிழர்கள் தன்னலமற்ற தியாகங்கள் பல செய்து அளப்பரும் பங்காற்றினர். தமிழர்களின் நேர்மையும் கடின உழைப்பும், கணக்கற்ற தியாகங்களும் ஒவ்வோர் இந்தியனையும் பெருமை கொள்ளச் செய்பவை.

அதே நேரத்தில், வெளிநாடுவாழ் தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டி உள்ளது. உதாரணமாக, தென்னாப்பிரிக்கா, மலேசியா முதலிய நாடுகளில் நடைபெற்றுவரும் மதமாற்றங்கள் அவர்களைத் தங்கள் பாரம்பரியத்தில் இருந்து அன்னியப்படுத்தி வருகின்றன. வறுமை, கல்வியின்மை, போதைப்பழக்கம் முதலியவை மியான்மரிலும் ஃபிஜியிலும் முக்கியப் பிரச்சினைகளாகத் திகழ்கின்றன. தாய்மொழியை மறந்துவிடும் அபாயம் பெரும்பாலான நாடுகளில் காணப்படுகிறது.

எனினும், இவற்றை ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளும் முயற்சிகளுக்கும் பஞ்சமில்லை. பண்டிகைகள், கலாசார நிகழ்வுகள், சிறுவர்களுக்கான தாய்மொழி, இசை, நாட்டிய வகுப்புகள் முதலியவை பெருமளவில் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் உள்ள சமுதாய, கலாசார, ஆன்மிக அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றும் முயற்சிகளும் வலுப்பெற்று வருகின்றன.

இந்திய அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் கலாசார மையங்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இவை வெளிநாடுவாழ் இந்தியர்களை அவர்களின் பண்பாட்டு வேர்களுடன் பிணைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

பிரவாசி பாரதிய திவஸ் பொருளாதார ரீதியில் அவர்களை இந்தியாவுடன் நன்கு பிணைத்து வருகிறது. பிற நாடுகளில் இந்தியா முதலீடு செய்வதிலும், இந்தியாவில் பிறநாடுகளுடன் முதலீடு செய்வதிலும் இந்த நிகழ்வு ஒரு பாலம் போன்று செயல்படுகிறது. இதன்மூலம் இந்தியா பிற நாடுகளுடன் பொருளாதார ரீதியாக ஒருங்கிணைந்து செயல்பட முடிகிறது. அறிவியல், தொழில்நுட்பம், இதர நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகள் முதலியவற்றில் தற்கால இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் வியக்கத்தக்கது. சந்திராயன், மங்கள்யான், அக்னி – 5, அரிஹந்த் முதலியவை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் ஒவ்வோர் இந்தியனையும் பெருமையடையச் செய்திருக்கின்றன. ஆட்டோமொபைல் தொழிலின் மையமாகத் தமிழ்நாடு உருவெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு *(AI)*, தரவு அறிவியல் *(Data Science)*, புள்ளியியல் அறிவியல் *(Statistical Science)* ஆகிய துறைகளுக்கு தமிழர்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

அகண்ட தமிழ் உலகத்தின் மூன்றாவது மாநாடு கொரானா சூழ்நிலையால் இணையதளம் மூலமாகவே நடத்தப்பட இருக்கிறது. உலகளாவிய அளவில் தமிழர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க வசதியாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு இந்த மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள். குறிப்பாக, ஸ்ரீலங்கா, மியான்மர், மலேஷியா, சிங்கப்பூர், மொரீஷியஸ், ஃபிஜி, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, ரீயூனியன் தீவு, அமெரிக்கா, பிரிட்டன், அரபு நாடுகள் ஆகிய

இடங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள். இவர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள். தமிழ்மீதும், தமிழகத்தின்மீதும், இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பதிலும் மிகுந்த ஆர்வம் உடையவர்கள். இவர்களை நேரில் சந்திப்பதற்காக குளோபல் ஸ்டடீஸ் அமைப்பாளர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து வருகிறார்கள்.

வெளிநாடுவாழ் தமிழர்கள் தவிர, இந்தியாவில் இருந்து பல முன்னணித் தலைவர்களும், மந்திரிகளும், அரசு அதிகாரிகளும் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

பல்வேறு நாடுகளில் தமிழர்களின் சாதனைகள், அவர்கள் சந்தித்துவரும் சவால்கள், இடையூறுகள், அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் முதலியவை குறித்து இந்த மாநாட்டில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற உள்ளன. இது பல்வேறு மட்டங்களில் செயல்திட்டங்கள் வகுக்க ஏதுவாய் இருக்கும். இந்திய அரசு நடத்திவரும் கலாசார மையங்கள், பிரவாசி பாரதிய திவஸ் முதலிய செயல்பாடுகளின் வெற்றியைப் போல இந்த மாநாடும் ஆக்கபூர்வமான பலன்களைக் கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இந்த நிகழ்வில் தாங்கள் பங்கேற்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்த மாநாட்டில் தாங்கள் முன்வைக்கும் கருத்துகள் ஆக்கபூர்வமான விவாதங்களுக்கு வழிவகுக்கும். எனவே, இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம். உங்களது வருகையை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

அன்புடன்

ஆசிரியர் குழு

INTRODUCTION TO

CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES (CCGS)

3-E, I Block Ceebros Shyamala Gardens
No. : 136, Arcot Road, Saligramam, Chennai – 600093
Email : chennaicgs2014@gmail.com
www.chennaicgs.com

Chennai Centre for Global Studies (CCGS) is forum for public debate and evolution of public opinion on various issues that are of concern to the nation. A group of intellectuals located at Chennai commenced their initiative and mission way back in 2008 under the forum Indian Centre for South Asian Studies.

The high decibel political debate in recent times that preceded change in political leadership at the helm has created enormous expectations in the body polity. Bharath is once again at the proverbial crossroads of history. In the context of its trials and tribulations in the recent decades and of course with quite a good number of triumphs, it is cruising through challenging period indeed. In the eyes of comity of nations, India has arrived.

The current scenario features a multitude of factors :

- ✓ A vibrant free enterprise that had been defying socialist model and proving its worth and whose expectations have earned political legitimacy; no one feels guilt tripped over making money and more and more of it.
- ✓ demographic dividend resulting from ever growing younger population reaching higher levels of literacy and exposure
- ✓ the imminent political cost of clinging to failed economic models, chiefly the risk of ever-growing unemployment of teeming population
- ✓ technological developments across the globe and the ease at which it dispersed through a vibrant globalized market and the acclaimed track record of India in imbibing these
- ✓ creation of global level institutions that are considered necessary for smooth transactions between nations.
- ✓ acute level of sensitivity towards deprivation of benefits to sections of the society and vibrant activism in fighting for remedy.

What is engaging the Intelligentia is an acute concern about how well prepared we are and how capable the present institutions are in meeting the challenges and achieving solutions. The point of convergence among different opinions is that India needs a better economy that would go a long way in fulfilling the wants of its younger population.

The Indians across the globe and the Tamil diaspora as a segment impacts and is impacted by the domestic developments. It is a relationship that reinforces mutually and achieves a grand synergy that has been demonstrated through the success of Indians at a pan global level.

It is against the above background that a group of intellectuals conceived the idea of creating a forum which will provide a meeting ground of thoughts,

ideas, opinions and action plans between our citizens engaged in economic and other affairs in different walks of life.

Chennai Centre for Global Studies endeavors to reach out to the intelligentia and facilitate each and every interested person to contribute their best of efforts towards realizing the nation’s potential and leave a better India for next generation.

Citizens who are keen to be part of this movement are welcome to join us.

To sum up the major events, symposiums were organized as follows :

(1) 2008 on Deepening Political Crisis in Sri Lanka

(2) 2009 on Overseas Tamils Experience and Expectations

(3) 2010 on Emerging trends in Sri Lanka [I dont have any record of this]

(4) 2011 on action plan for global level Karyakarthas

(5) 2013 - Akanda Tamil Ulagam – 1 (AKHTU-1)

(6) 2014, December – Stronger Economy for Resurgent India

(7) 2015, June - Malaysian Tamils-A overview

(8) 2015, November - Make in India - (A Meeting of the nationalist minded business leaders)

(9) 2017, January - AKHANDA TAMIL ULAGAM – 2ND CONFERENCE

(10) 2017, March - Tamil Diaspora – Myth and Reality

(11) 2018, July - Making India Globally Strong Challenges - Opportunities - Our Role

(12) 2018, September - TAMILS IN REUNION: LOSING CULTURAL IDENTITY

(13) 2018, December – 2 days Camp

(14) 2019, June - SOUTHEAST ASIA’S CULTURAL INDEBTEDNESS TO INDIA

Chennai Centre for Global Studies (CCGS) evolved into this new Avatar to pursue their objectives. CCGS is a trust registered (bearing No: 352/2016/BK4) whose founding trustees are two IT successful professionals namely, Shri.R. Sadagopan and Shri.N.S. Ragunathan.

CCGS takes its mission forward with a team of intellectuals dedicated to nationalism.

To mention programs that CCGS organized.

1. On 13-Dec-2014 - "Stronger Economy for Resurgent India" – a meet of business leaders and intellectuals with vast experience and expertise on global affairs

CCGS commenced its activities with the program of Business Leaders Meet on Saturday the 13th day of December 2014. The theme of the meet was "Global Presence of Resurgent India".

Presidential address was delivered by Sri.N.S. Ragunathan a successful business leader and social activist.

The meet featured a panel discussion steered by the following eminent persons-

- Dr.S. Narayanan Former Economic Advisor to the PM, Former Secretary to Department of Revenue on the topic "India's Economic Diplomacy"

- Sri.D.S. Rajan, Former Director, Cabinet Secretariat, New Delhi, Distinguished Fellow, Chennai Centre for China Studies on the topic "Sino Indian Relations, Challenges Ahead".

- Prof. V. Suryanarayanan Former Member, National Security Advisory Board and former director Centre for South and South East Asian Studies on the topic "India's Neighborhood Diplomacy".

2. On 22-Nov-2015 – "Make in India" – a meet addressed by intellectuals who were in government service and other professional

CCGS held a meet on the theme "Make in India" on 22nd November 2015. This meet was well attended and responded by participants who were from different fields. The program featured speeches by –

- on the topic "Make in India – New Initiatives" by Mr.M.R. Sivaraman former Union Revenue Secretary, former ED of IMF and Advisor to UN on countering terrorism. He dwelt at length on the opportunities and challenges that India needs to handle to make this mission successful.

- On the topic "The Way Forward" by Shri. Arunkumar Davey, Founder of Mind Matters, Corporate consultant and Industrial Economist. He elaborated on the approaches and strategies that are needed for this mission.

- Special address was delivered by Shri.Ravikumar Coordinator of Sewa International to sum up the track record of success that Indians had achieved since time immemorial and how this is sustained as evidenced by the success stories of Indians in various fields across the globe. His address carried the message "We made it".

3. 2015, June - Malaysian Tamils-A overview in Hrawat Palace Mylapore.

The program has started with Tamil Thai Vazhthu and Sri.Ashokji has given the Welcome address.

Our Sri. Ganesh Parasuram has delivered the speech with Visual presentation. He has covered about Malaysian country history and our Tamil people's past history and current situation. His presentation is well detailed and he covered economics, religious freedom, politics and social status. He highlighted about our Tamil people stateless conditions and economic situations

4. 2017, January - AKHANDA TAMIL ULAGAM – 2ND CONFERENCE

CCGS held a meet of Tamils from across the globe representing the Diaspora. Titled as Akanda Tamil Ulagam – 2, (AKHU-2) at Golden Temple Sripuram (near Vellore) on 10th (Tuesday) and 11th (Wednesday) of January 2017.

120 delegates from 22 countries including 15 CCGS volunteers participated in the conference. The theme of the conference was the ancient Tamil universal adage “YADUM OORE YAVARUM KELIR” (to us all towns are one, all men our kin), which is Tamil equivalent of VASUDHAIVA KUTUMBAKAM, (World is one Family).

The conference started with delegates visiting the Golden Temple for a special puja on 9th Jan evening. The conference was inaugurated on 10th Jan morning after Gho Puja and prayers. Dr.G. Viswanathan Chancellor of Vellore Institute of Technology delivered the Key Note Address. Shakti Amma’s blessings were conveyed to the delegates by Shri. Suresh Babu, Director of Sripuram. Shri.Rajesh Sukul as representative of Maha Rajguru of Thailand, conveyed the blessings of Rajguru. Prof. Dr Vannia Rajan delivered the welcome message and Ravi Kumar explained the purpose of the conference.

Prof. Suryanarayan set the tone of the conference by giving an Overview of the Overseas Tamils. Shri. Su.Viswanathan, Shri. Sthanumalayan and Shri.Shyam Parande delivered special talks on Economic Principles in Thiru-Kural and Bhagwad Gita, Eternal Values for a dynamic society and Indian concept of Sewa. Dr. Shankar, Medical Director, Agarwal Eye Hospitals and Dr.Venkat Subbu of Darling Hotel Vellore & President, Tamilnadu Hotel Association also addressed the delegates

The meet featured a Special Lectures and Group discussion as followed.

Special Lectures

➢ Upholding Tamil Language and Culture	La Ganesan
➢ Stateless People in Tamil Diaspora	Prof Suryanarayanan

➢ Concept of Sewa in Indian Tradition	Shyam Parande
➢ Eternal Values for Dynamic Society	Ko Sthanumalayan
➢ Economic Concepts in Kural and Gita	Su Viswanathan
➢ Need for Integration within Tamil Diaspora	Dr. Ramasamy

Group Discussion

- Nurturing Future Generations
- Problems faced by Indian Diaspora
- Economic conditions of Tamils in Diaspora
- Sewa activitis in Tamil Diaspora

Note 1: List of Countries participated - 22
Australia, Bharat, Ethiopia, Fiji, France, French Re-Union Islands, Hong Kong, Indonesia, Kenya, Kuwait, Malaysia, Mauritius, Myanmar, New Zealand, Oman, Singapore, South Africa, Sri Lanka, Tanzania, Thailand, UAE, USA,

Note 2: List of Sangha Adhikaris Attended - 12 Sarvashri Prof Dr Vannia Rajan ji, Rajendran, Sthanumalayan, Sundar Lakshmanan, Samskrit Srinivasan, Shyam Parande, Sambamurthy, PM Ravi Kumar, Su Viswanathan, Vivekananthan (Prant Vidyarthi Pramukh), Gopi ji of Bharatiya Kisan Sangh and Rajasekhar Sewa Bharati.

5. 2017, March - Tamil Diaspora – Myth and Reality – 17.03.2017 @ New Woodlands Hotel, Dr Radhakrishnan Salai, Chennai

Book release by

The book succinctly describes the challenges facing the Tamil Diaspora today. It focuses attention on the policies of the Government of India and the Government of Tamil Nadu towards them and what steps need to be taken so that the Tamil Diaspora could retain its Tamil identity, while at the same time, remain loyal citizens of the countries in which they live

6. Making India Globally Strong Challenges - Opportunities - Our Role on 23.07.2018 @ Quality Inn, Sabari, Chennai

Speakers:

1. Shri. M.S. Sundar Rajan – Ex- Chairman, Indian Bank
2. Shri. Jeyakumar – Vigyan Bharathi (Intl. Science Forum)
3. Shri. Ravi Kumar – International Joint Co-ordinator, SEWA INTL.

The program commenced with the prayer by Shri. Ganpathy followed by the dance defining the patriotism.

The welcome address was presented by Shri. Dhandapani welcomed the dignitaries.

Speech by the Dignitaries

1. Shri Sadagopan

Briefed about the CCGS, In 2008 it was Indian center for south Asian Studies changed now globalized to Chennai Centre For Global Studies. Highlighted the constraint of Tamil People from Sri Lanka, Malaysian. Problems faced by China was discussed, conference named "Aganda Tamil Ulagam "held at Vellore. "Seva International" helps people of Srilanka for education.

2. Shri. Ravi Kumar

Spoke about Tamil Malaysians people at Jail and reason for poisoned. Highlighted Women Tamil Central Minister. Importance of Indian Youth, Education and Indian Students. Ratings of the Universities all over the World. Innovations done and introduced by Indians. Distinctions among the Countries. Indian peace keeping Pupils Empowerment of women and Children compared among other Countries. Foreigners joins the Indian Spirituals. Culture and Spiritual aspect.

3. Shri. M.S. Sundar Rajan

Enlightened Being Indian. Working population of Indians and envy of neighbors. Discussed on Average age in forthcoming Years, near future. Drawback of Engineers job Opportunity/seekers. Challenges faced by Indian Engineering Students. Banking / computer technology. Make in India, Skill development, and other technology developments. Changes introduced in NCERT and Tamilnadu state Syllabus. Challenges faced by Indian Unemployment. Enhancing student's positivity and induction to Management possibility. Ended by saying "Knowledge is not to store but to share".

4. Shri. Jeyakumar

Congratulated the crew of Chennai Centre of Global Studies for their initiatives. . Challenges faced while getting admission faced. Highlighted the overall aspect of challenge faced by the Indians.

7. 2018, September - TAMILS IN REUNION: LOSING CULTURAL IDENTITY

Dr. Kalai Selvam Shanmugam, President, Tamil Sangham, Reunion was in Chennai recently. The Chennai Centre for Global Studies arranged an informal get together with those involved in the study and research on Tamil Diaspora. In his candid and frank presentation, Dr. Shanmugam described the nature of their migration, the trials and tribulations they underwent and how, despite heavy odds, the Tamil community has made a mark in the social, economic and political life of the county. In order to understand their problems, it is necessary to highlight certain realities about Reunion.

Dr Shanmugam's lucid presentation was followed by a lively discussion. On the specific question of different religious practices co-existing in Reunion, it was felt that any attempt to project one form of worship to be superior to another form will create divisions within the Tamil Society.

The audience felt deeply pained when Dr Shamugam pointed out that some Gurukkals (Temple priests) brought from Tamil Nadu were more interested in making money than in spreading the gospels of Hinduism. The Visva Hindu Parishad must immediately take corrective steps in this matter.

Dr. Shanmugam highlighted and contrasted the policy being pursued by China in strengthening Chinese identity among the miniscule Chinese population. China, which has good relations with France, has opened Confucian centers in Reunion; these Centers teach Chinese language to the local Chinese and also encourage their regular visits to China.

Dr. Shanmugam suggested that it will be a good idea if the Government of India provides facilities for the Tamils in Reunion to acquire Overseas Indian Citizenship. Dr. Shanmugam has acquired Overseas Citizenship of India (OCI) cards. It was easy for him because he migrated to Reunion after independence; he had also the necessary documentation about date and place of birth etc.

8. 2019, June - SOUTHEAST ASIA'S CULTURAL INDEBTEDNESS TO INDIA

On June 25, 2019 Chennai witnessed a spectacular and memorable meeting. The meeting was organized by Andal Bakthargal Peravai and Chennai Centre for Global Studies. The Guest of Honour was Phra Maha Raja Guru Bidh Sri Visudhigun, the religious adviser and preceptor to the King of Thailand. The Rajguru performs the religious rites associated with coronation as a result of which the King acquires divinity and gets the title of Rama. The entourage of Rajguru consisted of four people, and they were dressed in white dhoti worn up to the knees, a white buttoned up coat and white shoes. What was striking about the entourage was their well- oiled kudumi (tuft) which proves that their ancestors hailed from Tamil Nadu. There are 14 Brahmins today in Thailand, they are highly respected and they keep alive the Hindu traditions. In fact, they are unofficial Indian ambassadors in Thailand.

அகண்ட தமிழ் உலகம்

உலகத் தமிழர் 3வது மாநாட்டைப் பற்றிய சிறிய விளக்கம்

அறிமுகம்

உலகளாவிய பார்வைக்கான சென்னை மையம் (Chennai Centre for Global Studies) அகண்ட தமிழ் உலகின் மூன்றாவது ஆண்டு மாநாட்டிற்கு தங்களை அழைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறது. இந்த மாநாட்டில் பிரபல நபர்கள், தொழில் துறையினர், இளைஞர்கள் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்ள உலகின் அனைத்து இடங்களில் இருந்தும் பங்கேற்கின்றனர்.

தமிழர்கள் உலகளாவிப் பரவி இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், பிஜி, கயானா சூரினாம் வளைகுடா நாடுகள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து அமெரிக்கா கனடா இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கிறார்கள்.

இவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக குடிபெயர்ந்தார்கள். அவர்களில் பலர் அந்தந்த நாடுகளின் கலாச்சாரம் வாழ்வியல் சார்ந்து நிரந்தர அங்கத்தினராக வாழ்ந்து வருகின்றனர். அதேசமயம் நமது வேர்களை மறக்காமல் தாங்கள் வசிக்கும் இடத்தில் சூழ்நிலைகளை சமாளித்து தங்கள் தாய்மொழியையும் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பேணி வருகின்றனர்.

எனினும் இன்றைய தலைமுறையினர் பல்வேறு சமுதாய கலாச்சார அழுத்தத்திற்கு உட்பட்டு வேர்களை மறந்து தங்களது

தமிழ் அடையாளத்தை இழந்து வருகிறார்கள். அவர்களிடையே நம் பெருமைமிகு தமிழ் கலாச்சாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மேற்கண்ட பணியை முன்னெடுக்கும் முகமாக உலகளவில் பரந்துபட்ட தமிழர்களை ஒன்று கூட்டி அவர்கள் உணரும் விதமாக நமது மொழி கலாச்சாரம் மரபைக் குறித்து பேசியும் அவர்கள் சந்திக்கும் சவால்கள் சூழ்நிலைகள் வாய்ப்புகள் அவற்றை பயன் கொள்ளும் வழிவகைகள் குறித்தும் ஆராய்ந்து வரும் சந்ததியினருக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க CCGS முயல்கிறது.

குறிக்கோள்கள்

- வேர்களுடன் தொடர்பை இழந்த தளிர்களான தமிழர்கள் தாங்கள் இழந்த மொழி சமயம் கலாச்சார மரபுகளின் அருமை பெருமைகளை உணரச் செய்ய வேண்டும்.

- பாரம்பரியம் மிக்க தமிழ் மொழி, சாத்வீகம் நிறைந்த நம் இந்து சமயம் நமது பண்பாட்டின் அடிப்படை அவற்றைக் கற்பித்து இளம்தலைமுறையினரை நல்வழிப்படுத்தி வீட்டிலும் சமூகத்திலும் அந்தப் பண்பாடு பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்.

- மதம் மாற்றங்களுக்கான காரணங்களையும் தமிழர்கள் தாங்கள் சமூகத்திற்கு உள்ளிருந்தும் & வெளியிலிருந்தும் தற்சமயத்தில் சந்திக்கும் பிரச்சனைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்காலத்தில் வரக்கூடுமான சவால்களையும் இனங்காண வேண்டும் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை கண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அணுகுமுறைகள்

- அந்தந்த நாட்டில் உள்ள நம் இனத் தலைவர்களையும், அறிஞர்களையும் ஒன்று கூட்டி கலந்துரையாடி சவால்களை அறிந்துகொள்ளுதல்.

- அரசு துறைகளிலிருந்தும் அரசு சாரா இந்து அமைப்புகளிலிருந்தும் தலைவர்களையும் பல நாடுகளிலிருந்து வரும் இந்து தலைவர்களை சந்திக்க வைத்து பல்வேறு விஷயங்களை பற்றியும் கருத்து பரிமாறி விவாதித்து தீர்வு எட்டச்செய்தல். உதாரணமாக தமிழர்கள் மிகுந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி தமிழ் வளர்ச்சிக்கு உதவுதல்.

- தமிழ் இந்துக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், வாய்ப்புகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் கலந்துரையாடலை ஆவணப் படுத்தி வெளியிடல்

குறிப்பிட்ட சில நாடுகளில் தமிழர்கள் பலதுறைகளிலும் பெற்ற வெற்றிகள் நம்மை பெருமை கொள்ள வைத்தாலும் இச்சமுதாயத்தின் சில கூறுகள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பது வேதனைக்குரியது. அவர்களோடு உடன் நின்று அவர்கள் முன்னேற்றத்திற்கு ஆவன செய்யவும் திட்டமிடுதல் இன்றியமையாதது. இந்த ஒருங்கிணைப்பை அதற்கான களத்தை அமைத்துக் கொடுக்க CCGS முன்வருகிறது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தாங்களும் தங்களின் பங்களிப்பை செய்ய உளமாற வரவேற்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

மத்திய கிழக்கு நாடுகள்

தேதி : 26th மார்ச் 2021
நேரம்: 11:30 – 2:30 PM & 4:30 - 7:30 PM IST

ஆஸ்திரேலியா & ஆசியா

தேதி : 27 & 28 மார்ச் 2021
நேரம்: 10:30 AM – 1:30 PM IST

ஆப்ரிக்கா & ஐரோப்பா

தேதி : 27 & 28 மார்ச் 2021
நேரம்: 3:30 - 6:30 PM IST

அமெரிக்கா & கனடா

தேதி : 27 மார்ச் 2021
நேரம்: 9.30 PM to 12.30 AM IST

தலைப்புகள்

- புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு
- எதிர்கால தலைமுறையினரிடம் தமிழ் மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வளர்ப்பது
- தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விவாதங்கள்
- புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒருங்கிணைப்பின் அவசியம்

அகண்ட தமிழ் உலகம் - கவிதை

பல்லவி

தமிழோடு இருப்போம்
தமிழினமே - இந்த
தரணியில் உயரட்டும்
நம்மினமே
அன்பின் வழியது
உயிர்நிலை என்று
அன்று சொன்னவன் பரம்பரையே
யாதும் ஊரே யாவரும்
கேளிர் என்று
வாழ்ந்திடும் குலமுறையே. (தமிழோடு)

சரணம் 1

வேந்தர் மூவரின் போர்த்திறம் உண்டு
விளக்காய் வள்ளுவன் சாத்திரம் உண்டு
ஆலம் விதை போல் பாறை கிழித்தும்
வேர்விடும் நெஞ்சுரம்
வாழ்க்கையில் உண்டு

நம் வேர்களின் நீளம்
எத்தனை யுகமோ
நம் விழுதுகள் எத்தனை
எண்ணிடத் தகுமோ
கால தேவன் கைத்தடி ஊன்றினும்
நிமிர்ந்து நடப்பது
நம்மினம் அல்லவோ (தமிழோடு)

சரணம் 2

அமுதத் தமிழே தாய்ப் பால் நமக்கு
அறிவோ சுடரும்
செவ் வேள் நமக்கு
தேசம் எங்கும் அலைந்த போதும்
வள்ளல் மேகமாய்
வாழ்வது வழக்கு

நீதியின் எடைக்கல்
நாமறிவோமோ
நீ நான் மறந்து
நாம் இணைவோமே

வானக வாசலின் கதவு திறக்கும்
சாவிகளாய் வந்த
வாழ்வறிவோமே (தமிழோடு)

எழுத்தாளர்
திரைப்பட பாடலாசிரியர்
நந்தலாலா

இறை நிலை

வானம் பூமி யாவும் உனது !
வாழ்வும் வளமும் யாவும் உனது!
வந்த நேரம் உனது முடிவு !
போகும் தூரம் எல்லை உனது!
எனது என்று எதுவும் இல்லை !
அனைத்தும் நீயே ! ஆதி நீயே!
அன்பு அறிவு அள்ளித் தந்தாய்!
ஆசை கொண்டு திரிந்து அலைந்தேன் !
பாசம் நேசம் உண்மை என்றேன் !
பரிவு நெஞ்சம் கொள்க என்றாய்!
இறையும் நீயே! இறைவன் நீயே!
இன்பம் நீயே! எதிலும் நீயே!
உண்மை வழியை காட்டு தேவா !
உலக வாழ்வை மீட்டு நாதா!
உயிர்கள் அனைத்தும் உனது வடிவே !
கடலும் நீயே! காற்றும் நீயே!
மலைகள் வடிவம் மண்ணும் நீயே!
மரங்கள் நீயே! மயக்கம் நீயே!
விண்ணும் நீயே! விதியும் நீயே!
எண்ணம் நீயே! வண்ணம் நீயே!
வாழ்வு நிலைக்கும் என்று இருந்தேன் !
தாழ்வை நினைத்து பயந்து இருந்தேன்!
வாழ்வும் தாழ்வும் உந்தன் அருளே !
நேசம் பாசம் உனது வழியே !
நன்மை தீமை உனது கருணை !
நலன்கள் அனைத்தும் உனது அன்பே !
அனைத்தும் நீயே! ஆதி யோகி !

ஆக்கம்
கவிஞர் அம்பாசங்கரன்

நின்னை சரணடைந்தேன் !

அன்னையே ! அகிலாண்ட நாயகி !
அருமறைப் பொருளே! அண்டத்தை ஈன்றவளே !
ஆதி சக்தியே!
அறம் வளர்த்த ஆனந்த வள்ளி!
கல்வியின் பிறப்பிடமே!
கற்றறிந்த காவியமே !
அறிவின் ஊற்றே !
அஞ்ஞானம் அழிப்பவளே !
உழைப்பின் சக்தியே!
திறமையின் சாரமே!
செல்வத்தின் அதிபதியே !
உண்மையின் உரைகல்லே!
சத்தியத்தின் விளக்கே !
நீதியின் கோமகளே !
நேர்மையின் தலைமகளே!
நியாயத்தின் விடிவெள்ளி !
தர்மத்தின் தலைவியே !
ஒழுக்கத்தின் பிறப்பிடமே!
பண்பாட்டின் இருப்பிடமே !
நாகரீக செல்வியே !
கலாச்சாரத்தின் தூணே !
கடமையின் காதலியே !
கண்ணியத்தின் உறைவிடமே!
கட்டுப்பாட்டின் அணிகலனே!
நின்னை சரணடைந்தேன் !

ஆக்கம்
கவிஞர் அம்பாசங்கரன்

தமிழ் நாடு :

பொன்னிநதி பாயுமிங்கே !
கன்னி மகள் நேயமிங்கே !
அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாத செல்வமிங்கே !
வாழையினம், தென்னையினம் !
பாக்குமர கூட்டம் இங்கே !
வெற்றிலையும், வேர் மரமும்
வெளிநாட்டான் பார்க்காத குற்றால அருவிகளும்
குதித்தெழுமே காணுதங்கே !
சிட்டான குருவிகளும் சிங்கார பனைமரமும் கற்றாழை புதர் அழகும்
கவித்துவமாய் காந்தள் மலரினமும் !

பொற்றாமரைக்குளமும், போகமூட்டும் அல்லியினமும்!
வெட்டாமலே வளர்ந்த தேக்கினமும் புங்கைமரமும் !
பட்டாலே நோய் தீர்க்கும் காற்று தவழும் பவழமல்லி!
கிட்டாமல் கடந்து போகும் போகர் மலைச் சித்தர்களும் !
மலையும் மடுவுகளும் மாமரத்து பூக்குலையும் !
மந்தார பூவினமும் மருதமலை தாவரமும்!
மங்காத பொன்னிணமும், மருவற்ற பெண்ணினமும் !
சிங்கார நடையழகும், சிரித்து வரும் பேரழகும் !
ஒய்யார உடையழகும் , ஓங்கிஅமர்ந்த கோவில்களும் !
பொய்யாத மொழிபழகும் பூவேந்தர் நடைச் செருக்கும் !
எந்தாயின் உயிரனைய ஏத்திடுவோம் !
தமிழ் நாடு !

ஆக்கம்
கவிஞர் அம்பாசங்கரன்

தமிழர் மொழியாம்
தமிழ் மொழியை வளர்த்தல்

ஜோ.சரஸ்வதி
தமிழ் ஆசிரியை

முன்னுரை:

மொழிகளின் தாய் மொழி, தமிழ். அகரம் கற்றுத் தந்த போதே அறத்தை கற்றுத்தந்த மொழி நமதருமை தமிழ் மொழி. தமிழ் என்றால் இனிமை! தமிழ் என்றால் அழகு! பேசவும் கேட்கவும் இனிமையான மொழி நமதருமை தமிழ்மொழி!

தமிழின் சிறப்பு:

தமிழ் என்றால் தனித்தன்மை வாய்ந்த செம்மொழி எனும் பொருள் உண்டு. தமிழ் மொழியில் வரும் “ழ”கரம் அழகான உச்சரிப்பு தரும் தனிச்சிறப்பு வாய்ந்த எழுத்தாகும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கிய இலக்கண நூல்களை உடைய மிகப்பழைய குடியும் நம் தமிழ்க்குடிதான்.

வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரி வரை பரந்து விரிந்த நிலப்பரப்பு தமிழர்களுடையது.

தமிழின் அடையாளம்:

ஆதிச்சநல்லூர்அகழ்வாராய்ச்சியும், கீழடி அகழ்வாராய்ச்சியும் தமிழர்களின் ஆதி நாகரீகத்தை இன்றும் உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கு உதவி செய்யும் மொழி, பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது.

மொழியிழத்தலும் விழியிழத்தலும் ஒன்று தான். ஓர் இனத்தை வளர்க்க வேண்டுமானால் அவர்கள் பேசும் மொழியை காக்க வேண்டும்.

தமிழ் மொழியின் தொன்மை:

உலகில் ஏழாயிரம்மொழிகள் இருந்தாலும் மூவாயிரம் ஆண்டுகள் தொன்மையும் தொடர்ச்சியும் உள்ள மொழிகள் ஏழு மொழிகள் தான், அதில் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி எனும் சிறப்பிடம் பெறுகிறது.

தமிழ், என்று பிறந்த மொழி என்று சொல்ல முடியா அளவு தொன்மையும் தொடர்ச்சியும் கொண்டது.



தமிழ்மொழியின் வளர்ச்சி:

தமிழால் தமிழர்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று விரும்பிய தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் “ உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு” என்று சொல்லி நாம் தமிழர் எனும் இயக்கத்தைத் தொடங்கி தமிழ் உணர்வை ஊட்டினார். திருக்குறள் மூலம் தமிழர்களுக்கு அறநெறியும் மொழியுணர்வும் உருவாக்கலாம் என்று எண்ணி, தமிழக சட்டப்பேரவைத் தலைவராக பொறுப்பேற்ற பின் தினமும் திருக்குறளை வாசித்து அவை அலுவல்களை தொடங்கினார். குறளின் குரல் இன்று உலகம் முழுக்க ஓங்கி ஒலிக்க அன்றே வழி செய்தார். இன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியால் திருக்குறள், சீன மொழியிலும் அரபு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ் சங்கங்களை உருவாக்கித் தமிழ் வளர்த்தனர். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் இலங்கையிலும் கனடாவிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் நூற்றுக்கணக்கான பள்ளிகளைத் தொடங்கி தங்கள் தாய்மொழியானதமிழ்மொழியைத்தங்கள்பிள்ளைகளுக்குகற்றுத்தருகின்றனர். தங்கள் தாய்மொழியின் தொடர்பு அறுந்து விடக்கூடாது என்பதற்காக அவர்கள் தமிழ்ச்சங்கங்களையும் தமிழமைப்புகளையும் தொடங்கி தனி பாடத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகின்றனர். தமிழ் மொழியைக் காக்க தங்கள் இன்னுயிர் தந்த மொழிப்போர் தியாகிகளால் நம் தமிழ்மொழி இன்னும் உயிர்ப்போடிருக்கிறது.

தமிழை வளர்ப்போம்:

“செந்தமிழும் நாப்பழக்கம் சித்திரமும் கைப்பழக்கம்” என்றார்கள் நம் முன்னோர்கள். என் மொழி செம்மொழி! என் மொழி நன்மொழி! அதை எந்நாளும் காத்திடுவேன் என்ற உணர்வு வந்துவிட்டால் தாய் மொழியைக் காக்கும் வல்லமையை நாம் பெறுவோம். தமிழே எங்கள் அடையாளம், அடையாளத்தை அழித்தல் நம்மையே அழிப்பது போன்றதுதான். மொழியின் வழியில் நாளும் நடக்கும் பணியை நம்மிடமிருந்தே தொடங்குவோம்! நம் குழந்தைகளுக்கு தமிழின் சிறப்பை ஆழமாக உணர்த்துவோம்!

நல்ல தமிழ் சொற்பொழிவுகளைக் கேட்க வைப்போம். நல்ல தமிழில் பேச சொல்லி பிழைகளைத் திருத்துவோம். நல்ல தமிழ் நூல்களை கொண்ட நூலகத்தை வீடுகளில் தொடங்கி, நாமும் படித்து நம் குழந்தைகளுக்கும் தமிழ் நூல்களை அறிமுகப்படுத்துவோம். தினமும் ஒரு பக்கமாவது தமிழில் எழுதுவோம். அதனால் தான் உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாவேந்தர் பாடினார்.

முடிவுரை:

தாய்மொழியைப்போற்றியநாடுவிழுந்ததில்லை, தமிழ் மொழியை கற்றதாலே வீழ்ச்சி இல்லை.

தேன்தமிழென்றும், இன்பத்தமிழென்றும், அன்னைத்தமிழென்றும், அருந்தமிழென்றும், தீந்தமிழென்றும், ஞானத்தமிழென்றும் நற்றமிழ் என்றும் போற்றப்படும் நம் அன்புத் தமிழைக் கற்றால் துன்பங்கள் நீங்கும், வீரம் வரும், நெஞ்சில் தூய்மை உண்டாகும் என்று பாவேந்தர் கூறியது நடந்தே தீரும்.

அன்னைத்தமிழை நேசிப்போம்!
அருந்தமிழை சுவாசிப்போம்!
தித்திக்கும் செந்தமிழை எத்திக்கும் பரப்புவோம்!
வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!



தமிழரின் மண் மருத்துவம்

டாக்டர் அ. சத்திய நாராயணன்,
M.A., PGDICP., M.S., M.Phil., M.Ed., Ph.D
மனநல ஆலோசகர்

மண்ணின் பெருமை

தமிழ் மண் மிகவும் பெருமை வாய்ந்ததுதான். உலகின் மிகப் பழமையான மாபெரும் கலாச்சாரத்தை வளர்த்த பெருமை இந்தத் தமிழ் மண்ணையே சாரும். ஆனால் நாம் இந்தக் கட்டுரையில் காணப் போவது மண்ணுக்கே அமைந்த பல அரிய மருத்துவ குணங்களைத்தான். மண்ணிற்கு உடலின் எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும் ஆற்றல் உள்ளது.

தமிழர் பாரம்பரியத்தில் மண் வைத்தியம் ஓர் அருமையான தலைப்பு. தமிழ் இயற்கை மருத்துவர்கள் மண்ணைக் கொண்டு உடல் நோய்கள் பலவற்றை விரட்டியடித்து உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம் என்கிறார்கள். மண் சிகிச்சையிலும் ஐந்து வகைகள் உண்டு. நாம் இந்தக் கட்டுரையில் மண் குளியல், மண் பூச்சு, மண் புதையல், மண் பட்டி, மண் ஒத்தடம் போன்ற சில தமிழர் இயற்கை மருத்துவ முறைகளால் பல்வேறு வியாதிகளை குணப்படுத்துவது எப்படி என்று காணப்போகிறோம்.

மண் சிகிச்சைக்கு மண்ணை தயார் செய்தல்

மண் சிகிச்சைக்கு ஏற்ற மண்ணை தேர்வு செய்யும் முறை மிகவும் முக்கியமானது. இதற்கு மிகவும் பொருத்தமான தேர்வு புற்றுமண் தான். புற்று மண்ணில் உப்பு, உவர்ப்பு, சுண்ணாம்பு, கந்தகம், மைக்கா போன்ற தன்மைகள் நீக்கப்பட்டு இருக்கும். புற்றுமண்ணுக்குதான் உறிஞ்சு சக்தியும், வெப்பத்தை கிரகிக்கும் தன்மையும் மிக அதிகமாக உண்டு. புற்று மண் கிடைக்காத பட்சத்தில் செம்மண் மற்றும் களி மண்ணையும் பயன்படுத்தலாம்.

மண் சிகிச்சைக்குத் தேவையான மண்ணை பூமியின் ஆழத்தில் நான்கடி தூரத்தில் இருந்து எடுக்க வேண்டும். மண்ணில் இருக்கும் தேவையற்ற பொருட்களையும் கற்களையும் நீக்கி விட்டு சுத்தம் செய்த மண்ணை

சூரிய ஒளி படுமாறு உலர்த்தி, நன்கு சலிக்க வேண்டும். இந்த மண்ணை நீரில் குழைத்து 6 முதல் 8 மணி நேரத்திற்கு வைத்திருந்து அதன் பிறகே பயன்படுத்தவேண்டும். ஒரு முறை பயன்படுத்திய மண்ணை மீண்டும் பயன்படுத்த விரும்பினால் இதே போன்று சூரிய ஒளியில் உலர்த்தி மீண்டும் பயன்படுத்தலாம். ஆனால் தோல் வியாதிக்கு உபயோகித்த மண்ணை மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

1. மண் குளியல்

மண் குளியல் ஒரு பாரம்பரியமான வைத்திய முறை. அந்த காலத்தில் உடல் முழுவதும் மண்ணை தேய்த்து குளிக்கும் முறை வழக்கத்திலிருந்தது. தமிழர் இயற்கை மருத்துவத்தில் மண் குளியல் ஒரு சிறப்பு வாய்ந்த சிகிச்சை முறையாகவே செய்யப்படுகிறது. குறிப்பாக கோடைக்காலத்தில் உடல் சூடு மற்றும் தோல் சம்பந்தமான உபாதைகளுக்கு தீர்வு காண மண் குளியல் மிகச் சிறந்த மருத்துவ முறை.

மண்ணை எடுத்து பாத்திரத்தில் குழைக்க வேண்டும். சேறு போன்று இருக்கும் இந்த மண்ணை உடலில் பூசிக்கொள்ளும்போது உள்ளாடை மட்டும் அணிந்து கொண்டு காலில் ஆரம்பித்து மேல் நோக்கியவாறு உடல் முழுவதும் பூச வேண்டும். கண், வாய், காது பகுதியை தவிர்க்க வேண்டும். பிறகு சூரிய ஒளியில் சில நிமிடங்கள் இருக்க வேண்டும். 20 நிமிடங்கள் கழித்து வெயிலில் நின்றபடி குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். உடல் மீதிலான மண் பூச்சினை ஒரு மணி நேரம் வரை வைத்திருக்கலாம்.

மண் குளியல் செய்வதால் கை, கால், மூட்டு வலிகள், வயிறு வலி, தசைப் பிடிப்புகள் போன்றவை குணமாகும். உடல் வலி குறைவதோடு உடல் முழுதும் இரத்த ஓட்டம் அதிகரித்து புத்துணர்ச்சி அதிகமாக இருக்கும். உடல்மந்தநிலை நீங்கி புத்துணர்ச்சி ஏற்படும். தோலில் இருக்கும் கழிவால் தோல் வியாதிகள், அரிப்பு போன்றவை ஏற்படுகின்றன. தோல் வறண்டு போவதால் உடலின் வெளிப்புறத்தில் ஈரப்பதம் குறைந்திருக்கும். இந்த குறைபாடுகளை நீக்க மண் குளியல் பெரிதும் உதவும். மண் குளியலால் மன அழுத்தம் குறையும்.

2. மண் பூச்சு

குழைத்த மண்ணை உடம்பில் சிகிச்சை அளிக்க வேண்டிய இடங்களில் மட்டும் பூசிக்கொண்டு ஒரு மணி நேரம் கழித்து கழுவி விடுதல் மண் பூச்சு

எனப்படும். உதாரணத்திற்கு மண் பூச்சினை முகத்தின் மீது செய்யும்போது கண்களை சுற்றியுள்ள கருவளையங்கள், கரும்புள்ளிகள், வடுக்கள், அம்மை தழும்புகள் போன்றவை நீங்குகின்றன. மண் பூச்சு முகத்தை சுத்தமாக வைத்து சருமத்தை புத்துணர்ச்சி பெறச் செய்கிறது.

3. மண் பட்டி

மண் பட்டி என்று அழைக்கப்படும் இந்த சிகிச்சை முறை உடலில் எங்கெல்லாம் வலி இருக்கிறதோ அங்கு மட்டும் மண் சிகிச்சை செய்யும் முறையாகும். இந்த மருத்துவ முறையில் நீரில் குழைத்த மண்ணை ஒரு துணியில் சுற்றி மடித்து விடவேண்டும். அதை வலி இருக்கும் இடங்களில் வைத்து பற்று போன்று கட்டி விட வேண்டும்.

மண் பட்டியை வயிற்றை சுற்றி போட்டால் செரிமானக்கோளாறு, மலச்சிக்கல், வயிற்றுக்கடுப்பு போன்ற உபாதைகள் நீங்கும். மாதவிலக்கு நேரத்தில் பெண்களுக்கு ஏற்படும் அடி வயிறு வலிக்கு அடி வயிற்றில் இந்தப் பற்றினைப் போட்டால் அதிக மற்றும் விரைவான பலனைத் தரும்.

நெடுநாட்களாக தலைவலியால் துன்பமுறுபவர்கள் மண் பட்டியை தலையின் மீது வைத்து எடுத்தால் தலைவலி உபாதை நீங்கும். கண்களின் மீது வைத்து எடுக்கும் போது கண்விழி, இமைப்படலங்கள், கண் பார்வை ஆகியன சீராகின்றன. மண்பட்டியை 10 முதல் 15 நிமிடங்கள் வரை மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்று மருத்துவக் குறிப்பு கூறுகிறது. உடலில் இருக்கும் நச்சுத்தன்மையை மண் உறிஞ்சிக்கொள்வதால் உடல் உறுப்புகள் எலும்புகள் வலுப்பெறுகின்றன.

4. மண் புதையல்

இந்த சிகிச்சை முறைக்கு ஈரப்பதம் அதிகமுள்ள ஆற்றுப்படுகையில் மண்ணை தோண்டுவார்கள். ஆள் உயர அளவுக்கு மண்ணைத் தோண்டி அந்தப் பள்ளத்தில் இறங்கி கழுத்து வரை உடல் உள்ளே இருக்குமாறு மண்ணில் மூடி விடுவார்கள். தலை மட்டும் வெளியே இருக்கும். இந்த சிகிச்சையை வெகு சிலர் மட்டுமே இயற்கை மருத்துவ நிபுணர்களை கொண்டு செய்து கொள்கிறார்கள். இந்த மண் புதையல் புதுவித புத்துணர்ச்சியை உடலுக்கும் மனதுக்கும் கொடுக்கும்.

5. மண் ஒத்தடம்

தயார் செய்த மண்ணை எடுத்து இரும்பு வாணலியில் அல்லது மண் சட்டியில் வறுக்க வேண்டும். பிறகு மெல்லிய துணியில் சிறு மூட்டையாக கட்டி இளம்சூட்டில் ஒத்தடம் கொடுப்பார்கள். இன்றும் கிராமங்களில் வீட்டு பெரியவர்கள் இந்த சிகிச்சை செய்வது உண்டு. வெளிப்பூச்சு தைலங்கள் சந்தையில் வருகையால் இவை பெருமளவு குறைந்துவிட்டது.

முக்கியக் குறிப்புகள்

சிறுநீரக பாதிப்பு, நீரிழிவு, வெரிக்கோஸ் வெயின், முடக்குவாதம், நரம்புக்கோளாறு என்று பல நோய்களுக்கு மண் சிகிச்சை நல்ல தீர்வு தருகிறது. நோய்களுக்கு மண் சிகிச்சை எடுப்பவர்கள் இயற்கை மருத்துவரிடம் தான் எடுத்துகொள்ள வேண்டும். ஆலோசனைக்கு இயற்கை மருத்துவரை அணுகுங்கள். நோய் பாதிப்புக்கு ஏற்றவாறு மூலிகைகள் கலந்து பயன்படுத்த ஆலோசனை வழங்குவார்கள். முதல் முறை மருத்துவரிடம் மண் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

தமிழர் விவசாயம்

ம. ஆர்த்தி

முன்னுரை:

“கல் தோன்றி மண் தோன்றா காலத்தே

முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி”. இத்தனை சிறப்புகள் வாய்ந்த தமிழர்களின் விவசாயம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

வாழ்வியலில் விவசாயம் :

சங்க காலத்தில் தமிழர்களின் வாழ்க்கையின் முதன்மை பகுதியாக வேளாண்மை இருந்தது. இது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாக கருதப்பட்டது. எனவே அனைத்து தொழில்களையும் விட விவசாயம் முதன்மை வகித்தது. உழவர்கள் சமூக நிலையில் மேல்நிலையில் இருந்தனர். அவர்கள் உணவு தானிய உற்பத்தியாளர்களாக இருந்ததால், சுயமரியாதையுடன் வாழ்ந்தனர். பண்டைய தமிழர்கள் பல்வேறு விதமான மண் வகைகள், அவற்றில் பயிரிடப்படும் பயிர் வகைகள், அந்தந்த பகுதிகளுக்கு பொருத்தமான பல்வேறு நீர்ப்பாசன முறைகளை அறிந்திருந்தனர்.

தமிழர்களின் வேளாண்மை அணுகுமுறைகள் :

நீர்ப்பாசனம், எருவிடுதல், உழவு, சேமிப்பு, விநியோகம் ஆகியவற்றில் முன்னேற்றத்துடனும், திறம்படவும் செய்து வந்தனர். பண்டைய தமிழர்கள் நில வளத்தை அடிப்படையாகக்கொண்டு, நிலங்களை வேறுபடுத்தி, அந்த மண் வகைக்கு ஏற்றவாறு பயிர்களை பயிரிட்டனர். அவை வன்புலம், மென் புலம், பின்புலம், களர் நிலம் போன்றவை ஆகும். அக்காலத்தில் வண்டல் மண், செம்மண், கரிசல் மண், களிமண், மணல் என மண்ணின் வகைகளையும், அதன் தன்மைகளையும் ஒவ்வொரு வகை மண்ணிலும் என்னென்ன பயிர்கள் விளையும் என்பதை அறிந்திருந்தனர்.

நீர்ப்பாசன முறை :

மக்கள், விவசாயத்திற்கு மழையையே பெருமளவு நம்பியிருந்தனர். ஆனால், அதிகரித்த உணவுத் தேவையானது, நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்த வேண்டிய சூழலை உருவாக்கியது. இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவையே குளங்கள், ஏரிகள், அணைகள் போன்ற முக்கிய நீர் சேமிப்பு அமைப்புகள் ஆகும். பாசனத்திற்காக நீரை ஒழுங்குபடுத்துவதற்காக மதகுகள், மற்றும் அடைப்புகளை அமைத்தனர். சில சமயம் ஆற்றில் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் நீர் பாசனத்திற்கு தண்ணீர் திருப்பவும் மண் கரைகள் எழுப்பப்பட்டன. காவிரி, தாமிரபரணி ஆகிய ஆற்றுப் பகுதிகளில் கால்வாய்களை அமைத்து நேரடி நீர்ப்பாசனம் என்பது சாத்தியமான ஒன்றாக இருந்தது. இந்த காலகட்டத்தில் காவேரி ஆற்றில் கட்டப்பட்ட "கல்லணை" உலகிலேயே பழமையான நீர் ஒழுங்கு அமைப்பு என்று கருதப்படுகிறது. காவேரி, பெண்ணாறு,பாலாறு, வைகை, தாமிரபரணி ஆகியவை தமிழகத்தின் வயல்களுக்கும், குடிநீருக்கும் நீரைக் கொண்டு வந்த முக்கிய ஆறுகள் ஆகும்.

தமிழர்களின் தொழில்நுட்பம் :

விவசாயத்தில் உழவு, அறுவடை போன்றவற்றிற்கு தேவைப்பட்ட பல்வேறு கருவிகள் தயாரிக்கப்பட்டன. அடிப்படை கருவிகள் ஏர், கலப்பை என்று அழைக்கப்பட்டது. ஏரானது மரத்தாலோ, இரும்பாலோ அல்லது எஃகு சட்டத்தாலும் செய்து, அதில் கூரிய அலகைப் பூட்டி மண்ணை கிளறி பயன்படுத்தப்பட்டது. மாடு அல்லது எருமை ஆகியவற்றில் பூட்டப்பட்ட இது மண்ணை தளர்வாக மாற்றியது.

பயிரிடும்நிலத்தைசமன்படுத்தியும்,களைஅகற்றியும்பயிர்களுக்குஊட்டம் தந்தனர். மாடுகளின் உதவியுடன் வயலில் களைகள் சுத்தம் செய்யப்பட்டன. ஆழமான கிணறுகளில் இருந்து தண்ணீரை பாசனத்துக்கு எடுக்க கபிலை என்ற

தொழில்நுட்பத்தை பயன்படுத்தினர். ஆழமற்ற கிணறுகளிலிருந்து நீரை மேலேற்ற ஏற்றம் என்ற அமைப்பை பயன்படுத்தினர். விலங்குகள் மற்றும் பறவைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாத்தனர். சங்க காலத்தில் மிகவும் திட்டமிட்ட முறையில் சாகுபடி செய்தனர். உழுதல், விதைத்தல், உரமிடுதல், களையெடுப்பு, நீர்ப்பாசனம் பயிர் பாதுகாப்பு ஆகியவற்றை சரியான முறையில் செய்து வந்தனர். நெல் கழனிகள் காளைகளின் உதவியுடன் உழப்பட்டன. கழனியில் தழைகளை விவசாயிகள் தங்கள் கால்களில் மிதித்து மூழ்கடித்தனர். நாற்றுகள் வளர்ந்த பின்னர் அவை இடம் மாற்றி நடப்பட்டன. பயிர் முதிர்ந்த உடன் அறுவடை செய்யப்பட்டன. அறுவடையான நெற்பயிரை களத்துக்கு கொண்டு வந்து அவற்றை தரையில் தட்டி நெல்மணிகள் பிரிக்கப்பட்டன. நெல்மணிகள் சேகரிக்கப்பட்டு, அளவிடப்பட்டு சரியான கொள்கலனில் சேமிக்கப்பட்டன. பயிர் சுழற்சி முறை பின்பற்றப்பட்டது. இயற்கை அளித்த கொடையானது சுத்தமான காற்று, நல்ல தண்ணீர், ஆரோக்கியம் தரும் உணவு ஆகியவை. இதற்கான தமிழர்களின் விவசாயம் மனிதர்களின் நீடித்த ஆரோக்கியமான வாழ்வையும், வளத்தையும் வளர்த்தது.

ஆதார நூல்கள்:

தொல்காப்பியம்(ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்) திருக்குறள்(இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்) திருமுருகாற்றுப்படை(தினைப்புனம்)

முடிவுரை :

தமிழர்கள் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கியவர்கள். ஆனால் விவசாயத்தில் ஆகச்சிறந்தவர்களாக தங்களை தடம் பதித்துள்ளனர். நோயற்ற வாழ்வு வாழ நம்மை வழி நடத்தியவர்கள் தமிழர்கள். அவர்களின் விவசாயம் ஆரோக்கியமான சமுதாயத்தை படைத்தது. வளமான, ஆரோக்கியமான தமிழர்களின் விவசாயத்தை போற்றுவோம், பாதுகாப்போம், கொண்டாடுவோம் அதனை வழி நடத்திச் சென்று இன்பமும், மகிழ்ச்சியும் பெற்று ஆரோக்கியமுடன் வாழ்வோம். வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழர்கள்! வளர்க அவர்கள் புகழ்!

தமிழரின் தொல் இசைக் கருவிகள்

முனைவர் சித்ரா
chitrahk.blog@gmail.com

தமிழர்கள் பண்பாட்டில் இசை என்பது எப்போதும் முக்கிய பங்கு வகித்து வந்திருக்கிறது. பிறந்த குழந்தைக்கு தாலாட்டு பாடல்கள் தொடங்கி வாழ்க்கையின் பல நிலைகளுக்கு ஏற்ற பாடல்களும், இறுதியில் வாழ்க்கை பயணத்தை முடிக்கும்போது ஒப்பாரிப் பாடல்கள் வரையிலும், இசை வாழ்க்கையோடு ஒன்றியது. மொழி உருவாவதற்கு முன்பு,. கருவிகளைக் கொண்டு இசைத்து வந்தனர். மொழி உருவான பின்பு, பாடல்கள் உருவாயின. அப்போது பாட்டு பாடுவதோடு கருவிகளைக் கொண்டு அதற்கேற்ப இசைப்பதும் தொன்றுதொட்டு இருக்கும் வழக்கமாக வந்துள்ளது. வில் மற்றும் கொட்டாங்குச்சியில் மிகவும் எளிய கருவியாக ஆரம்பித்து பல்வேறு இசைக்கருவிகளை தமிழர்கள் உருவாக்கி இசைத்து வந்திருக்கிறார்கள். இசைக் கருவிகளைப் பற்றி தமிழரின் சங்க இலக்கிய பாடல்களில் விரவி இருப்பதைக் காணலாம். சில பாடல்களில் அந்தக் கருவியில் இருந்து வரும் இசை எப்படிப்பட்டது என்பதையும் கூறுவதாக உள்ளதை காணும்போது, பாடல்கள் எழுதிய புலவர்கள் உணர்வுபூர்வமாக எழுதி இருப்பதை அறிய முடிகின்றது.

“சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்ன மெல்லாம் பொருபடை மிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்கெழுந் தியம்பி மல்க.”

(எறிபத்த நாயனார் புராணம் பாடல் 31)

இந்தப் பாடலில், தாரை, பேரி, பம்பை, திமிலை, சின்னம் என்று பல கருவிகளின் பெயர்கள் இடம் பெறுவதை அறியலாம்

தொன்று தொட்டு இருந்து வரும் இந்த இசைக்கருவிகளை மூன்று வகையாக பிரிக்கலாம். தோல் கருவிகள், நரம்புக் கருவிகள், துளைக் கருவிகள் என்று அவற்றை பகுக்கலாம்.

தலைமுறை தலைமுறையாக கருவிகள் வாசிக்கப்பட்டு, இன்று நம்மிடம் பரவலாக வாசிக்கப்படும் கருவிகள் மிகச்சிலவே. தொல் இசையில் ஆர்வம் கொண்டவர்களில் சிலர் இசைக் கருவிகளை மீட்டெடுக்கும் முயற்சியில் உள்ளனர். அவர்களில் கோசைநகரான் என்பவர், தான் மீட்டெடுத்த கருவிகளை கண்காட்சியாக வைத்தும், காணொளி மூலமாகவும் இன்றைய தமிழ் சமுதாயத்திற்கு அவற்றை அறிமுகப்படுத்தி வருகிறார். சவுண்ட் மணி என்ற மாணவர் இளம் வயதினருக்கு இக்கருவிகளை அறிமுகப்படுத்த இணையவழியில் பல காணொளிகளை இட்டு வருகிறார். இருவரும் இசைக்கருவிகளை வாசிக்கவும் கற்றுத் தருகிறார்கள்.

நம் தோல் கருவிகளை வெளிநாட்டு வாழ்தமிழர்களும் அறியவேண்டும் என்ற அவாவில் பல நாடுகளில் இப்போது பறையிசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதை கற்றுத் தரும் பல ஆசிரியர்களும் இப்போது உருவாகியுள்ளனர். இந்த வகுப்புகளில் பலரும் பங்குபெற்று பறை இசையை வாசிக்க கற்று வருவது உலகம் முழுவதும் தமிழர்கள் தங்கள் பண்பாட்டை நிலை நிறுத்த எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியங்களில் கூறப்படும் இசைக்கருவிகள் பற்றிய தேடலில் கிடைத்த 150 பெயர்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளது. இதில் சில கருவிகள் நம்மிடம் இன்றும் இருக்கின்றன. ஆனால் பல கருவிகள் என்ன என்பதே தெரியாதனவும் உண்டு. இந்தப்பட்டியலில் இசைக்கருவிகள் பகுக்கப்படவில்லை. தகுந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அனைத்துக் கருவிகளையும் மீட்டெடுக்க முடியும். இந்தப் பட்டியல், மீட்டுருவாக்கம் செய்ய விரும்புவோருக்கு உதவும் என்று நம்புகின்றேன்.

தமிழ் இசைக் கருவிகள் பட்டியல்

1	அடக்கம்	31	கல்லலகு	61	சன்னை
2	அந்தரி, அந்தலி	32	கல்லல் கிரிகட்டி	62	சாரங்கி
3	அமுதகுண்டலி	33	கல்லவடம்	63	சிலம்பு
4	அரிப்பறை	34	கவிழ்	64	சிறுபறை
5	அரைச்சட்டி	35	கழல்	65	சிறுமுரசு
6	ஆகுளி	36	காடிகை, கரடிகை	66	சின்னம்
7	ஆமந்தரிகை	37	காளம்	67	செண்டா
8	ஆவஞ்சி	38	கிணை	68	செவ்வழிப் பண் விளரி யாழ்
9	இடக்கை	39	கிளை	69	சேமக்கலம்
10	இலயம்	40	கின்னரம்	70	தகுணிச்சம், தகுனிச்சம், தகுனித்தம்
11	உடல், உடுக்கை	41	குடமுழவம், குடமுழா	71	தக்கை
12	உபாங்கம்	42	குண்டலம் சடடை	72	தடாரி
13	உயிர்த்தூம்பு	43	குழல்	73	தட்டழி
14	உருட்டி	44	குளிர்	74	தட்டி
15	உறுமி மேளம்	45	குறிஞ்சி யாழ்	75	தட்டுக்கழி
16	எக்காளம்	46	குறும்பரந்தூம்பு	76	தட்டை
17	எல்லரி	47	கைமணி	77	தண்டு
18	ஏழில்	48	கையலகு	78	தண்ணுமை
19	ஏறுகோட்பறை	49	கொக்கரை, கொக்கறை	79	தத்தளகம்
20	ஐம்முக முழவம்(குடமுழவு)	50	கொடு கொட்டி	80	தமடூகம், தமருகம்
21	ஒத்து	51	கொட்டு	81	தமுக்கு
22	கஞ்ச தாளம்	52	கொண்டி	82	தம்பட்டம்
23	கடம்	53	கொம்பு	83	தம்பூரா
24	கணப்பறை, கணப்பாறை	54	கோட்டு வாத்தியம்	84	தவண்டை
25	கண்டிகை	55	சங்கு	85	தாரை
26	கண்டை	56	சச்சரி	86	தாளம்
27	கண்தூம்பு	57	சந்திர வளையம்	87	திமிலை
28	கண்விடு	58	சலஞ்சலம்	88	திருச்சின்னம்
29	கத்திரிகை	59	சல்லரி	89	துடி
30	கரதாளம்	60	சல்லிகை	90	துடுகை, துடுமை

தமிழ் இசைக் கருவிகள் பட்டியல்

91	துத்திரி	121	பெருமுரசு
92	துந்துபி	122	பேரி
93	தூம்பு	123	பேரிகை
94	தூரியம்	124	பேரிமத்தளம்
95	தொண்டகப் பறை, தொண்டகம்	125	பொரும்பறை
96	நகரா	126	மகுடி
97	நட்டுவாங்க தாளம்	127	மணி
98	நமரி	128	மண்மேளம்
99	நரல் சுரிசங்கு	129	மத்தளம்
100	நாதசுவரம்	130	மருத யாழ்
101	நாளிகைப்பறை	131	மருவம்
102	நிசாரளம், நிசாளம்	132	மீன் கோட் பறை
103	நெல்லரி மணமுழவு	133	முகவீணை
104	படகம்	134	முரசு
105	படுதம்	135	முரவம்
106	பணிலம்	136	முருகியம்
107	பதவை	137	முருடு
108	பம்பை	138	முல்லையாழ்
109	பல்லியம்	139	முழவு
110	பறண்டை	140	முளரி யாழ்
111	பறை	141	மொட மத்தளம்
112	பாகம்	142	மொந்தை
113	பாடகம்	143	யாழ்
114	பாணி	144	வட்டணை
115	பாண்டில்	145	வயிர்
116	பாரிசாத வீணை	146	வில் (இசைக்கருவி)
117	பாலை யாழ்	147	வீணை, சதுர்தண்டி வீணை, சுருதி வீணை
118	பிடவம்	148	வீளை
119	பிடில்	149	வெங்குரல்
120	புல்லாங்குழல்	150	வெறியாட்டுப் பறை

தமிழர் சிற்பக்கலை

முன்னுரை:

"கல்லும் கதை சொல்லும்" என்பது பழமொழி. எல்லா கல்லும் கதை சொல்லிவிடுமா? சிற்பியின் கைப்பட்ட கல்லெல்லாம் கதை சொல்லும். மனிதன் படைத்த கலைகளுள் மிகச் சிறந்தது ''சிற்பக்கலை'' என்பர்.

மனித நாகரீகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலையை விட சிறந்தது வேறொன்றில்லை. தமிழ்நாட்டின் தொன்மை வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகிறது. அச்சிற்பக்கலையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சிற்பங்களும் சிற்பிகளும் :

கண்ணால் கண்ட உருவங்களையோ கற்பனை உருவங்களையோ வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். அதனை வடிப்பவன் சிற்பி எனப்படுவான்.

சங்க காலத்தில் மண், மரம், தந்தம்,கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மண்ணில் சிற்பங்கள் உருவாக்கியவர்கள் மண்ணீட்டாளர்கள் எனப்பட்டனர். அக்காலத்தில் இறந்த போர் வீரர்களுக்கு கற்களால் சிலை அமைக்கும் வழக்கமும் இருந்தது.

சிற்பம் செய்யும் பொருட்கள் :

கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு என்பன சிற்பம் வடிக்க ஏற்றவை. கல்லில் கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக்கல் என்பனவும் உலோகங்களில் பொன், வெள்ளி, வெண்கலம், செம்பும் ஏற்றனவாக கருதப்பட்டன.

சிற்பங்களின் வகைகள் :

1. முழு வடிவச் சிற்பங்கள்
2. புடைப்புச் சிற்பங்கள்

1. முழு வடிவச் சிற்பங்கள் :

வடிவம் முழுவதையும் முன்புறம், பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களே முழுவடிவச் சிற்பங்கள். கோயில்களில் காணப்படும் முதன்மை

தெய்வத்திருமேனிகளும்உற்சவத்திருமேனிகளும்முழுவடிவச்சிற்பங்களாகும். (எ.கா) நடராசர் சிலை

2. புடைப்புச் சிற்பங்கள்:-

வடிவத்தில் ஒரு புறம் மட்டும் காட்டும் சிற்பங்கள் புடைப்பு சிற்பங்கள். இவை சுவர்கள், தூண்கள், பாறைகள் என பலவற்றின் மீது ஒரு புறம் மட்டும் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களாகும்.

(எ. கா) தூணில் வடிக்கப்பட்ட யாழி சிலைகள்.

தமிழர் சிற்பக்கலையின் சிறப்பியல்புகள் :

- தமிழ்நாட்டுச் சிற்பங்களின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலை இலக்கணங்கள் அவற்றில் அளவாய் அமைந்துள்ள நிலையாகும்.
- இவ்விரு கலைகளுமே கோயில்களால் வளர்க்கப்பட்டமையால் இவை எளிதாக கைவரப்பெற்றன சிற்ப வடிவங்கள் நின்றாலும் அமர்ந்தாலும் கிடந்தாலும் வேறெந்த அமைதியில் தோன்றினாலும் அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தையொட்டி அமைந்திருப்பதைக் காணலாம்.
- சிற்பங்கள் ஆடற்கலை இலக்கணத்தை நன்கறிந்து தம் கலையுணர்வு, கற்பனைத் திறன் கலந்து அமைப்பதால் தெய்வத் திருமேனிகள் நிறுவப்படும் இடத்துக்குத் தக்கவாறு கலையழகை மட்டுமன்றி அவ்வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணர்த்தும் வகையில் உள்ளன.
- தமிழகத்தில் பல்லவர்களின் மாமல்லபுர குகைக்கோயில் சிற்பங்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவை.
- பாண்டியர் கால சிற்பங்களும் தமிழகச் சிற்பங்களின் கலைத்திறனுக்கு சான்றாய் விளங்குகின்றன.
- தமிழகத்தில் சோழர்காலக் குடந்தை நாகேசுவரர் கோயில், தஞ்சைபெரிய கோயில், கங்கைகொண்ட

சோழீச்சுரம், தாராசுரத்து ஐராவதேசுவரர் திருக்கோயில் ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை.

- இவை சிற்பக்கலை வளர்ச்சியையும், அக்கலையில் தமிழகச் சிற்பிகள் பெற்றிருந்த பெருந்திறனையும் உலகுக்கு உணர்த்துவனவாகும்.
- இரண்டாம் இராசராசனின் கலைப்படைப்பாய் எழுந்த ஐராவதேசுவரர் திருக்கோயில், சிற்பக்கலை சாதனைகளின் உச்சம் என்பர். அழகிலும் நுணுக்கத்திலும் ஆற்றலிலும் மிக உன்னத நிலையிலிருந்தே சிற்பக்கலையின் எச்சமாக கம்போடியாவின் ''அங்கோர் வாட்'' கோயில்களிலும் நம் நாட்டு ''லெம்பா பந்தாய்'' பள்ளத்தாக்கிலும் சிதைவுற்றிருக்கும் சிற்பங்களே சீரிய எடுத்துக்காட்டுகள் ஆகும்.

முடிவுரை :

தமிழர்களின் கலை திறனான சிற்பக்கலைகள் ஒரு காலத்தில் சிகரம் தொட்டு இருந்ததன் அடையாளம்தான் இன்று நாம் பார்த்து வியக்கும் பல்லவர், சோழர், பாண்டியர்கள் காலத்துச் சிற்பங்கள். இச்சிற்பங்கள் என்றும் நம்மை ஈர்க்கத் தவறுவதேயில்லை. இப்படிப்பட்ட அருமையான, சிறப்பான, உலகப் புகழ்வாய்ந்த சிற்பக்கலையினை தமிழர்களாகிய நாம் அழிந்துவிடாமல் பாதுகாப்போம்.

மன அமைதியும் நம் மகிழ்ச்சியும்

Dr. ஆனந்தர் சந்திரகாசன்
M.A.,M.D(acu).,Ph.D.,D.F.Tech.,
Philosopher, Trainer, Counselor, Healer
Email:anandarchandrahasan@gmail.com

வணக்கம், இந்த கட்டுரையில் நம் மனதை எப்பொழுதும் அமைதி நிலையில் வைத்திருப்பதன் மூலமாக நாம் மகிழ்ச்சியையும், வெற்றிகளையும் எப்படி எல்லாம் அடையலாம் என்பதை ஒட்டி சில கருத்துகளை பகிர்ந்து கொள்கிறேன்.

அமைதியில்லாத மனம் எளிதில் பதட்டப்படுகிறது, எளிதில் கோபப்படுகிறது, எளிதில் குழம்பி போய்விடுகிறது, எளிதில் சோர்வு அடைந்து விடுகிறது, எளிதில் தோல்வியை சந்திக்கிறது, எளிதில் விழிப்புணர்வு தவறுகிறது, எளிதில் கவலையில் ஆழ்ந்து விடுகிறது, எளிதில் துன்பப்படுகிறது, எளிதில் கலக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது, எளிதில் நிதானம் இழந்து விடுகிறது, எளிதில் பிரச்சனையில் மாட்டி கொள்கிறது, எளிதில் நோய்வாய்ப் படுகிறது, எளிதில் மற்றவரையும் அமைதியற்றவர்களாக ஆக்கி விடுகிறது. இப்படி பற்பல தீமைகளை அமைதியற்ற மனதால் உண்டாகும் தீமைகள் பட்டியலில் சேர்த்து கொண்டே போகலாம்.

ஆனால், அமைதியான மனம் எளிதில் பதட்டப்படுவது இல்லை, எளிதில் சக்தியை இழப்பது இல்லை. எப்போதும் நிதானமாக செயல்படுகிறது, எப்போதும் விழிப்புணர்வுடன் செயல்படுகிறது, எளிதில் வெற்றிகளை அடைகிறது, அடைந்த வெற்றிகளை தொடர்ந்து தக்கவைத்தும் கொள்கிறது, வருகின்ற எந்த பிரச்சனைகளாக இருந்தாலும் அவைகளை நிதானமாகவும், அறிவு பூர்வமாகவும் அணுகி தீர்வுகளை கண்டறிந்து அதை நிறைவேற்றியும் கொள்கிறது. எப்போதும் சக்தியோடும், உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் செயல்படுகிறது. அமைதியான மனம் எளிதில் நோய்களை ஈர்த்து கொள்வது இல்லை, நல்ல நோய் எதிர்ப்பு சக்தியோடு இருக்கிறது. மனம் அமைதியில் இருப்பதால் வாழ்வில் நல்லவற்றை தேர்ந்தெடுத்து பயன்படுத்திக் கொள்கிறது. வாழ்வில் நல்ல அனுபவ பதிவுகளை நன்கு பதித்துக் கொள்கிறது. அமைதியான மனம் நல்ல நினைவாற்றலுடன் இருக்கிறது. அமைதியான மனத்தால் தான் வாழ்வை இரசிக்க முடிகிறது. வாழ்வை கொண்டாட முடிகிறது. வாழ்வை பயனுள்ளதாக ஆக்கி கொள்ள முடிகிறது. வாழ்வை மகிழ்ச்சியானதாக ஆக்கி கொள்ள இன்பமாக வாழ முடிகிறது என்று அமைதியான மனதின் நன்மைகள் பற்றி பற்பல சொல்லிக் கொண்டே போகலாம்.

நம் மனதை மூன்று பிரிவுகளாக நம் தமிழர்கள், முன்னோர்கள் வகைப்படுத்தி இருக்கிறார்கள். அவை புத்தி, சித்தம், அகம் என்று அதாவது புற மனம், நடு மனம், ஆழ்மனம் என்று பிரித்து வகைப்படுத்தினர்.

தற்காலத்தில் நம் மனதின் அதிர்வுகள் நம் மூளையோடு தொடர்பு கொண்டுள்ளதை வகைப்படுத்தி 'செல்வா மைன்ட் கன்ட்ரோல்' என்ற நிறுவனத்தினர் EEG என்ற கருவியின் மூலமாக (எலக்ட்ரோ என்சபலோ கிராப்) அதிர்வுகளை வகைப்படுத்தி இருக்கின்றனர். நன்கு பதட்டமாக, கலக்கமாக அதிர்வுடன் இருக்கும் மனம், அதோடு தொடர்புள்ள மூளையின் மூலமாக 'பீட்டா' என்ற அலை வீச்சை வெளிப்படுத்துகிறது. அந்த அலை வீச்சு 14ல் இருந்து 40 சைக்கில் ஆகும். 40க்கும் மேல் நம் மனம் அதிர்ந்தால் அது மரணத்தில் கொண்டு போய் விட்டு விடும். அதற்கு அடுத்த அமைதி நிலையில் உள்ள மனதோடு தொடர்புள்ள மூளை 'ஆல்ப்பா' என்ற வீச்சின் மூலமாக 8 முதல் 13 அலை வீச்சை வெளிப்படுத்துகிறது. இந்த அலைவீச்சு அமைதி நிலையில் உள்ள மனதின் அலை வீச்சாகும். அதற்கு அடுத்துள்ள பேரமைதியில் இருக்கும் மனதோடு தொடர்புள்ள மூளையானது 4 முதல் 7 வரையில் உள்ள டெல்டா அலை வீச்சை வெளிபடுத்துகிறது. அதற்கும் அடுத்த நிலையான சமாதி நிலையில் இருக்கும் மனம் 1 முதல் 3 வரையிலான 'தீட்டா' அலைவீச்சு எண்களை கொண்டுள்ளது. இந்த அலை வீச்சு 'தீட்டா' எண்களே நம் மனம் ஆழ்ந்த மன அமைதியில் இருப்பதையும் மிக உயர்ந்த உச்ச நிலையான சமாதி நிலையில் இருப்பதையும் குறிக்கும். இந்த நிலை சமம் + ஆதி = சமாதி என்ற பொருளை குறிக்கும். அதாவது இறை நிலையோடு கலந்த, இறை நிலையின் விரிவை அடைந்த மனநிலையாகும். தெய்வீக தன்மை உள்ள நிலையாகும். மிக மிக அதிக நன்மைகளை கொடுக்கக் கூடிய நிலையாகும். ஆன்மீகத்தில் உயர்ந்த ஞானிகளின் மனநிலையை கொண்டிருக்கும். இந்நிலையை எட்டுவதற்கு தவம், தியானம், போன்றவற்றை தொடர்ந்து, செய்து நம் உடலில் உள்ள ''கர்மா வினை பதிவுகளை'' முழுமையாக நீக்கினாலே இந்நிலை கைகூடும்.

ஆனால் நம் வாழ்வில் நன்கு வாழ்வதற்கும், வெற்றிகளை அடைவதற்கும் 'ஆல்பா', 'டெல்டா' நிலைகளே போதுமானது. இந்த இரண்டு நிலைகளை கொஞ்சம் முயற்சி செய்தாலே அடைந்து விட முடியும். இந்த இரண்டு அதிர்வெண்கள் கொண்ட மன நிலையில் வாழ்வதோடு, நாம் ஏன் படைக்கப்பட்டோம், நாம் இப்பிறவியில் என்ன செய்ய வேண்டும், நாம் நம் வாழ்வை எப்படி முழுமையாக வாழ்வது, நாம் நல்ல உணர்வுகள், நல்ல உணர்ச்சிகளை மட்டும் எப்படி கொண்டு வாழ்வது, நம் மூளை, நம் ஐந்து புலன்களை எப்படி முழுமையாக பயன்படுத்துவது என்பது போன்ற ஆழ்ந்த ஆன்மீக தேடலுடன் கூடிய கேள்விகளை கேட்டு அவைகளுக்கு விடைகளை தேடி அடைந்து வாழ்வதன் மூலமாக இந்த ஆல்பா, டெல்டா, தீட்டா அலை வீச்சு நிலையில், மன அமைதி நிலையில் தொடர்ந்து வாழ முடியும்.

மேலும் கீழ்க்கண்ட காரணிகள் மூலமாகவும், செயல்பாடுகள் மூலமாகவும் மனதை எப்போதும் அமைதி நிலையிலேயே வைத்திருக்க முடியும்.

யோகாசனப் பயிற்சிகளை செய்வதன் மூலமாகவும், உடற்பயிற்சிகளை செய்வதன் மூலமாகவும். உடலுக்கு நல்ல உடற்பயிற்சிகளை உள் அடக்கிய விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலமாகவும், ஆழ்ந்த அமைதியை உண்டாக்கும் தியானப் பயிற்சிகளை செய்வதன் மூலமாகவும், உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்வதன் மூலமாகவும், நல்ல ஆரோக்கியத்தை உண்டாக்கும் சத்துள்ள சாத்வீக தன்மையுள்ள உணவு வகைகளை உண்பதன் மூலமாகவும், பாவப் பதிவுகள் இல்லாமல் புண்ணியப் பதிவுகளை செய்து, பதித்து வாழ்வதன் மூலமாகவும், நன்கு மனத்திற்கு பிடித்த மனிதர்களோடு வாழ்வதன் மூலமாகவும், நன்கு பிடித்த இடங்கள் – பொருட்கள் – விலங்குகள் போன்ற நமக்கு நன்கு பிடித்தவைகளோடு வாழ்வதன் மூலமாகவும், நன்கு பிடித்த செயல்களை – தொழில்களை செய்வதன் மூலமாகவும், தெய்வீக தன்மை உள்ள வாழ்வு வாழ்வதன் மூலமாகவும், அமைதியான மனிதர்களோடு கூட்டுறவு கொண்டு பழகி வாழ்வதன் மூலமாகவும், வாழ்வை நன்கு இரசித்து, கொண்டாடி வாழ்வதன் மூலமாகவும், நல்ல மனிதர்களின் ஆசிர்வாதங்களை – வாழ்த்துகளை பெற்று வாழ்வதன் மூலமாகவும், அமைதியை கெடுக்கும் காரணிகளை எல்லாம் நீக்க செய்து, அமைதியை, பேரமைதியை உண்டாக்கும் காரணிகளை எல்லாம் நம்மோடு வைத்து கொண்டு வாழ்வதன் மூலமாகவும், நல்ல நூல்களை படித்தல், நல்லவைகளை கேட்டல் போன்றவைகளின் மூலமாகவும், நல்ல அமைதியை உண்டாக்கும் கலைகளில் ஈடுபடுவதன் மூலமாகவும், நீச்சல், அமைதியை உண்டாக்கும் அழகிய இடங்கள், மலர்கள், இசைகள், மென்மையான காட்சிகள், படங்கள், பூங்காக்கள், போன்ற பற்பல அமைதியை உண்டாக்கும் காரணிகளை வாழ்வில் தொடர்ந்து இணைத்து வாழ்வதன் மூலமாக ஆழ்ந்த மன அமைதியான வாழ்வு வாழலாம்.

அத்தகைய அமைதியான வாழ்வின் மூலமாக நாம் ஈடுபடும் செயல்களில் வெற்றி மேல் வெற்றியும், மகிழ்ச்சியும் அடையலாம். நம் மகிழ்ச்சியை தொடர செய்வதுடன் நீடித்து தக்க வைத்து கொள்ளவும் முடியும். அத்தகைய மன அமைதியை, நீடித்த மகிழ்ச்சியை நீங்கள் அடைய என் வாழ்த்துக்கள்.

✦ ✦ ✦

தமிழர் பாரம்பரிய கலைகள்

சு. கலைவாணி

முன்னுரை:

தமிழர் கலைகள் எனப்படுபவை தமிழர் வாழ்க்கையைச் சிறப்பித்த கலைகள் ஆகும். ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமன்றித் தகவல் ஊடகமாகவும், கலாச்சாரப் பலகணியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவியாகும்.

பறையாட்டம் அல்லது தப்பாட்டம் :

- ஆதி காலத்தில் தோன்றிய ஆட்ட வகைகளுள் ஒன்று பறையாட்டம். இதனைத் தப்பாட்டம் என்றும் சிலர் கூறுவார்கள். அல்லது தப்பு என்ற இசைக்கருவியை இசைத்து ஆடுவதால் இப்பெயர் பெற்றது. தமிழருடைய பலவகைத் தோல் கருவிகளுள் இதுவும் ஒன்று.
- வேட்டையாடும் சமூகத்தில் தோன்றிய மனிதர்கள் ஒன்று கூடுவதற்கும் விலங்குகளிடம் இருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்கும் பறையைக் கொண்டு ஓசை எழுப்பியதன் மூலம் இவ்வாட்டம் பிறந்தது என்பர்.
- பறையாட்டம் வேகமும், மகிழ்ச்சியும், உற்சாகமும் ஒருங்கே நிறைந்த உணர்ச்சிகளைக் கொண்டிருக்கும். நம்முடைய பழங்காலத்துத் தமிழிலக்கியங்களில் பறையாட்டத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இன்றைக்கும் இந்த பறையாட்டம் இந்தியாவில் உள்ள நமது கிராமங்களில் புத்துயிருடன் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



சிலம்பாட்டம் :

- சிலம்பம் என்பது தமிழர்களின் தற்காப்பு கலை ஆகும். இது தமிழர்களின் வீர விளையாட்டுக்களுள் ஒன்றாகும். இந்த விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் அழைப்பார்கள்.

- சிலம்பாட்டத்தில் மூங்கில் கம்பைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் போன்றவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சிலம்பாட்டத்தில் எதிரி வீசும் கம்பினைத் தடுத்து மடக்குதல் முதலிடம் பெறுகிறது. இந்த சிலம்பாட்டத்தின் தொடக்கத்தை முறையாகக் கற்றுக் கொள்ளக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும்.
- இன்று சிலம்பாட்டத்தை பள்ளிகளில் மாணவர்களுக்கு முறையாக கற்றுக் கொடுக்கிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

கோலாட்டம் :

- சிறிய உறுதியான குச்சிகளை அதாவது கோல்களை ஒன்றுடன் ஒன்று தட்டி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டம் கோலாட்டம் ஆகும். இக்குச்சிகள் வண்ணம் நிறைந்து காணப்படும்.

- குறிப்பாகப் பெண்கள் கூட்டமாக நின்று கோல்களை தாளத்திற்கும், இசைக்கும் ஏற்பத் தட்டி பாடிக்கொண்டு ஆடுவர். காலப்போக்கில் ஆண்களும் கோலாட்டத்தில் ஈடுபட்டனர்.
- கோலாட்டக் கலை தமிழர்களின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் நீண்ட காலமாக இது ஆடப்படுகிறது.
- கோலாட்டம் குழு உணர்வை வளர்க்கும். அது கதைப்பாட்டு அமைப்புடன் உள்ள பாடல்களுக்கு ஆடப்படும்.

கபடி :

- கபடி விளையாட்டு, சடுகுடு அல்லது பலிஞ்சடுகுடு என்றும் அழைக்கப்படுகிறது. இது இன்று ஒலிம்பிக் போட்டியில் இடம் பெற்றுள்ளது. இவ்விளையாட்டை விளையாட நீள் சதுரமான ஆடுகளம் இருந்தால் போதும். இவ்விளையாட்டில் ஒவ்வொரு அணியிலும் ஏழு பேர் இருப்பர்.

- இந்த ஆடுகளத்தை ஒரு நடு கோட்டால் இரண்டாகப் பிரித்து ஒரு பக்கத்துக்கு ஒரு அணியாக இரு அணியினரும் விளையாடுவர். ஒரு அணியில் இருந்து யாரேனும் ஒருவர்

CSR
Committed To Serve...

CHETTINAD SAIRAM LOGISTICS

OUR SCOPE OF SERVICES

• Freight Forwarding • Custom House Agent • Bonded Ware Housing • Transport

FREIGHT FORWARDING

Air Freight : International Network
› Cover major worldwide destinations

Air Freight : Export Consolidation
› Economical Freight Costs resulting from our ability to leverage highly competitive rates from
› Airlines Intensive network of branches and associates enable handling with ease and time - sensitivity

Air Freight : Import Consolidation Network
› Strong regional associates across the globe
› Sound Infrastructure in Technology, Manpower
› Expertise in handling a diverse set of Cargo

Sea Freight : Import
› Complete cycle of door-to-door services for LCL / FCL shipments
› Benefits of rate contract agreements with shipping lines passed on to customer .
› Cost-effective advise on routing, transit times, shipping schedules and services Logistical Advice and assistance

PRODUCTS HANDLED
› CAPITAL GOODS - NEW AND USED MACHINERIES
› INDUSTRIAL SEWING MACHINES,
› MACHINERIES, EQUIPMENTS, COMPONENTS AND SPARES
› TELECOMMUNICATION EQUIPMENTS
› OFFICE FURNITURE AND FIXTURES
› CERAMICS TILES, MARBLES, SANITARY WARE AND SANITARY FITTINGS
› CONSUMER PRODUCTS
› INDUSTRIAL PAINTS
› MEDICAL EQUIPMENTS AND TESTING AND MEASURING INSTRUMENTS

CORPORATE OFFICE : Sea View Towers,12/9 Phase II, 5th Floor, Krishnan Koil Street,
(Opp to Harbour Telephone Exchange) Parrys, Chennai - 600 001.
Tel. : 044 - 4217 1229, E-Mail : CSR_168@yahoo.in

புறப்பட்டு நடுக்கோட்டைத் தொட்டுவிட்டுஒரே மூச்சில் ” கபடி கபடி “அல்லது “ சடுகுடு “ என்று விடாமல் கூறிக்கொண்டே செல்ல வேண்டும்.

- அவர் எதிர் அணியினர் இருக்கும் பகுதிக்குச் சென்று எதிரணியினரை கையால் அல்லது காலால் தொட வேண்டும். பாடி செல்பவர் எதிரணியினர் வசம் பிடிபடாமல் நடுக்கோட்டை தாண்டித் தம் அணியினரிடம் திரும்பி வந்துவிட வேண்டும்.
- அவர் மூச்சு விடாமல் “ கபடி கபடி “ என்று சொல்லிக்கொண்டே எதிரணியினரை தொட்டுவிட்டு பிடிபடாமல் திரும்பி வர வேண்டும். அப்போது தொடப்பட்டவர் ஆட்டத்தை இழப்பார். அதுபோல தம் அணிக்குத் திரும்பும் முன் “ கபடி கபடி “ என்று பாடும் பாட்டை நிறுத்தினாலும் ஆட்டம் இழப்பர்.

பம்பர விளையாட்டு :

- பம்பர விளையாட்டு, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று. பம்பரம் அறிவியல் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது கூம்பு வடிவத்தில் இருக்கும்.
- இவ்விளையாட்டில் ஈடுபடுவதற்குச் சிறுவர்களும், இளைஞர்களும் மிகவும் ஆசைப்படுவர். பம்பரத்தின் தண்டு பாகத்தை ஒரு குறிப்பிட்ட அளவு நூல் கயிற்றால் சுற்றிச் சூழலச் செய்வர்.
- பம்பரம் விளையாடுபவர்கள் புத்திக் கூர்மையை பெறுவார்கள். இது விளையாட்டாளர்களிடம் போட்டித் திறனையும் வளர்க்கும். கை விரல்களுக்கு நல்ல பயிற்சியாக அமையும்.
- பம்பர விளையாட்டு, கூர்மையான பார்வையைப் பெறுவதற்கு உதவி செய்யும்.

நாட்டுப்புற விளையாட்டு கொலை கொலையா முந்திரிக்கா :

- கொலை கொலையா முந்திரிக்கா என்ற விளையாட்டு சிறுவர் சிறுமியர் விளையாடும் ஒரு விளையாட்டு ஆகும். இது அறிவுத் திறனையும் உடல் திறனையும் வளர்க்கும். விளையாட்டின்போது சிறுவர்-சிறுமியர் மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் பங்கு கொள்வர். இதன் மூலம் அவர்களது பாட்டு பாடும் திறனும் அதிகரிக்கும்.

எலியும் பூனையும் :

- எலியும் பூனையும் என்ற விளையாட்டு தொடக்கப் பள்ளியில் படிக்கும் காலத்தில் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்கும் ஒரு விளையாட்டாகும்.

இந்த விளையாட்டு குழு முறையில் விளையாடுவதால் இதன் மூலம் மாணவர்களது ஒற்றுமை பலப்படும்.

- இனிய எளிய தமிழ் பாட்டு பாடி இதனை விளையாடுவார்கள்.

எடுத்துக்காட்டு

“எலியாரே எலியாரே எங்க இருக்க
என் பாட்டுக்கு வலைக்குள்ளே நான் இருக்கேன்
கூட்டத்தாரே கூட்டத்தாரே
கூடி நிற்கும் கூட்டத்தாரே
குனிஞ்சு போயி எலியாரை பார்க்கலாமா
பூனையாரே பூனையாரே
புகுந்து போய் பார்த்துக்கோ
முடிஞ்சாக்கா எலியாரோட சம்பந்தம் பண்ணிக்கோ.”

என்று பாடல் பாடி விளையாடுவார்கள் இவ்விளையாட்டு தந்திரம் மிக்க விளையாட்டாகும். இதனால் சிறுவர்களது அறிவுத்திறனும் சமயோசித புத்தியும் அதிகரிக்கும்.

முடிவுரை :

இதுபோன்று ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இந்த கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன. மேலும் நாடகம், வீதி நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், இசைச் சிற்பம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இது போன்ற பாரம்பரிய விளையாட்டுகளை நாம் என்றென்றைக்கும் அழியாமல் சிறுவர் சிறுமியரின் அறிவையும், உடல் ஆரோக்கியத்தையும் பேணிக்காப்போம்.

ஆஹா!

என்னே நம் மொழியாம் தமிழ்..

ஒரே வரியில் அத்தனை தெய்வங்களையும் வர்ணிக்க முடியுமா?..ம்.. முடியுமே...

"சிரமாறு உடையான்"

1. சிரம் மாறு உடையான் – தலையது மாறி வேழத்தின் சிரம் அமைந்த விநாயகனைக் குறிக்கும்
2. சிரம் ஆறு (6)உடையான் – ஆறு முகம் படைத்த சுப்பிரமணியத்தைக் குறிக்கும்
3. சிரம் ஆறு உடையான் – சிரத்தில் கங்கையைக் கொண்ட சிவனைக் குறிக்கும்
4. சிரம் மாறு உடையான் – சிரமது முன்னும் பின்னும் உள்ள நான்முகனாம் பிரம்மாவைக் குறிக்கும்
5. சிரம் ஆறு (river) உடையான் – காவிரி ஆற்றில் தலை வைத்து சயனித்திருக்கும் ஸ்ரீ ரங்கநாதரைக் குறிக்கும்.

இதைச் சொன்னவர் செய்குத் தம்பி பாவலர் எனும் ஒப்பற்ற தமிழறிஞர்.

Silambam as Mother of Tamil Martial Arts

Dr. Chitra Sivakumar

Introduction



Silambam, a martial art originated in Tamilnadu, India, more than thousands of years back, has been accepted by United Nations as the non-olympic event in January 2019 through efforts of World Silambam Association. One of the Silambam form using staff as a weapon in particular, was once an Olympic event (named singlestick) in 1904 held in St. Louis, USA. Some modified Silambam art forms in other countries has got listed in UNESCO Intangible Cultural Heritage such as Tahteeb of Egypt, Pencak silat of Indonesia and Silat of Malaysia. The lost glory is now getting revived in the place it got originated, Tamilnadu and in other countries that it had spread. Silambam is now learnt for exercise, demonstrations, performing arts and competitions. Papers presenting the outcomes of practising Silambam exists but comparative study of Silambam with similar martial art forms around the world is scanty. This interpretive paper aims to fill that gap by providing various aspects of similar martial arts forms practised in various countries all over the world with similarities and differences thereby deducing that Silambam is the mother of all such martial art forms based on diffusion theory. The 1st Silambam World Cup 2019 held at Kedah, Malaysia, organised by World Silambam Federation (WSF) saw participants from only 5 countries such as India, Bangladesh, Sri Lanka, Malaysia and Singapore though similar forms are practised in various countries in five continents of the world. By partnering with organisations, institutions and federations of such martial art form in other countries, Silambam can become a common sport well-known to the world.

The staff is one of man's earliest weapons and every nation has a history of fighting with the staff. Empty-hand techniques were indications of his basic fighting knowledge, while fighters expertise with a staff indicated an overall experience and proficiency at focusing power through a weapon that lacked a cutting edge. Since the staff has no blade, the weapon requires more power to be effective. While a sword or knife could easily disable an opponent with a single slice, the martial artist with a staff must know how to use his body to produce sufficient power. It was believed if staff techniques could be mastered, then all other long-handled weapons would be easy to manage. From that theory came the saying, "The staff is the grandfather of all long weapons." (White dragon martial arts, 2016).

Silambam, martial art using staff/stick (king of weapons/ Father of All Weapons) as a weapon, originated in southern part of India, state named Tamilnadu, more than thousands

of years back, has been accepted by United Nations as the non-olympic event in January 2019 through continuous efforts of World Silambam Association. One of the Silambam form using staff as a weapon in particular, was once an Olympic event (named singlestick) in 1904 held in St. Louis, USA. Some modified Silambam art forms such as Tahteeb of Egypt (2016), Silat of Malaysia (2019) and traditions of Pencak Silat of Indonesia (2019) and has got listed in UNESCO Intangible Cultural Heritage. But Silambam got recognised very recently. The lost glory is now getting revived in the place it got originated, Tamilnadu and in other countries that it had spread such as Malaysia, Singapore, Sri Lanka and Bangladesh.

Hundreds of practices are included under the title of martial arts, and some of these were passed down in secrecy for many generations (Encyclopedia, 2020). Martial arts originated in the ancient cultures of Asia, and are used today around the world for selfdefense, exercise, health, spiritual growth, law enforcement, and athletic competition (Cleary, 1991). Martial arts also flourished in Occidental countries such as India, China, Japan, Korea, Vietnam, Malaysia, Indonesia and Thailand and many others. Some of them are escrima in the Philippines, pentjak silat in Malaysia, karate in Okinawa and aikido in Japan (Payne, 1981).

Recently, silambam is learnt for combat (presently not done for this purpose), demonstrations – alangara silambam (as revival activity) (J.David Manul Raj,1977), performing arts (with music), exercise (to condition the body), competitions (organised by different institutions and associations) rather than actual fighting. It is as such considered as important cultural artefacts. Papers presenting the outcomes of practising Silambam such as grip strength (Kumaresan, Ali, 2016), endurance (Sreedhar, 2014), muscular strength (Kumar, Sakthiganavel, 2018), silambam practises (Mohanavalli, Sreedhar, Jothy, 2013) comparative study of Silambam with other martial art forms like Kalaripayattu (Gowtham, 2017) or Chinese and Indian martial arts (Wen-bao, Mao, 2008) exists, but study on stick fighting in particular is scanty.

Martial arts teach self-defence, and can improve confidence and self-esteem. When used as exercise, martial arts can improve balance, strength, stamina, flexibility, and posture. They also enhance weight loss and improve muscle tone. On the mental level, martial arts can teach stress management, improve concentration, and increase willpower. Some teachers claim that martial arts can be used as spiritual practices, bringing balance, peace, and wisdom to dedicated practitioners.(Stevens, 1996.) Martial arts cover a broad range of activities that involve fighting techniques, physical exercises, and methods of mental discipline, among other skills. (Encyclopedia, 2020)

This interpretive paper aims to fill that gap by collating various aspects of similar martial arts forms practised in various countries all over the world with similarities and differences thereby deducing that Silambam is the mother of all such martial art forms based on diffusion theory.

The 1st Silambam World Cup 2019 held at Kedah, Malaysia, organised by World Silambam Federation (WSF) saw participants from only 5 countries such as India, Bangladesh, Sri Lanka, Malaysia and Singapore though similar forms are practised in various other countries in five continents of the world. By partnering with organisations, institutions and federations of such martial art form in other countries, Silambam can become a sport well-known to the world.

This paper after giving various details of similar martial arts form in Literature Review, methodology is explained. In analysis part, the whole list is provided and similarities and differences are discussed. Limitations and future areas of research are provided to open the area of cultural comparison between various countries in the martial art field, followed by conclusion.

Meaning of the word Silambam

"Silambu" is a word generally used to denote the sound created by a fast flowing spring, murmur of leaves, the chirping noises of birds etc. It might have been originally used to describe the "whooshing" sound created by the swinging of the long staff and clashing sound of the swords. Thus Silambam became the popular word to describe the martial art that used long staff and various kinds of swords, knives and lances. The related term 'silambattam' often refers specifically to stick-fighting. "Silambam literally means staff. If it is viewed as a separate entity, it consists of just stick sequences. However, when it is taught along with with locks, kicks, throws, and other sequences and weapons, it can be viewed as a bigger and richer form of martial practices." (J.David Manul Raj,1977).

In other parts of South India it is called by different names based on the regional languages spoken in those areas, such as Kolu Varasay or Dhonay Varasay in Karnataka, Kolu Aatta or Karadi Aatta in Andhrapradesh, Neduvari in Kerala Mohanavalli, Sreedhar, Jothy, 2013).

History of Silambam

Silambam, like many Indian art forms, has a sacred story of its origins: taught by Lord Shiva to Lord Murugan or Karthikeya, who passed on his knowledge to Sage Agasthiyar (also called Agathiyar), according to the verses in the poems of Kambu Sutram , meaning 'The Knowledge of the Stick' (Lujiendijk, 16). Tamil Sangam literature Silappadikkaram depicts the practise of Silambam as far back as the 2nd century BC. The Indian community of Malay Peninsula is known to have practised ths art during the 14th century AD. With advent of British rule, this art form was banned by the colonists. During that period, Silambam was common in other parts of the world other than the native India. Once the ban was lifted, it started to flourish in a slow pace with very few masters of this art. Recently the revival of this art form has ensued (J.David Manul Raj,1977).

Even though Silambam Fencing was practiced in villages and hamlets mainly in Tamilnadu, India, its promotion was hindered by the British rule, the then foreign power. Also, its progress was affected by bans of foreign invaders. (Singhal, Guru,1973).

The practise of this ancient art form of Silambam uses different types of weapons used. They are depicted on sculptures in Tamilnadu temples, on seals and coins as well.



Martial art form of Silambam

Silambam is a martial art done using bare hand, staff/stick or variety of weapons.

Bare hand style has several variations as well and each one if them is unique and may differ from one another in grip, posture, footwork, method of attack.

Staff/stick variations exists with length of stick and movement of stick. The height of the stick in silambam depends on the height of the practitioner. An ideal height would be if the stick, when placed straight on the ground, comes to level of the practitioner's eyebrows.

Staff or stick is preferably made from bamboo, but sometimes from other type of woods such as teak or rose chestnut wood. The stick is processed to make it strong and brittle. The length of the staff depends on the height of the practitioner. It should just touch the forehead about three fingers from the head, although different lengths are used in different situations. It usually measures roughly 1.68 meters (five and a half feet). The 3 feet stick called sedikutchi can be easily concealed. Separate practice is needed for staffs of different lengths. The usual stance includes holding the staff at one end, right hand close to the back, left hand about 40 centimeters (16 inches) away. This position allows a wide array of stick and body movements, including complex attacks and blocks.

There are has several variations based on weapon usage such as a thrusting weapon made from deer horns (maduvu, maru), knife (kathi), sword (vaal), stick (kali or kaji), dagger (kuttuval), spiked knuckle duster (kuttu katai), and whips with several flexible and metallic blades (surul pattai), whip (savuku), cudgel or short stick, often wielded as a pair (muchan, sedikuchi), sickle, often paired (aruval), staff with balls of fire or weighted chains on each end (panthukol), native push-dagger with a H-shaped handle (kattari), unarmed Silambam (Kuttu Varisai, utilizes stances and routines based on animal movements such as the Snake, Tiger, elephant and Eagle forms).

In silambam, the feet techniques (suvadu murai) are taught before the staff is handed over to the student because the movements of stick largely depend on the feet movements more than on hand movements.

Martial arts in five continents

Stick fighting is very common all around the world. There are various published papers on stick fighting in various books and journals of the world. From the papers we can identify the stick fighting of Africa called Nguni or Zulu stick fighting (Coetzee, 2002), istunka (Luling 2008, 2002; Eno 1986, 1984), Ethiopian Donga (Tribe,), America's Trinidadian Calinda (Juneja, 1988), South American Venezuelan stick fighting (Ryan, 2016), Brazilian maculêlê Asian Chinese Kung Fu (Wang, 2012), Indonesian pencak silat (Wilson, 2002), Malaysian Berisilat (Farrer, 2006), Phillipeno Arnis (Paman, 2007), Australasia's New Zealand's Mau Rakau (Gilgen, 2012), Europe's Scotlands Singlestick (Emmerick, Adair, 2010), Germany's Fechtschulen (Dupuis, 2015) and many more.

Stick fighting is a game of ancient world. There are many depictions in tombs, buildings and mentions in ancient literature in various countries as given below.

Assyrian

Egypt

China

Portugal

Cambodia

Cross-Cultural Theory

"Culture is man-made part of the enviroment for the satisfaction of some basic or primary, biological, social, psychological and and integrative needs. Every culture has some basic and particular traits, which will not be found in other cultures. But if the traits between two cultures is found to be similar, then it is views by some classical evolutionists due to psychic unity of mankind, ie., human beings all over the world behave and think in similar way under different enviromental conditions. But opposite to this, the cultural diffusionists viewed that this similarity is due to diffusion of traits from highly evolved to less evolved culture or societies. German and American school of diffusion states that inventions occurred at various culture centers and districts

and from there they transfer to other places through migration, cultural contact etc. Diffusion always takes place from high to low cultural stage." (Tripathi, 2013).

Based on the above context, it is clear that Silambam is an art that originated in Tamilnadu and diffused in countries where Tamils had contacts through trade during ancient times. There are many variations in this art form based on the environmental conditions. There is a school of thought that this stick fighting originated in Egypt. In that case, we propose that Tamils were one of the source to diffuse this art to the various occidental countries. History says that this stick fighting was taken to Europe by the European invaders of India.

High context cultures are cultures where people are closely involved with each other and a strong bond exists that extends from family to friends and society in general and as a result there is free and unrestricted flow of information (Hall 1976 and Kim et al, 1998). Based on this, we propose that Tamils are closely bonded people who migrated and transferred their knowledge to others freely. This may be one of the reason that Silambam is still living in the lands conquered by Tamils in ancient time.

Methodology

This paper is written based on facts collected from various websites available on the Internet, viewing images and videos on Internet, referring books, research papers, newspaper contents, interview with members of Silambam organisation and practitioners.

All collected information are analysed and lists of similar martial art forms of Silambam in various countries is made. The weapons such as staff, sword, etc used in Silambam and other martial art forms were compared and listed.

Analysis and Discussion

Based on the studies of various stick fighting all over the world, this paper lists out the different martial art forms with the name, weapons used and the year it originated.

All of these martial arts are performed either one on one or one on two or one on many.

This paper looks at similarities and differences without any bias or chauvinism towards the age or authenticity of different forms in relationship to each other. It is important to remember that we should not necessarily consider "contemporary divisions as historically based facts"(Sieler, 2015).

With the advent of gun, amunitions, missiles and bombs, this stick fighting is not used for combating in the world. It has become a sport or entertainment.

'Every technique properly so-called has its own form. But the same is true of every attitude of the

body. Every society has its own special habits.' (Mauss, 1973).

From the above compilation, we can list the similarities and differences between the stick fighting of different regions.

******

தெய்வ சக்தியை வளர்த்து கொள்ளுதல்

ரஞ்ஜித் சாய்ராம் ஆனந்தர்

ranjith21sairam@gmail.com

இறை நிலையில் படைப்புகளில் மூன்று விதமான சக்திகளைக் காணமுடிகிறது. 1. மிருக சக்தி, 2. மனித சக்தி, 3. தெய்வ சக்தி. இந்த மூன்று சக்திகளும் மனிதர்களிடத்திலும் காணப்படுகிறது. மிருக சக்தி நிறைந்த மனிதர்கள், மனிதத் தன்மையோடும், தெய்வ சக்தி நிறைந்த மனிதர்கள், தெய்வத் தன்மையோடும் காணப்படுகிறார்கள்.

பேராசை, கடும்பற்று, சினம், உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால்கவர்ச்சி, வஞ்சம், ஆணவம், பாவங்கள் நிறைந்த தன்மை போன்ற தீய தன்மைகள் நிறைந்த நிலையில் மிருகத் தன்மை - மிருக சக்தி நிறைந்த மனிதர்கள் காணப்படுகிறார்கள்.

நிறை மனம், ஈகை, பொறுமை, சகிப்பு தன்மை, சமநோக்கு, கற்பு, மன்னித்தல், ஆணவம் அற்ற தன்மை, புண்ணிய பதிவுகள் நிறைந்த தன்மை போன்ற நல்ல தன்மைகள் நிறைந்த நிலையில் தெய்வத் தன்மை - தெய்வ சக்தி நிறைந்த மனிதர்கள் காணப்படுகிறார்கள்.

நாம் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளை அடைந்து, பல வகையில் உயர்ந்து கொண்டே, வளர்ந்து கொண்டே இருக்கிறோம். கற்கால வாழ்க்கையில் இருந்து இப்போது கம்ப்யூட்டர் கால வாழ்க்கைக்கு உயர்ந்து பரிணாம வளர்ச்சி அடைந்து வந்து இருக்கிறோம்.

அதுபோன்றே நாம் நம் சக்திகளில், தன்மைகளிலும் பரிணாம வளர்ச்சி அடைய வேண்டியது மிக முக்கியம். அந்த நிலையில் சிந்திக்கின்ற போது, மிருகத் தன்மையில் இருந்து வளர்ந்து, மனிதத் தன்மையையும், மனிதத் தன்மையில் இருந்து மேலும் வளர்ந்து தெய்வத் தன்மையையும் நாம் அடைய வேண்டியது மிக முக்கியம். தெய்வ தன்மை நிறைந்த நிலையே பரிணாமத்தின் உயர்ந்த நிலையாகும்.

நம் சாதாரண வாழ்வை உற்று நோக்கும் போது யார் வெற்றியும், உயர்ந்த நிலையையும் அடைந்து இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, தெய்வத் தன்மை நிறைந்த மனிதர்களையே உலகம் உயர்ந்த நிலையில் வைத்திருப்பதைக் காணமுடிகிறது. உதாராணமாக, நம் இந்து மதத்தைச் சேர்ந்த சித்தர் பெருமக்கள், ஞானிகள் என்று ஆன்மீகத்திலே, தெய்வீக தன்மையிலே உயர்ந்தவர்களையே உலகம் உயர்ந்த இடத்தில் வைத்து மதிப்பும், மரியாதையும் கொடுத்து பூஜிப்பதைக் கொண்டே தெய்வீக தன்மையின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் நாம் நன்கு உணரமுடியும்.

நடைமுறை வாழ்விலும் யார் வெற்றிகளை அதிக அளவில் அடைகிறார்கள் என்று கூர்ந்து பார்க்கும்போது, மிருகத் தன்மை நிறைந்தவர்களை மனிதத் தன்மை நிறைந்தவர்கள் அதிக அளவில் வெற்றி கொள்வதையும், மனிதத் தன்மை நிறைந்தவர்களை தெய்வத்தன்மை நிறைந்தவர்கள் அதிக அளவில் வெற்றி கொள்வதையும் காணமுடிகிறது. தெய்வத்தன்மையே உயர்ந்த இடத்தையும், அதிக அளவில் வெற்றிகளைப் பெறக்கூடிய தகுதியையும் கொண்டதாக விளங்குவதால், நம் வாழ்வில் அதிக அளவில் தரமான வெற்றிகளைப் பெறவேண்டுமானால், நாமும் நம்மிடத்தில் அதிகமான அளவில் தெய்வ சக்திகளையும், தெய்வத் தன்மைகளையும், தெய்வ குணங்களையும் உடையவர்களாக நாம் நம்மை வளர்த்துக் கொள்வது நாம் உயர்ந்த வெற்றிகளை அடையவும், பெரிய சாதனைகளைச் செய்யவும் மிக முக்கியமான செயலாக செய்யவேண்டியதாகும்.

நாம் எப்படி நம்மிடத்தில் தெய்வீக சக்தியை, தெய்வீக தன்மைகளை வளர்த்துக்கொள்வது என்று சிந்திக்கும் போது, ஆரம்பக்கட்டத்தில், தெய்வ சக்தியை. தன்மையை, நிறைந்து இருக்கும் கோயில்களுக்கு அதுபோன்ற தெய்வீக சக்தி நிறைந்த இடங்களுக்கும் சென்று. குறைந்தது ஒரு மணிநேரமாவது அங்கே அமர்ந்து தியானம் செய்தால், அங்கே இருக்கும் தெய்வீக காந்த அலைகளை நமக்குள் ஈர்த்து கொண்டால் தெய்வீக சக்தியை நிரப்பிக் கொண்டால், அது நம்மை தெய்வ சிந்தனை, தெய்வ சக்தியுடன் ஓரளவுக்கு வாழ உதவும். அந்த தெய்வ தன்மையை மேலும் வளர்த்துக்கொள்ள நல்ல தெய்வ தன்மை நிறைந்த குருவிடம் யோக பயிற்சிகள், தியானப் பயிற்சிகள், ஞானப் பயிற்சிகள், இறைநிலையுடன் கலக்கும் பயிற்சிகள், தற்சோதனை பயிற்சிகள், இறைத்தன்மையை தெய்வத் தன்மையை வளர்க்க உதவும் புத்தகங்களைப் படித்தல், அத்தகைய இடங்கள், இறை சக்தியை பெருக்கும் பொருட்களைப் பயன்படுத்துதல், தெய்வீக குணங்களுடன் வாழுதல், மிருகத் தன்மைகளை விட்டு அடியோடு விலகி இருத்தல், தெய்வத் தன்மைகளை அதிக அளவில் தொடர்ந்து வளர்த்துக்கொள்ளுதல் போன்ற செயல்கள் நம்மை தெய்வசக்தி நிறைந்த மனிதர்களாக்கி வெற்றியடையச் செய்யும்.

தமிழ் ஈன்றெடுத்த சித்தர்களின் வரலாறு

முனைவர் **சக்கரபாணி பட்டாபி**
மின்னஞ்சல் : *yogapattabi@gmail.com.*

முன்னுரை

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி;
எங்கள் தமிழ்க்குடி."

இம் முதுமொழிக்கேற்ப மிகவும் பழம்பெருமையும் ஆதி தோற்றுவாயுடைய தமிழரின் முன்னோடிகள் நமது சித்தர் பெருமகான்கள்.

"நந்தி அகத்தியர், மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்
கந்தியிடைக் காடரும் போகர் புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணவர் காலாங்கி அன்பிற்
சிந்திலழுகண்ணர் அகப்பையர் பாம்பாட்டி
தேரையரும் குதம்பையரும் சட்டை நாதர்
செந்தமிழ்ச்சீர் சித்தர் பதினெண்பேர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம்."

காரண குரு

யார் ஒருவர் இத்தகைய மாற்றங்களை தங்களது சீடர்களின் உடலிலும் ஏற்படுத்திக்காட்டுகிறார்களோ, அவர்களே 'காரண குரு' ஆவார்கள். முற்பிறவிகளில் பக்தி, யோக வழிகளில் முயன்றவர்களுக்கு, இப்பிறவியில் அவர்கள் பிறக்கும்போதே யோகத்திற்கு ஏதுவாகிய 'சிறப்பு நாடி நரம்பு'களுடன் பிறக்கின்றனர். அவர்களுக்கு குழந்தைப் பருவத்தில் இருந்தே ஆன்மிக நாட்டம் மிகுந்து காணப்படும். அத்தகையவர்கள் உடல், உயிர், பொருள் இவற்றின் நிலையற்ற தன்மையை நன்கு உணர்ந்திருப்பார்கள். இதன் பயனாக தங்களது வாழ்வில் எத்தகைய சிரமங்கள், இடர்ப்பாடுகள், இன்னல்கள் ஏற்பட்டாலும் இவற்றைத்தாங்கி வாழ்ந்து வெற்றிபெறுவர்.

நிறைவுரை

இவ்வுலகில் மனித இனம் ஆதியில் தோன்றியது முதல் இன்றளவும் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி மற்றும் அறிவியல் முன்னேற்றத்தின் வாயிலாக, மனிதன் அறிவுத் தெளிவு பெறுவதற்குக் காரணம், 'தேடுதல்'. இத்தகைய தேடலின் உச்சகட்ட அறிவுதான் 'சித்தர் அறிவியல்'. இவை அனைத்திற்கும் காரணம், 'மனித உடல்' தான். எனவே உடலைப்பேணிப் பாதுகாத்து நீண்ட காலம் முழு ஆரோக்கியத்துடனும், புலத்துடனும் வாழ்வது இன்றியமையாதது என்று சித்தர்கள் கருதினார்கள். சித்தர் திருமூலரும் இக்கருத்தையே வலியுறுத்தி,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" என்றும்

"உடம்பை முன்னம் யான் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுள் உருபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான் என்றெண்ணி
உடம்பை யான் இருந்து ஓம்புகின்றேனே" என்றும்

தமது தமிழ் மூவாயிரம் என்ற 'திருமந்திரம் நூலில்' குறிப்பிடுகின்றார்.

இயற்கையான இறைவன், தன்னுடைய படைப்புகளில் மிக உயர்வாக மனிதப் பிறவியை உருவாக்கியுள்ளான். இதன் நோக்கம், இயற்கையோடு இயைந்து தானும் வாழ்ந்து மற்ற உயிர்களையும் வாழவைத்துப் பின் இறைப் பேராற்றலை நினைந்து வணங்குவதாகும். மேலும் இப்பிரபஞ்சத்தில் உயிர் ஆற்றலுடன் (பிராண சக்தி நித்திய அழிவின்மையைப் பெறுவதாகும். எனவே நமது பாரம்பரியத்தை உணர்ந்து போற்றி, அனைத்து நல்வாய்ப்புகளையும் பயன்படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக'. வாழ்க வளத்துடன்.

18 சித்தர்கள்

தமிழ் யோகி திருமூலரின் எண் நிலை யோகம்

முன்னுரை:

தமிழ்மொழியானது, தொன்மையும், இனிமையும் உடைய உயர்தனிச் செம்மொழி என்பது அறிஞர்களின் துணிபு. தமிழுக்கு அணிகலனாக விளங்குவது திருமந்திரம் என்றால் அதுமிகையல்ல. தமிழ்வேதம் என்றும், தமிழ் மூவாயிரம் என்றும் இயம்பப்படுவது திருமந்திரமாகும்.

'திருமந்திரம்', உயர்ந்த வாழ்வியல் கொள்கைகளை ஆன்மீக அறிவியலின் அடிப்படையில் தெரிவிக்கின்றது. உலகியல், உடலியல் இவற்றை உயர் நிலையில் ஆய்வு செய்து அதன் பலனை சாதாரண மனிதனும் பின்பற்றும் வகையில் எளிமைப்படுத்தியுள்ளார் இதனை இயற்றிய, 'திருமூலர்'. யோக நெறியின் மூலம் 'அட்டாங்கயோகம்' என்ற எண்வகை யோகக் கூறுகளை பின்பற்றுவதன் மூலமாக ''எண்பெரும் பேறுகள்'' என்ற உயர்நிலையை அடையும் 'அட்டமா சித்துக்களைப்' பற்றிய தெளிவை அளித்துள்ளார்.

திருமூலரின் வரலாறு:

'திருக்கயிலை' வழியில் வந்தவர் திருமூலர். இவர் நந்தி தேவரின் சீடராவார். திருமூலர், கயிலையில் இருந்து புறப்பட்டு தெற்கே பொதிகை மலைக்கு அகத்தியரைக் காண செல்லும் வழியில் உள்ள திருத்தலங்களைத் தரிசித்து செல்லும் வழியாக சிதம்பரத்திற்கு அருகில் உள்ள 'சாத்தனூர்' என்ற ஊரில், 'மூலன்' என்ற மாடுமேய்ப்பவனின் உடலினுள் 'பரகாயப்பிரவேசம்' செய்யும் நிலைக்கு ஆட்பட்டார். பின்பு அவ்வுடலில் இருந்தே பல காலம் தவமிருந்து 3000 பாடல்களை அருளினார். இதற்குத் 'திருமந்திரம்' என்று பெயர். சைவ அடியார்கள் அறுபத்து மூவரில் ஒருவராக விளங்கிய இவர் இயற்றிய 'திருமந்திரம்' பத்தாம் திருமுறையாக, பன்னிரு திருமுறை நூல்களில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் திருமூலர், 'பதினெண் சித்தர்கள்' வரிசையில் முக்கியமானவராகவும், அகத்தியருக்கு இணையானவராகவும் கருதப்படுகிறார்.

திருமந்திரம்: நூல் அமைப்பு

சைவ ஆகமங்கள் ஒன்பது உள்ளன. இவற்றை திருமூலர், ஒன்பது தந்திரங்களாக பகுத்தளித்துள்ளார். இவற்றில் மூன்றாம் தந்திரமாகிய 'வீராகமத்தில்', அட்டாங்க யோகத்தை அமைத்துள்ளார். இதை திருமூலர், 'அகத்தவம் எட்டு' என்று தலைப்பிட்டுள்ளார். பன்னிரண்டு விதமாக 'யோகங்களை' வகைப்படுத்தியுள்ள திருமூலர், அகத்தவம் – எட்டு

அட்டாங்கயோகத்தைதிருமூலர், இயமம்(தீதகற்றல்), நியமம்(நன்றாற்றல்), ஆதனம்(இருக்கை நிலை), பிராணாயாமம்(வளி நிலை), பிரத்தியாகாரம்(தொகை நிலை), தாரணை (பொறை நிலை), தியானம் (நினைதல்), சமாதி (கலந்திருத்தல்) நொசிப்பு என்று தெளிவிக்கின்றார். இவை அனைத்தையும் கருத்தாழம் மிக்க பாடல்கள் மூலமாக பயிற்சி பெறுபவருக்கு ஏற்ற வகையில் தேன் தமிழில் சமைத்துள்ளார். இவற்றை முறையாக 'தெளிவு குருவின்' வாயிலாக பயின்றால் இறையருள் கைவரப்பெறும். இதன்பயனாக 'அட்டாங்கப்பேறு' பெறும் வழியை காட்டியுள்ள திருமூலர், கூடுதல் பலனாக 'எண்வகைப் பேறுகள்' என்ற 'அட்டமா சித்திகளையும்' பெறவேண்டிய வழிமுறைகளைக் கூறியுள்ளார்.

அணிமா (நுண்மைத் தன்மை)	: அணுபோன்று சூக்கும மாதல்.
இலகிமா (மென்மைத் தன்மை)	: பஞ்சைப் போன்று இலேசாதல்.
மகிமா (பருமைத் தன்மை)	: மலைபோன்று பெரிதாதல்
பிராத்தி (விரும்பிய தெய்தல்)	: எல்லாப் பொருளை தருவித்தல்
கரிமா (விண்தன்மை)	: கணமாதல்
பிரகாமியம் (நிறைவுண்மை)	: விருப்பமுடன் இன்பங்களை பெறல்
ஈசத்துவம் (ஆட்சியனாதல்)	: தத்துவங்களை நடத்துதல்
வசித்துவம் (கவர்ச்சி)	: தத்துவங்களில் கலந்திருத்தல்

ஒரு சாதாரண நிலையில் உள்ள மனிதன் தன்வாழ் நாளில் இத்தகைய சிரமங்களுடன் முழு உழைப்பையும் நல்கி பல்வேறு நிலைகளில் தேறுதல் பெற்று அடைவதுயாது என்று சிந்திக்குங்கால், மனிதன் தன்வாழ் நாட்களில் மனித குலத்தின் உச்சபட்ச பயனாக இறை நிலையை எய்தும் வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்தினால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவனாவான். அத்தகைய உயர்நிலையைப் பெறுவதற்கு மிகவும் அத்தியாவசியமானது மனித உடல்என்றகருவியாகும். மனிதன்தன்உடல், மனமற்றும்ஆன்மாவின்இயல்பை அறிந்து அவற்றை முறையாகப் பயன்படுத்தி உயர்நிலையை அடைவதற்கே மேற்கண்ட பயிற்சி முறைகள் அவசியமானதாகிறது. இக்கருத்தை வலியுறுத்தும் திருமூலர்,

உடலார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - **திருமந்திரம்**

என்று கூறுவதன் மூலமாக மனித உடல் மற்றும் அதன் ஆரோக்கியத்தின் அத்தியாவசியத்தை வலியுறுத்துகிறார்.

முடிவுரை:

யோகக் கலையானது, உடல் மற்றும் மனதின் ஆற்றலை முழுமையாக அறிவியல் முறையில் புரியவைக்கும் "அற்புதக் கருவி" யாகும். இது வாழ்க்கைப் பாதையின் சூக்குமங்களான நோயற்ற வாழ்வு உடலுக்கு உறுதி, மனதிற்கு அமைதி இவற்றை முறைப்படுத்தி அளிப்பதன் மூலம், மனிதன் பெற வேண்டிய உச்சபட்ச எல்லைகளை அடையும் முறைகளை சுலபமாகவும் எளிமைப்படுத்தியும் அளிப்பது திருமந்திரமாகும். இதற்கு படி நிலைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இப்பயணத்தில் முக்கிய படி நிலையான யோகத்திற்கு தமிழ் மொழி வழியில் நின்று திருமந்திரத்தைப் பின்பற்றி வாழ்ந்தால், நந்தியின் அருளால் நாதனாம் பேர் பெற்ற திருமூலரின் அருளாசியுடன் உயர்ந்த யோகப் பேற்றை அடைவது திண்ணம்.

❖ ❖ ❖

Mob : +91 98414 26386

SHREEKARII SOLUTIONS

Solutions for Prosperity and Wellness

Andal Vasthu Consulting | Construction
Architect & Interior Designing | Event Management

5/3, Mahalakshmi Nagar, Bhajanai Koil Street, Ramapuram, Chennai - 600089.
E-mail : info@shreekarii.com **Web :** www.shreekarii.com

மலேசியாவில் தமிழ்க்கல்வி

- சுப்பிரமணி சோணையா
maamandram mhdm.hq@gmail.com

1. வரலாற்றுப் பின்னணி

ஆங்கிலேயர்கள் மலேசியாவையும் (பழைய பெயர் மலாயா) தங்கள் ஆளுகைக்குக் கீழ் வைத்திருந்தனர். அவ்வேளையில் ஆங்கிலேயரால் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், உடல் உழைப்புத் தொழிலாளர்களாக இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டனர். 19ஆம் நூற்றண்டின் மத்தியில் அதிக எண்ணிக்கையிலான இந்தியத் தொழிலாளர்கள் மூன்று வகைகளில் மலாயாவிற்குக் கொண்டுவரப்பாட்டுள்ளனர். அவை பின்வருமாறு:

அ) ஒப்பந்தத் தொழிலாளர்கள் அல்லது சஞ்சிக் (Janji) கூலிகள்

ஆ) கங்காணி (கண்காணி) முறையில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள்

இ) சுய விருப்பத் தொழிலாளர்கள் (independent labourers) - முதலாளிகளால் தெரிவு செய்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள்

துறைமுகத் தொழிலாளர்களாகவும், சாலைகள், இருப்புப்பாதைகள் முதலிய அரசாங்கக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களாகவும், கரும்பு, காப்பி, மிளகுத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவும் வேலை செய்தனர். ஏறக்குறைய 1890-ஆம் ஆண்டுகளில் உலகச் சந்தையில் காப்பியின் விலை படு வீழ்ச்சி கண்டது. அதே வேளை, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கார் தயாரிப்புத் தொழிற்துறை வளர்ச்சியடைந்ததால் டயர்களைத் தயாரிப்பதற்கான ரப்பரின் தேவையும் அதிகரித்தது. ஆங்கிலேயர்கள் அதிகமான ரப்பர் தோட்டங்களைத் திறந்தனர். முப்பதுகளின் தொடக்கத்தில் (1931) மலாயாவில் 624,009 இந்தியத் தொழிலாளர்கள் இருந்துள்ளனர். இவ்வெண்ணிக்கை 1937ஆம் ஆண்டு இறுதியில் 754,849ஆக உயர்ந்துள்ளது (நீலகண்ட ஐயர். K. A., 2004).

2. மலாயாவில் தமிழ்ப்பள்ளிகளின் தொடக்கம்

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வருகைக்குப் பிறகே மலாயாவில் முறைசாராத தமிழ்க்கல்வி (Informal Tamil education) துளிர்விடத் தொடங்கியது. பெரும்பாலான தமிழ்ப்பள்ளிகள் தோட்டப்புறங்களிலேயே அதிகமாக அமைந்திருந்தன. தொடக்கத்தில் இப்பள்ளிகள் அரசாங்க உதவியின்றி முதலாளிகள், தனிநபர்கள், கோவில்கள் மற்றும் சமயச் சார்புடைய இயக்கங்களினால் நிறுவப்பட்டன. அவற்றுள்

பினாங்கில் 1816-இல் ரெவரெண்டு ஹட்சிங்ஸ் (Rev. R.Hutchings) அவர்களால் முதன் முதலில் ஃபிரி ஸ்கூல் (Free School) என்ற ஆங்கிலப்பள்ளியின் ஒரு பிரிவாகத் தமிழ் வகுப்பு தொடக்கப்பட்டது.

மலாயாவில் தமிழ்ப்பள்ளிகளின் கட்டாய வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியது 1923 -ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் அமல்படுத்தப்பட்ட (Labour Ordinance) தொழிலாளர் சட்டமாகும். இச்சட்டம் ஏழு முதல் பதினான்கு வயதுள்ள பத்துப் பிள்ளைகள் இருப்பின், அத்தோட்ட நிர்வாகம் கட்டாயமாகப் பள்ளிகளை நிறுவ வேண்டும் என வலியுறுத்தியது. தோட்ட முதலாளிகள் வேறு வழியின்றி பள்ளிகளை அமைத்துத்தர வேண்டிய கட்டாயச் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். இது தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு மேலும் வழி வகுத்தது. ஐக்கிய மலாய் மாநிலங்களான (Faderated Malay States) சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பேராக், பகாங் ஆகியவற்றில் 1925-ஆம் ஆண்டில் 235 தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. அவற்றில் 8153 மாணவர்கள் பயின்றனர். அடுத்த ஐந்து ஆண்டிற்குள் (1930) பள்ளிகளில் எண்ணிக்கை 333-ஆக உயர்ந்தது. மாணவர்களின் எண்ணிக்கையும் 12,640-ஆக உயர்வு கண்டது (அரசரத்தினம், 1970).

3. விடுதலைக்குப் பின் தமிழ்க்கல்வி

நாடு விடுதலை அடையும் தறுவாயில் (ரசாக் அறிக்கை,1956), மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளையும் பயிற்று மொழிகளாகக் கொண்ட தொடக்கப்பள்ளிகள் நிலைத்திருக்கும் என முடிவெடுக்கப்பட்டது. அத்தருணத்தில் மலாயாவில் 888 தமிழ்ப் பள்ளிகள் இருந்தன (அரசரத்தினம், 1979). பின்னர் ரப்பர் தோட்டங்களில் இருந்த சிறு சிறு பள்ளிகள் கூட்டுப் பள்ளிகளாக இணைக்கப்பட்டன. தற்பொழுது (2021) தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 527ஆக உள்ளது.

ஆசிரியர்களின் தேவையை நிறைவு செய்ய அரசாங்கத்தால் 1938 -ஆம் ஆண்டு முதல் தமிழ் போதனாமுறை வகுப்புகள் (Normal Training Classes) தொடக்கப்பட்டன. அதன் பின்னர் 1959ஆம் ஆண்டு முதல் படிப்படியாக ஆறு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. கடந்த 2007ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தமிழ் ஆசிரியர்களுக்கான இளங்கலை பட்டப் படிப்பு மூன்று ஆசிரியர் கல்விக்கழகங்களில் (Teacher Education Institute) வழங்கப்படுகிறது. பயிற்சி ஆசிரியர்களுக்கு இலவசமாகப் பயிற்சி வழங்கப்படுவதோடு அவர்களுக்கெனப் படித்தொகையும் (allowance) வழங்கப்படுகிறது.

4. தமிழ்ப்பள்ளிகளில் கல்வித் தரமும் மாணவர்களின் எண்ணிக்கையும்.

அரசாங்கத்தின் தேசிய கல்விப் பெருந்திட்டத்தில் (National Education Blue Print 2013 - 2025) தமிழ்ப்பள்ளி மாணவர்கள் 2013ஆம் ஆண்டுக்கு முந்திய நான்கு ஆண்டுகளில், மற்ற மொழிப்பள்ளி மாணவர்களின் அடைவு நிலைகளோடு ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்க மேம்பாடு கண்டுள்ளனர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்ப்பள்ளி மாணவர்கள் பன்னாட்டு அளவில் நடத்தப்படும் கல்வி சார்ந்த பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை சூடி வருவது மலேசியத் தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது. தற்பொழுது தமிழ்ப்பள்ளிகளில் 52% இந்திய மாணவர்கள் பயின்று வருகின்றனர். எஞ்சியுள்ள 48% மாணவர்கள் தேசிய பள்ளிகளிலும் சீனப்பள்ளிகளிலும் பயின்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

5. இடைநிலைப் பள்ளிகளில் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்

தொடக்கப்பள்ளியில் ஆறு ஆண்டுகள் தமிழ் வழி கல்வி கற்ற மாணவர்கள் தங்களுடைய பதிமூன்றாம் அகவையில் இடைநிலைப்பள்ளியில் கல்வியைத் தொடர்வர். இங்குப் பயிற்றுமொழியாக தேசிய மொழி (மலாய் மொழி) பயன்படுத்தப்படுகிறது. இங்கு தமிழ் கற்க விரும்பும் 15 மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கென தமிழ்மொழி பாடம் நடத்தப்படுகிறது. இது அரசாங்கத் தேர்வுகளான மலேசிய கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education) பல்கலைக்கழக நுழைவு சான்றிதழான மலேசிய உயர்பள்ளிச் சான்றிதழ் (Malaysian Higher School Certificate) ஆகியவற்றில் ஒரு பாடமாகவும் விளங்குகிறது.

6. பல்கலைக்கழகங்களில் தமிழ்

மலாயாப் பல்கலைக்கழகத்தில் கலைப்புலத்தில், இந்திய ஆய்வியல் துறையில் தமிழ் இலக்கியம் சார்ந்த இளங்கலை முதல் முனைவர் பட்டங்கள் வரையும் அதே பல்கலைக்கழகத்தில் மொழி & மொழியியல் புலத்தில் தமிழ் மொழியியலில் இளங்கலை முதல் முனைவர் பட்டங்கள் வரையும் கற்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இடைநிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர்களுக்கான இளங்கலை முதல் முனைவர் பட்டங்கள் வரையும் வழங்கப்படுகின்றன.

******

மன அழுத்தத்தை வெற்றி கொள்ளுதல்

Dr. ஆனந்தர் சந்திரகாசன்
M.A.,M.D(acu).,Ph.D.,D.F.Tech.,
Philosopher, Trainer, Counselor, Healer
Email:anandarchandrahasan@gmail.com

வெற்றிகளை அடைய விரும்புபவர்கள், தங்களின் மனஅழுத்தத்தையும் வெற்றி கொள்பவர்களாக விளங்குகிறார்கள். மனஅழுத்தம், மனஇறுக்கம், மனச்சுமை போன்ற பல பெயர்களில் மனதில் உண்டாகும் ஒரு பலவீனமான, தீய நிலைப்பாட்டை அழைக்கின்றோம். உலகில் உள்ள பல்வேறு குழப்பமான சூழ்நிலைகளால் மனஅழுத்தத்தை உண்டாக்கும் காரணிகள் உண்டாக்குகின்றன. மனதை வலிமையானதாக ஆக்குவதன் மூலமாகவும், மன அழுத்தத்தைப் பற்றிய அறிவை நன்கு வளர்த்துக்கொள்வதன் மூலமாகவும் சுய கட்டுப்பாடுகள் மூலமாகவும் மனஅழுத்தத்தை வெற்றிக்கொள்ள முடியும்.

மனம் தான் இதுவரையில் சந்திக்காத சூழ்நிலையை, மனிதர்களை, பொருட்களை, செயல்களை, கருத்துக்களை, காட்சிகளை என்று புதிதாக எதையும் சந்திக்கின்றபோதும், மனம் அனுபவம் என்ற பக்குவநிலையில் இல்லாதபோதும், அது அழுத்தத்திற்கு, சுமைக்கு, இறுக்கத்திற்கு, தடுமாற்றத்திற்கு உள்ளாகிறது. அதையே நாம் மனஅழுத்தம் என்றும், டென்ஷன் என்றும், *Stress* என்றும் பல பெயர்களில் அழைக்கின்றோம்.

அந்த அழுத்தத்தின் அளவு எல்லை தாண்டி போகும் நிலையில் பல்வேறு நோய்களை உடலிலும், மனதிலும் உண்டாக்குகிறது. முக்கியமாக நம்மை செயல் இழக்கச் செய்து விடுகிறது. அந்த நிலையில், நாம் தொடர்ந்து வாழ்ந்து வந்தால், மன அழுத்தம் என்று சொல்லப்படுகின்ற மனநோய்க்கு, நாம் ஆளாக வேண்டிய நிலைக்குக்கூட நம் மனம் தள்ளப்படுகிறது. ஆதலால் நம் மன அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலையும், அதை வெற்றிகொள்ளக் கூடிய ஆற்றலையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியது நாம் வெற்றிகளை அடைய பெரிதும் உதவும்.

நாம் நம்வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்றால், நாம் நம்மை நல்ல பழக்கங்கள், நல்ல வழக்கங்கள், நல்ல ஒழுக்கங்கள் ஆகியவை மூலமாக நம்மை நாம் பயிற்றுவிக்கும் நிலையிலும், பெற்ற பயிற்சிகளை, அனுபவங்களை வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிக்கும்போதும் நம்மை நாமே ஓரளவிற்கு மன அழுத்தத்திற்கு உட்படுத்துகிறோம். அத்தகைய நன்மையை விளைவிக்கும் மன அழுத்தங்களை எல்லாம் நல்லமன அழுத்தங்கள் என்று நாம் வகைப்படுத்தலாம். அதேசமயம் நமக்கு நன்மை பயக்காமல், தீமைகளை உண்டாக்கும் மன அழுத்தங்களை எல்லாம் தீய மன அழுத்தங்கள் என்றும் மன அழுத்தத்தையே இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

நன்மையை உண்டாக்கக்கூடிய நல்ல மன அழுத்தங்கள் எவை என்று பார்க்கும்போது, எப்போதும் உண்மையை பேசுவது, நேர்மையாக நடந்துகொள்வது, காலம் தவறாமல் செய்வது, சரியாக செய்வது, முறையாகச் செய்வது, அதிக நன்மைகளை உண்டாக்குவது, கால அட்டவணையில் செயற்படுத்துவது, நல்ல பழக்க, வழக்க ஒழுக்கங்களை கட்டிக்காப்பது போன்ற நம் வாழ்விற்கு, வெற்றிக்குத் தேவையானவற்றை எல்லாம் தொடர்ந்து செய்யும்போது, அவற்றை கட்டிக்காக்கும் போதும் நம் உடலும் மனமும் ஒரு வித அழுத்தத்திற்கு உட்படுகிறது. ஆனால் அதனால் நாம் நன்மைகளை மட்டுமே அடைகிறோம். ஆதலால் இத்தகைய மன அழுத்தம் நமக்கு தேவைதான். அதனால்தான் நாம் வெற்றிகளைத் தொடர்ந்து அடைய முடியும். இத்தகைய மன அழுத்தங்களையே நாம் நன்மையான மன அழுத்தங்கள் என்றும் வகைப்படுத்தலாம் அல்லது ஒழுக்கமான உயர்ந்த வாழ்வு என்றும் பெருமையாக எண்ணலாம்.

ஆனால், நம் வாழ்வில் நாம் சந்திக்கின்ற பல்வேறு விஷயங்களை நமக்கு பயனை விளைவிக்காத நிலையில், அதேசமயம் நம்மை மன உளைச்சலுக்கு உள்ளாக்குமானால், மனச்சுமைக்கு, மன அழுத்தத்திற்கு உள்ளாக்குமானால், அவற்றை நாம் தீய மன அழுத்தங்கள் என்று பிரிவில் வகைப்படுத்தலாம். உதாரணமாக ஈ, எறும்பு, கரப்பான்பூச்சி, கொசு இவற்றைப் பார்த்துப் பயப்படுவது, மற்றவர்கள் ஏதாவது நினைப்பார்களோ என்று குழம்புவது, கவலையில் ஆழ்ந்து விடுவது, குழப்பத்தில் ஆழ்ந்து விடுவது, கடுமையானவைகளில் மாட்டிக்கொள்வது, பிரச்சினைகளில் மாட்டிக்கொள்வது, தெளிவில்லாமல் இருப்பது, திருட்டு, ஊழல் சுரண்டுதல், பொய் பேசுதல், போலியாக இருத்தல், அளவுக்கு அதிகமான பணிகளை எடுத்துக்கொண்டு திணறுவது, தீய பழக்கங்களில் அடிமையாகி அதில் இருந்து விடுபட முடியாமல் கஷ்டப்படுவது, தீய மனிதர்களுடனான தொடர்புகளின் காரணமாக உண்டாகும் பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பது, ஏமாற்றம் அடையும் போது, ஏமாற்றும் போதும், கூட்டத்தில் மாட்டிக்கொண்டு தவிப்பது, குழப்பத்திற்கு உள்ளாவது, அளவுக்கு அதிகமான, எல்லைக்கு மீறிய செயல்களை செய்யும்போது, எதிர்பாராமல் திடீர் என்று எதையும் சந்திக்கும் போது, புதிய சூழ்நிலைகளை புதிய மனிதர்களைச் சந்திக்கும் போது, இயற்கை இடர்பாடுகளைச் சந்திக்கும்போது, நாம் எதிர்பார்த்து நடக்காமல் போகும் போது, பொருளாதாரம் இல்லாதபோது என்று பல பல காரணிகளைச் சொல்லலாம். இத்தகைய காரணிகளை சந்திக்கும்போது, நம் மன அழுத்தத்திற்கு உட்பட்டு அதனால் சோர்வு அடைந்து செயல்படாத நிலையை நம் மனம் அடையுமானால், அத்தகைய காரணிகளை தீய மன அழுத்தத்திற்கு உட்பட்டது என்று வகைப்படுத்தலாம். அத்தகைய தீய மன அழுத்தங்களை தவிர்த்து நல்ல மன அழுத்தங்களுக்கு, அதாவது சுகமான சுமைகளுக்கு மட்டும் இடம் தந்து வாழ்வில் உயர்ந்து விளங்குவோமாக. வாழ்க வளமுடன்....

CONTACTLESS

AUTOMATIC

SANITIZER

DISPENSER

STAY NATURALLY SAFE

BANKS | CORPORATES | IT PARKS | TEMPLES | SHOPPING MALL | SUPER MARKETS | SCHOOLS | COLLEGES.

CONTACTLESS

AUTOMATIC

SANITIZER

DISPENSER

EQUIPMENTS & LEASING

Introducing Fragrant Sanitizers with Automatic Dispensing!!

A naturally fragrant sanitizing way to welcome your customers and guests!

A sensor driven custom designed No Touch – No Waste Sanitizer Dispenser, that dispenses alcohol based sanitizing hand rub enriched with soothing natural fragrances, that finds utility in Hospitals, Banks, Government Offices, Hotels, IT Parks, Super Markets, Schools, Colleges, Shopping Malls, Corporate Spaces, Conventional Centres, Temples, Spiritual Centres and all other commercial establishments

DISPENSER FEATURES :

- MODE OF OPERATION: AUTOMATIC
- READY TO DISPENSE: GREEN LIGHT
- DISPENSING QUANTITY: 3 ML PER READ
- DIMENSIONS: 350MM X 350MM X 1200MM (L X B X H)
- INSTALLATION: PLUG AND PLAY
- SANITIZER TANK CAPACITY: 27 LTRS (INCLUSIVE OF A 2 LTRS RESERVE)
- PORTABILITY: ROLLER BASED WITH LOCKING OPTION FOR EASY
- MOVEMENT WITHIN PREMISES
- POWER USAGE: 5W
- RESERVE SANITIZER QUANTITY: 2 LTRS
- LOW LEVEL INDICATOR: RED LIGHT
- POWER SUPPLY: NORMAL & PROVISION FOR BATTERY BACK UP
- WARRANTY: 1 YEAR FROM THE DATE OF INSTALLATION

SANITIZER SPECIFICATIONS:

- EXTRA NEUTRAL ALCOHOL EQUIVALENT TO ETHANOL – 70% V/V
- DENATURED ALCOHOL
- ADVANCED FORMULA ENRICHED WITH NATURAL FRAGRANCES
- GMP CERTIFIED PRODUCT AND PRODUCTION FACILITY

NOW SANITIZE YOUR HANDS
WITH A FRAGRANT SMILE

For Inquiry:
+91 7550005813 | 7550005816
email : snscustomercare5@gmail.com

இன்றும் வாழ்ந்து வரும் சோழர் வாரிசுகள் தொடரும் தமிழர் பாரம்பரியம்

ஆறு. அண்ணல்,
எழுத்தாளர், வரலாற்று ஆய்வாளர்
aruannal@gmail.com

முன்னுரை:

இன்று மனிதர்கள் வசிக்காத ஒரு சிறிய தீவு, ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகராக இருந்தது என்றால் பலருக்கும் வியப்பாக இருக்கும். தீவுக்கோட்டை என்ற அந்தத்தீவைப் பற்றியும், அங்கிருந்து ஆட்சி புரிந்த சோழர்கள் மற்றும் தற்போதும் வாழ்ந்து வரும் அவர்களுடைய வாரிசுகளைப் பற்றியும் ஆராய்கிறது இந்த கட்டுரை.

தீவுக்கோட்டை:

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டம் கொடியம்பாளையம் ஊராட்சியில் கொள்ளிடம் ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது தீவுக்கோட்டை. சிதம்பரத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செல்லும் சாலை வழியாக சுமார் பத்து கிலோ மீட்டர் சென்றால் இத்தீவை அடையலாம்.

ஒருபுறம் கொள்ளிடம் ஆறும், மற்ற புறங்களில் ஆழமான நீர் நிலையுடன் கூடிய மாங்குரோவ் காடுகளும் காணப்படுகின்றன. கடல் பகுதியில் இருந்து படகு மூலமாகவும் இத்தீவுக்கு வரமுடியும். சுமார் பத்து கிலோமீட்டர் சுற்றளவு கொண்டதாக இத்தீவு காணப்படுகிறது. தீவெங்கும் கோயில்களின் சிதைவுகள், 12 முதல் 18 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட செங்கற்கள், உடைந்த பீரங்கி குண்டுகள் போன்றவற்றைக் காணமுடிகிறது. தீவில் உள்ள காளி மற்றும் கோட்டையா கோயில்கள் தற்போதும் மக்கள் வழிபாட்டில் இருந்து வருகின்றன. கோட்டையா கோயிலின் பின்புறம் பழைய செங்கற்களால் கட்டப்பட்ட இரண்டு முதல் இரண்டரை அடி அகலம் கொண்ட கோட்டைச் சுவர்களின் இடிபாடுகள் உள்ளன.

தீவுக்கோட்டைக்கு வெகு அருகிலேயே கடலும் சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் பிச்சாவரமும் அமைந்துள்ளன. தீவுக்கோட்டை என்ற இந்த தீவு, தேவிக்கோட்டை, தீவுப்பட்டினம், ஜலக்கோட்டை என்றெல்லாம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. கி.பி.16, 17 மற்றும் 18 -ம் நூற்றாண்டுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக தீவுக்கோட்டை விளங்கியுள்ளது.

தீவுக்கோட்டை சோழகன்:

தஞ்சையை ரகுநாத நாயக்கர் ஆட்சி செய்தபோது (கி.பி. 1600 - 1645) தீவுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு சோழகன் என்பவர் ஆண்டுள்ளார்.

இவர் செஞ்சி நாயக்கரான கிருஷ்ணப்ப நாயக்கருக்கு அடங்கிய சிற்றரசர். அண்டை நாடுகளெல்லாம் சோழகனுக்கு அஞ்சி நடுங்கியுள்ளன. சோழகன், போர்த்துகீசியர்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். போர்த்துகீசிய பாதிரியார் பிமெண்டா (Father Pementa) என்பவர் சோழகன் பற்றி கீழ்க்கண்ட குறிப்புகளை எழுதியுள்ளார்.

சோழகனை சாலவாச்சா(Salavacha) என்றும் பிமெண்டா குறிப்பிடுகிறார். இச்சொல் சோழராஜா என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். “கொள்ளிடத்தின் முகத்துவாரத்தில் உள்ள தேவிக்கோட்டையை சோழகன் ஆண்டு வந்தார். மிக உயர்ந்த தலைமைப்பதவி வகிப்பவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார். பாதிரியார் பிமெண்டா செஞ்சியில் தங்கியிருந்த போது, சோழகனின் 14 வயது மகன், அறிஞர்கள்(Nobels) உள்ளிட்ட பலருடன் வந்திருந்து கிருஷ்ணப்ப நாயக்கரை சந்தித்தார். கிருஷ்ணப்ப நாயக்கரின் பெயரை தனது பெயருக்கு பின்(Suffix) போட்டுக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும், தங்க நாற்காலி வேண்டுமென்றும், பல நிலப்பகுதிகள் (Several Pieces of Land) வேண்டுமென்றும் சோழகனின் மகன், கிருஷ்ணப்ப நாயக்கரை கேட்டுக்கொண்டார். பின்னர் விடை பெற்றுச்சென்ற இளம் சோழகனை, பாதுகாப்பாக அவனது தந்தையின் கோட்டைக்குக் கொண்டு போய் சேர்க்குமாறு கிருஷ்ணப்ப நாயக்கர் உத்தரவிட்டார். இந்த இளம் சோழகன் ஜேசு சபையினருக்கு நண்பராக விளங்கினார். 80 வயது கொண்ட சோழகன் முழு அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார்(Absolute authority among his subjects). ஜேசு சபையினரை பெருங்கருணையோடு வரவேற்றார்.” இவ்வாறு பாதிரியார் பிமெண்டாவின் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

இயற்கையாக அமைந்த கொள்ளிடம் ஆற்றையே சோழகன் அகழியாக பயன்படுத்தியுள்ளான் என்பதை பிமெண்டா உறுதிப்படுத்துகிறார். பாதிரியார் டூ ஜெரிக் (Du Jarric) என்பவர் எழுதிய கடிதங்களில் இருந்து தேவிக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு செஞ்சி ராஜ்யத்தின் தென்கிழக்கு பகுதிகளை சோழகன் ஆட்சி செய்தான் என்பதை அறியமுடிகிறது. அப்படியானால் சிதம்பரம், புவனகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளை சோழகன் ஆண்டிருக்க வேண்டும்.

சிதம்பரம் பகுதியில் சோழர்கள் தொடர்ந்து ஆண்டு வந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. “செஞ்சி நாயக்கர் கோப்பண்ணா என்பவர்

சிதம்பரம் நடராஜர் கோயிலில் கோவிந்தராஜன் சிலையை அமைத்திருந்தார். அதனை சோழமன்னன் கடலில் வீசியெறிந்துவிட்டார். அந்த கோவிந்தராஜ பெருமாள் சிலையை சிதம்பரம் கோயிலில் செஞ்சி மன்னன் கிருஷ்ணப்ப நாயக்கன் பிரதிஷ்டை செய்தான்" என்று தஞ்சை நா.எத்திராஜ் அவர்கள் எழுதிய தமிழக நாயக்க மன்னர்களின் வரலாறு என்ற நூலின் 166-ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

கிருஷ்ணப்ப நாயக்கன் காலத்தில் வாழ்ந்த சோழ மன்னன், தேவிக்கோட்டை சோழகனே. சிதம்பரம் அவனது ஆட்சியில் இருந்ததால் தான் நடராஜர் கோயிலில் வைக்கப்பட்டிருந்த பெருமாள் சிலையை கடலில் வீசியிருக்கிறான். தஞ்சை ரகுநாத நாயக்கர், தேவிக்கோட்டையைக் கைப்பற்றியதைப் போலவே புவனகிரி கோட்டையையும் கைப்பற்றிய செய்தி தஞ்சை நாயக்க மன்னர்களின் வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ரகுநாதப்யுதயம்:

தேவிக்கோட்டை சோழகனைப் பற்றி ரகுநாதப்யுதயம் *(Raghunathabhyudhayam)* என்ற நூலும் கூறுகிறது. இது தஞ்சை ரகுநாதநாயக்கரின் அவைக்கள புலவர்களில் ஒருவரான ராமபத்திராம்பா *(Ramabhadramba)* என்ற பெண்பாற்புலவரால் எழுதப்பட்ட நூல்.

ரகுநாத நாயக்கரை பாட்டுடைத் தலைவராகக்கொண்டு எழுதப்பட்ட இந்த நூலின் 288-வது பாடல் கீழ்கண்டவாறு கூறுகிறது. ரகுநாதன் தன்னுடைய அமைச்சர்களிடம் மூன்று முக்கிய குறிக்கோள்களைத் தெரிவித்தான்.

தீவுக்கோட்டை சோழகனை நிர்மூலமாக்குவது. யாழ்ப்பாணத்தில் இருந்து எதிரிகளை விரட்டுவது. விஜய நகரத்தின் புதிய அரசருக்கு முடிசூட்டுவது. இதற்குத் தயாராக இருக்குமாறு தன்னுடைய தளபதிகளுக்கு ரகுநாதன் உத்தரவிட்டான். தான் நாட்டில் இல்லாதபோது நாட்டை நிர்வாகம் செய்வதற்காக உரிய அதிகாரிகளை நியமித்தான். பின்னர் தனது படைகளுடன் காவிரி ஆற்றின் கரை வழியே கும்பகோணத்தை அடைந்தான். அங்கு கடவுளை வணங்கிவிட்டு கடலோரத்தில் இருக்கும் சோழகனின் கோட்டையை நோக்கிச் சென்றான். சோழகன் தானே ஒரு போர்வீரன் என்றாலும் ரகுநாதனின் சாகசங்களை*(Heroism)* கண்டு பயந்திருந்தான். செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கனிடம் உதவி கேட்டான். இதுபற்றி தனது அமைச்சர்களிடம் கிருஷ்ணப்ப நாயக்கன் ஆலோசனை செய்தான். ஒருமுறை விஜயநகர அரசரால் கைது செய்யப்பட்டிருந்த கிருஷ்ணப்ப நாயக்கரை, ரகுநாத நாயக்கர் தலையிட்டு விடுதலை செய்ய வைத்தார், எனவே ரகுநாதனுக்கு எதிராக படையெடுக்க வேண்டாம் என்று கிருஷ்ணப்ப நாயக்கனுக்கு அமைச்சர்கள் அறிவுரை கூறினார். இதனைப் புறக்கணித்த

கிருஷ்ணப்ப நாயக்கன் தேவிக்கோட்டையை நோக்கி படை நடத்திச் சென்றான். சோழகன் ரகுநாதனுக்கு அடங்க மறுத்து எதிர்த்து போரிட்டான். ரகுநாதன் படகுகளை பாலம்போல் அடுத்தடுத்து நீரில் மிதக்கச் செய்து அதன் வழியே, யானை மீதேறி தீவுக்குள் சென்றான்.

தீவுக்குள் இருந்த கோட்டையை ரகுநாதனின் படைகள் முற்றுகையிட்டன. சோழகனின் கோட்டைக் காவல் படை, நெருப்பையும் கற்களையும் மழையாகப் பொழிந்து ரகுநாத நாயக்கனின் படைகளுக்கு பெருத்த சேதத்தை உண்டாக்கின. இதனால் கோபமுற்ற ரகுநாத நாயக்கன், ஏணிகள் மூலம் கோட்டைக்குள் புகுந்து செல்ல உத்தரவிட்டான். எதிரிகளின் கைகளில் கோட்டை சிக்கியவுடன், சோழகன் தப்பியோட முற்பட்டான். சோழகனிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு அவனை உயிரோடு விடுமாறு ரகுநாதன் உத்தரவிட்டான். ஆனால், சோழகனுக்கு எந்த கருணையும் காட்ட வேண்டாம் என்றும், அவனை சிறையிலடைக்க வேண்டும் என்றும் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டனர். அதன்படி சோழகன் சிறையில் அடைக்கப்பட்டான். செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கன் தப்பியோடி தன் தலைநகரையடைந்தான். இவ்வாறு ரகுநாதப்யுதயத்தின் 288 வது பாடலில் கூறப்பட்டுள்ளது. மேலும், ரகுநாதநாயக்கனின் அரசவைக்கு வந்த பிராமணர்கள், சோழகனின் அட்டூழியங்களைப் பற்றிக் கூறினார்கள் என்றும் வழிப்போக்கர்களுக்கும் பெண்களுக்கும் சோழகன் தொந்தரவு கொடுத்தான் என்றும், ரகுநாத நாயக்கனுக்குக் கீழ்ப்படியவில்லை என்றும் ராமபத்ராம்பா தனது நூலில் கூறியிருக்கிறார். தாகத்தில் தவிக்கும் மக்களுக்கு காய்ச்சிய ஈயத்தைக் கொடுத்து குடிக்கச் செய்தான் என்றும், கைதிகளின் உடலில் கூரிய ஊசிகளை செலுத்தி சித்ரவதை செய்தான் என்றும், தனது அகழியில் வளர்க்கப்பட்ட முதலைகளுக்கு கைதிகளை உணவாக அளித்தான் என்றும் ராமபத்ராம்பா பாடியுள்ளார். ராவணனுக்கு பத்து தலை, சோழகனுக்கு ஒரு தலை, இதைத் தவிர ராவணனுக்கும் சோழகனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றும், புகழ்பெற்ற வீரர்களான விட்டலா போன்றவர்களால் கூட சோழகனை வெல்ல முடியவில்லை என்றும், சோழகன் பைரவரை வழிபட்டு வந்தான் என்றும் ரகுநாதப்யுதயத்தில் கூறப்பட்டுள்ளது.

சாகித்ய ரத்நாகரம் :

தேவிக்கோட்டை சோழகனைப் பற்றிக் கூறும் இன்னொரு நூல் 'சாகித்ய ரத்நாகரம்'. இது ரகுநாத நாயக்கரின் அவைக்களப் புலவர்களில் ஒருவரான யக்ஞநாராயண தீட்சிதரால் எழுதப்பட்டது. இந்நூல் கீழ்கண்டவாறு சோழகனைப்பற்றி கூறுகிறது. "ரகுநாத நாயக்கர், காலாட்படை, குதிரைப்படை, யானைப் படைகளுடன் தனது தலைநகரில் இருந்து புறப்பட்டார். கோவிந்த தீட்சிதரிடம் நாட்டு நிர்வாகத்தை ஒப்படைத்திருந்தார். கவசமணிந்த யானைகள்

மீது இரும்பு அம்பாரிகள் கட்டப்பட்டிருந்தன. குதிரைகள் மீது அமர்ந்திருந்த வீரர்கள் நீண்ட தலைப்பாகை அணிந்திருந்தனர். அவர்களது கைகளில் வில்லும், அம்பும் இருந்தன. ஒட்டகப்படையும் அணிவகுப்பில் இருந்தது. பெருமளவிலான முகமதிய வீரர்கள் படையில் இருந்தனர். யவனர்கள் குழுவும் படையில் இருந்தது. படைவீரர்கள் வில், அம்பு, வாள், நலிகாயுதம்(Nalikayudham), அனல்வர்த்தி(Anala வர்த்தி – இது துப்பாக்கி அல்லது பீரங்கியாக இருக்கலாம்) போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். ரகுநாத நாயக்கர் கவசமணிந்து வெள்ளை யானை மீது வந்தார். தீவுக்கோட்டையை முற்றுகையிட்ட தஞ்சாவூர் படையினர் அக்நியந்திரங்களால்(துப்பாக்கியாக இருக்கலாம்) தாக்கி கோட்டையை கைப்பற்றியதுடன் சோழகனையும் அவனது குடும்பத்தினரையும் சிறையில் அடைத்தனர்”.

இவ்வாறு சாகித்ய ரத்நாகரத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும், சோழகன் அக்கம்பக்கத்து நாடுகளுக்கு தொல்லை கொடுத்து வந்தான் என்றும், அப்பாவி மக்களை சாக்கு மூட்டையில் வைத்து கட்டி உலக்கையால் அடித்து முதலைக்கு தீனியாக போடுவான் என்றும் யக்ஞநாராயண தீட்சிதர் பாடியுள்ளார். தேவிக்கோட்டை சோழகனைப் பற்றி தஞ்சை ரகுநாத நாயக்கனின் அவைப் புலவர்கள் கொஞ்சம் மிகையாகவே பாடியிருக்கின்றனர். ரகுநாதனை கதாநாயகனாகக் காட்டுவதற்காக சோழகனை வில்லனாக சித்தரித்துள்ளனர். சோழகன், செஞ்சி நாயக்கனுக்கு கட்டுப்பட்ட அரசன். அவன் தஞ்சை நாயக்கனான தனது அரசனுக்கு கீழ்ப்படியவில்லை என்று தஞ்சை அவைக்களப்புலவர்கள் புலம்பியுள்ளனர். சோழகன் எதிரிகளிடம் கொடூரமாக நடந்திருக்கலாம். ஆனால் தாகத்தால் தவிக்கும் மக்கள் பருகுவதற்கு காய்ச்சிய ஈயத்தைக் கொடுத்தான் என்பதெல்லாம் நம்பும்படியாக இல்லை.

கி.பி.1615-ல் தீவுக்கோட்டை சோழகன் வீழ்த்தப்பட்டுள்ளான். ஆங்கிலேயர் குறிப்புகள்: தேவிக்கோட்டை எப்படி இருந்தது என்பது பற்றி ஆங்கிலேயரின் நூல்கள் கீழண்டவாறு கூறுகின்றன. “கொடியம்பாளையம் பகுதியில் தேவிக்கோட்டை தீவு உள்ளது. அத்தீவில் உள்ள கோட்டை ஒரு மைல் சுற்றளவு கொண்டதாக இருந்தது. கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தில் கோட்டை கட்டப்பட்டுள்ளது. சமமற்ற ஆறு பக்கங்களுடன் கோட்டை காணப்பட்டது. 18 அடி உயர மதில் சுவர்கள் இருந்தன. கோட்டை செங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயரிடமிருந்து பிரான்ஸ் நாட்டு தளபதி லாலி(Lally) 1758-ல் தேவிக்கோட்டையை கைப்பற்றி அழித்தார். கி.பி.1760-ல் ஆங்கிலேயர்கள் தேவிக்கோட்டைத் தீவை மீண்டும் கைப்பற்றினர். கொள்ளிடம் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் கோட்டை முற்றிலுமாக அழிந்துவிட்டது”.

ஜலக்கோட்டை:

சாக்கோட்டை கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு 1921-ஆம் ஆண்டு வெளிவந்த *South India and Her Muhammadan Invaders* என்ற நூலின் 111, 112-ம் பக்கங்களில் தேவிக்கோட்டையைப் பற்றிய பல தகவல்கள் தரப்பட்டுள்ளன. முகமதியர்களால் ஜலகோட்டை என்று அழைக்கப்பட்ட பகுதி தீவுக்கோட்டை தான். ஜலகோட்டை என்றால் ஆழமான, நீர்பகுதியால் சூழப்பட்ட தீவில் அமைந்த கோட்டை. கங்கை கொண்ட சோழபுரத்தில் காணப்படுவது போன்று பிரம்மாண்ட சுவர்களின் எச்சங்கள் தேவிக்கோட்டையில் கரையருகே காணப்படுகின்றன. மூன்று பகுதிகளாக இந்த சுவர்கள் இருக்கின்றன. இரண்டு முதல் இரண்டரை அடி அகலம் கொண்ட இரண்டு சுவர்களும், ஆறடி உயரம் கொண்ட மண் சுவரும் காணப்படுகின்றன. சுவற்றின் மற்றொரு பகுதி ஐந்தாறு மைலுக்கு அப்பால் ஆற்றில் காணப்படுகிறது. தீவுக்கோட்டையின் பகுதிகளை கொள்ளிடம் ஆறு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. கடந்த சில நூற்றாண்டுகளில் ஆற்றின் பாதை மாறியிருக்கிறது. பாதிரியார் பிமெண்டாவின் குறிப்புக்கள் மூலமும், தெலுங்கு மற்றும் சம்ஸ்கிருத இலக்கியங்களின் துணைகொண்டும் இந்தக் கோட்டையைப் பற்றி அறியமுடிகிறது.

தீவுக்கோட்டை உறுதி வாய்ந்ததாகவும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகவும் விளங்கியிருக்கிறது. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர், சோழ பாண்டிய பேரரசர்கள் தங்களுக்கு ஆபத்து ஏற்படுமானால் தீவுக்கோட்டையில் தான் அடைக்கலம் புகுந்துள்ளனர் என்று கிருஷ்ணசாமி அய்யங்கார் எழுதியிருக்கிறார். 1920-களில் தீவுக்கோட்டையை நேரில் பார்த்து எழுதியது போல் அவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன. அமீர் குஸ்ரூவின் குறிப்புகளை ஆராய்ந்த அய்யங்கார், மாலிக்காபூரின் படைகள் தமிழகத்தை நாசம் செய்தபோது வீரபாண்டியன் தேவிக்கோட்டையில் அடைக்கலம் புகுந்ததாகக் கருதுகிறார். சாகித்ய ரத்நாகரம், ரகுநாதப்யுதயம் போன்ற நூல்களையும், போர்த்துகீசிய குறிப்புகளையும் கொண்டு பார்க்கும்போது தேவிக்கோட்டை சோழகன் உயர்ந்த நிலையில் வாழ்ந்துள்ளான். எதிரிகள் எளிதில் நுழைய முடியாத கோட்டையாக தேவிக்கோட்டை இருந்துள்ளது. சோழகனைக் கண்டு அனைவரும் அஞ்சியுள்ளனர். தேவிக்கோட்டை அகழியில் பயிற்சி பெற்ற முதலைகள் இருந்தன. இந்த செய்திகளை எல்லா நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

சோழகன் யார் ?:

கடும் வில்லனாக சித்தரிக்கப்பட்டு ஒழிக்கப்பட்ட அந்த சோழகன் யார்? அவனது வாரிசுகள் யார்? இக்கேள்விகளுக்கு G.S.சீனிவாசாச்சாரியார்,M.A, அவர்களால் எழுதப்பட்டு 1943-ம்

ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட *History of Gingee, Chapter-1* என்ற நூலின் 03-ம் பக்கம் விடையளிக்கிறது. தேவிக்கோட்டை சோழகன் பற்றி எழுதிய சீனிவாசாச்சாரியார், அதற்கு அடிக்குறிப்பாக கீழே உள்ள விளக்கத்தை அளித்திருக்கிறார். "சோழகனின் வாரிசுகள் தற்போது முக்கியமில்லாதவர்களாக சுருங்கிவிட்டார்கள். அவர்கள் குறுநில உடைமையாளர்கள். சோழர்களின் தலைவரே தற்போது பிச்சாவரம் பாளையக்காரராக திகழ்கிறார். சிதம்பரத்திற்கும் கொள்ளிடத்தின் முகத்துவாரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் காடுகள் நிறைந்த கிராமமாக பிச்சாவரம் விளங்குகிறது. சோழகனார் என்பது இவர்களின் குடும்ப பட்டப்பெயர். சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் முடிசூடும் உரிமை பெற்றவர்களாக இவர்கள் திகழ்கின்றனர்." என்று சீனிவாசாச்சாரியார் அவர்கள் எழுதியுள்ளார். பித்தர்புரம் என்ற சொல்லே பிச்சாவரம் என்று மருவியிருக்கிறது. பிச்சாவரம் என்பது சிதம்பரத்தைதான் குறிக்கிறது. ஆனால் கோயில் இருக்குமிடம் சிதம்பரம் என்றும் அரசர் இருக்குமிடம் பிச்சாவரம் என்றும் வழங்கிவருகிறது. பிச்சாவரம் சோழகனார்கள் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் தங்கள் உரிமையை நீண்ட காலமாக நிலைநாட்டிவருகின்றனர். தேவிக்கோட்டைக்கும் பிச்சாவரத்துக்கும் நடை பயண தூரம் தான். தேவிக்கோட்டையில் வசித்த சோழகனார்களே பிச்சாவரத்திலும் வசித்துள்ளனர்.

16 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு: பிச்சாவரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் கி.பி.1583-ல் விட்டலேசுர சோழ கோனார் என்பவர் பிச்சாவரத்தில் வாழ்ந்ததும் அவர் முன்னிலையில் அறச்செயல்கள் நடைபெற்றதும் தெரிய வருகிறது. விட்டலேசுர சோழகனார் மீது சந்தமாலை பாடப்பட்டுள்ளதாக 'திருக்கைவளம்' என்ற நூல் கூறுகிறது. "விட்டலராயச் சோழன் மீதுரைத்த வரிய சந்தமாலைக்குப் பச்சை மணிகங்கணம் பாலித்திடுங்கை" என்ற பாடல் வரி திருக்கைவளம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் கூடல் மாநகர் இருவாட்சிப் புலவரால் பாடப்பட்டதாகும். தேவிக்கோட்டையை தஞ்சை நாயக்கர்கள் கைப்பற்றிய காலம் கி.பி.1615. அப்போது சோழகனுக்கு வயது 80. அப்படியானால் சோழகன் பிறந்த ஆண்டு கி.பி.1535 ஆக இருக்க வேண்டும், எனவே தேவிக்கோட்டை சோழகன் என்பவன் 1583-ல் பாடப்பட்ட விட்டலேசுர சோழகனாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு. தேவிக்கோட்டைக்கும் பிச்சாவரத்திற்கும் இடையே தாண்டவராய சோழகன் பேட்டை என்ற ஊர் இருக்கிறது. சீர்காழிச் சீமை பச்ச மாகாணத்தில் பிளியஞ் சோழகனிருப்பு என்ற ஊர் இருக்கிறது. பிச்சாவரம் பாளையக்காரர்கள் தற்போதும் சோழகனார் என்றே அழைக்கப்படுகின்றனர். தேவிக்கோட்டையில் 1535-ல் இருந்தே சோழகனார்கள் ஆண்டு வந்ததை முன்பே பார்த்தோம்.

பிச்சாவரத்தில் சோழர்கள்:

இந்த காலத்திற்கும் முன்பே பிச்சாவரத்தில் சோழர்களுக்கு அரண்மனை இருந்துள்ளது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தில்லை வாழ் அந்தணர்களான பிரம்ம ஸ்ரீ ஸோமாயாஜூ அப்பாசுவாமி தீட்சிதரவர்கள் உபகரித்த பார்த்தவன மஹாத்மியம், பிரம்ம ஸ்ரீ ராஜரத்தின தீட்சிதரவர்கள் உபகரித்த ராஜேந்திரபுர மஹாத்மியம் ஆகிய நூல்களை சென்னை சமஸ்கிருத கல்லூரி வெளியிட்டுள்ளது. இவற்றில் வீரவர்ம சோழன் என்னும் சோழ மன்னன் பிச்சாவரத்தில் இருந்து ஆட்சி செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த வீரவர்ம சோழன் மதுரையை ஆண்ட சந்திரசேகர பாண்டியனின் சமகாலத்தவன் ஆவான். இவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட போரையடுத்தே தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. ஆக, விஸ்வநாத நாயக்கர் மதுரையைக் கைப்பற்றும் முன்பே பிச்சாவரத்தில் சோழர்களுக்கு அரண்மனை இருந்தது என்பது மேற்கண்ட இரண்டு நூல்களால் தெரிகிறது. சோழர் சந்ததியாருக்கு முதல் இருப்பிடம் பிச்சாவரம் என்றும் இரண்டாவது இருப்பிடம் தீவுக்கோட்டை என்றும் ஜாதி சங்கிரகசாரம் என்ற நூல் கூறுகிறது. இப்படி பிச்சாவரத்திலும் அருகிலேயே உள்ள தேவிக்கோட்டையிலும் அரண்மனைகள் அமைத்து நீண்ட காலமாகவே சோழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் வரலாற்று ஆசிரியர்களோ, மூன்றாம் ராஜேந்திரனோடு (கி.பி.1246-1279) சோழர் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது என்று கூறிவருகின்றனர்.

மதுரா விஜயம்:

வரலாற்று ஆசிரியர்கள் சொன்ன காலகட்டத்திற்குப் பிறகும் சோழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு குமார கம்பணனின் மனைவி கங்கா தேவி எழுதிய மதுராவிஜயம் (கி.பி.1371) ஆதாரமாக திகழ்கிறது. மதுரா விஜயத்தின் நான்காம் காண்டத்தில் சுலோகங்கள் 17 முதல் 35 வரை சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடன் இணைந்து குமார கம்பணன் போருக்கு சென்ற செய்தி கூறப்பட்டுள்ளது. சுலோகம் 32-ல் "எங்கும் மங்கள ஒலி கேட்க சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் தங்கள் கைகளில் கொடியேந்தி குமார கம்பணனுக்கு முன் சென்றார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே 16,17-ம் நூற்றாண்டுகளில் சோழர்கள் தேவிக்கோட்டையிலிருந்து ஆட்சி செய்துள்ளனர்.

நடராஜர் ஆலயத்தில் முடிசூட்டல்: 18,19-ம் நூற்றாண்டுகளில் பிச்சாவரம் சோழர்கள் வாழ்ந்ததற்கும், சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் தில்லைவாழ் அந்தணர்களால் முடி சூட்டப்பட்டதற்கும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. கி.பி.1750-ல் பிச்சாவரம் பாளையக்காரர்களுக்கு ஆங்கில அரசினர் உடன்படிக்கைப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்துள்ளனர். இதன்படி 766 காணி நிலமும் பலவிதமான வரும்படிகளும் பிச்சாவரம் பாளையக்காரர்களுக்கு

வந்திருக்கிறது. கி.பி.1844-ம் ஆண்டு பிச்சாவரம் பாளையக்காரர்களுக்கு ஆங்கில அரசு எழுதிய கடிதம் கிடைத்துள்ளது. (1844-ம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்த வலங்கை இடங்கை மோதலில் பிச்சாவரம் பாளையக்காரர்கள் சம்பந்தப்பட்டு இருந்ததால், அவர்களுக்கான அரசியல் ஜீவனாம்சம் (Political Pension) நிறுத்தப்பட்ட செய்தி ஆண்ட பரம்பரை என்ற நூலில் காணப்படுகிறது. 1872-ஆம் ஆண்டு ராமபத்திர சூரப்ப சோழகனார் என்பவர் பிச்சாவரம் பாளையக்காரராக இருந்தார் என்று, ஜாதி சங்கிரகசாரம் என்ற நூலில் அதன் ஆசிரியர் குன்னம் முனுசாமிப்பிள்ளை எழுதியுள்ளார். 1893-ம் ஆண்டு ஆங்கில அரசின் வருவாய்த்துறை, பிச்சாவரம் அரசர் சாமிதுரை சூரப்ப சோழகனாருக்கு கடிதம் எழுதியுள்ளது. இவருக்கு 1908-ம் ஆண்டு சிதம்பரம் ஆலயத்தில் சோழ அரசராக தில்லைவாழ் அந்தணர்களால் முடிசூட்டப்பட்டது. தில்லைக்கண்ணு சூரப்ப சோழகனாருக்கு 1911-லும், ஆண்டியப்ப சூரப்ப சோழகனாருக்கு 1943-லும், சிதம்பரநாத சூரப்ப சோழகனாருக்கு 1978-லும் தில்லை ஆடல்வல்லான் ஆலயத்தில் முடிசூட்டப்பட்டுள்ளது. காலஞ்சென்ற சிதம்பரநாத சோழகனாரின் வாரிசுக்கு விரைவில் முடிசூட்டப்பட இருக்கிறது. மூன்றாம் ராஜேந்திரனோடு சோழர் வம்சம் முடிவுற்றது என்ற மாயை மடிந்து போகட்டும். ஆயிரம் கைகள் தடுத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை.



திருக்குறள் காட்டும் சைவ நெறி

முனைவர் சக்கரபாணி பட்டாபி
மின்னஞ்சல் : yogapattabi@gmail.com.

முன்னுரை:

தமிழ்மொழி தனிச்சிறப்புடைய நிகரற்ற மொழியாகும். இது பல்வேறு மொழிகளின் பிறப்பிடமாகத் திகழ்கிறது. தமிழ் பன்னெடுங்காலமாக வாழ்வியல் கொள்கையை மனித குலத்திற்கு வழங்கிவருகின்ற வற்றாத உயிரூற்றாகும். இத்தகைய பெருமை வாய்ந்த தமிழின் சிறப்புகளில் ஒன்றாகப் போற்றப்படும் திருக்குறள் உலகளாவிய தமிழ் மக்களால் பெரிதும் நோக்கப்படுகின்றதென்றால் அது மிகையல்ல.

மேலை நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வருகை புரிந்த போப் அவர்கள் தமிழை நன்கு கற்றுணர்ந்தார். பின்பு திருக்குறளை தெளிவாகக் கற்று அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகம் அறிய உவந்தளித்துள்ளார். அந்நூலில், “திருவள்ளுவர் பதி, பசு, பாசம் என்னும் சிறந்த முப்பொருள் உண்மையின் அடிப்படையில் தமது சமயக் கோட்பாடுகளை அமைத்துள்ளது...” என்று பதிவிட்டுள்ளார். இவ்வளவில் நாம் உட்செல்வோம்.

திருக்குறள் ஓர் சைவ நூல்

திருவள்ளுவர் தமது திருக்குறளில் முறையாக மரபு வழியில், கடவுள் வாழ்த்துடன் ஆரம்பித்துள்ளார். அடுத்து வான்சிறப்பில் மழையை போற்றுகிறார். பிறகு நமது பாரம்பரிய செய்தியாக நீத்தார் பெருமையை உலகிற்கு உரைத்து பிறகு அறவழி நிற்றலை வலியுறுத்துகின்றார். மேலும் ‘கடவுள் வாழ்த்து’ என்ற முதல் அதிகாரத்தின் பத்து குறட்பாக்களையும் சைவ நெறி முறையாக வெளிப்படுத்தும் விதத்தில் அளித்துள்ளார்.

கல்வியின் பயன்

முதல் குறளில் ‘அகர முதல என்ற ஆரம்பத்திலேயே திருமுறைகள் போற்றும் அகரமுதல்வனைக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் குறளிலும் ‘வாலறிவன்’... என்று திருவடிகளைப் போற்றி தொழுவது தான் கல்வி கற்றலின் பயனாக கூறினார். மலர்மிசை.. என்று கூறி புவியில் நிலைத்த புகழுடன் வாழும் வழியை கூறினார். விருப்பு வெறுப்பற்ற இறைவனின் திருவடியை சேர்ந்தவர்களுக்கு

எப்போதும் துன்பம் இல்லை என்று இயம்புகிறார். 'இருள் சேர் இருவினை' என்பதில் நல்வினையாகிய 'புண்ணியம்' மற்றும் தீவினையாகிய 'பாவம்' இரண்டும் இருள் என்று அறிவுறுத்துகின்றார். இவையாவும் சைவ சமயக் கோட்பாடுகளாகும்.

ஐம்பொறிகள்

பொறிவாயில் ஐந்து அவித்தான் என்னும் பொருள், இயல்பிலேயே பாசங்களினின்று நீங்கிய இறைவன், ஒழுக்க நெறிவழுவாமல் வாழும் அடியார்களின் பொறிகள் ஐந்தின் வாயிலாக நிகழும் ஐம்பற்றுக்களையும் களைவான் என்பதாகும். தனக்கு உவமையற்ற இறைவனின் திருவடியே கவலை தீர்க்கும் அருமருந்தாகும். மேலும் இவற்றிற்கெல்லாம் மகுடம் சூடியது போல் தனது ஒன்பதாவது குறளில் சிறப்பினை கருத்துரையை திருவள்ளுவர் பதிவிட்ட பாங்கு உயர்நிலையாகும். அதாவது, கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்று கூறியதன் வாயிலாக உயர்ந்த சைவாகமங்களின் செய்தியை பதிவிட்டுள்ளார்.

சைவாகம செய்தி

இத்திருக்குறளின் உரையை எழுதிய பரிமேலழகர், சிவனின் எட்டுவகை குணங்களை சைவாகமங்களில் குறிப்பிட்டுள்ள செய்தியை விவரிக்கின்றார். அவையாவன, தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உறவினர்கள் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களை நீக்குதல், பேரருள் உடைமை, முடிவில்லா ஆற்றல் உடைமை, வரம்பில்லா இன்பம் உடைமை என்பனவாகும். வைணவ நெறியில் வாழ்ந்துவருபவர், திருக்குறளின் பொதிந்த சைவ சமய கருத்துக்களை தெளிவாகவும் வெளிப்படையாகவும் தெரிவித்திருப்பது பாராட்டப்படவேண்டிய நடுநிலையாகும். மேலும் பத்தாவது குறளில், இறைவனின் திருவடியாகிய ஆதாரத்தை பிடித்தோர் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை சேர்வார், என்று தெளிவாக சைவ கருத்துக்களைத் திருவள்ளுவர் நயம்பட இயம்பியுள்ளார்.

புலால் மறுத்தல்

மேலும் பல திருக்குறளில் சைவ வழிபாடு மற்றும் சைவ கருத்துகளைக் கூறியது மட்டுமின்றி, உணவில் சைவநெறியை கடைப்பிடித்தல் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றார். 251 வது குறளில், தன் உடலை வளர்ப்பதற்காக, பிற உயிரைக்கொன்று அதன் உடலைத் தின்பவன் வேறு உயிர்களிடம் எவ்வாறு அன்பு உடையவனாக இருக்க இயலும் என்று வினவுகிறார். 260வது குறளில் 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'. என்று கூறும் போது நம்மை உண்மையாகவே ஒரு கணமாகிலும் சிந்திக்கும்படி செய்யும் இயல்பில் திருவள்ளுவர் நிற்கிறார்.

கொல்லாமை

'நல்லறம்' என்பதே பிற உயிர்களைக் 'கொல்லாமை' என்று அறுதியிட்டுக் கூறுகிறார் திருவள்ளுவர். பிற உயிர்களைக் கொல்லாமல் வாழ்பவரை எமன்கூட நெருங்க அஞ்சுவான் என்றார். மேலும் தன் உயிர் போகும் நிலை வந்தாலும் பிற உயிரை போக்கடிக்கக் கூடாது என அறிவுறுத்துகின்றார். கொலையினால் வரும் பலன் மிகப் பெரியதாகினும் அது இழிசெயல் என்றே கருதுவர் பெரியோர். அறிவு தெளிவு பெற்ற நல்லோர், உயிரை இழந்த ஒன்றின் ஊனை உண்ணமாட்டார். வேள்வித்தீ வளர்த்து உயிர் பொருட்களைப் போட்டு ஆயிரம் வேள்விகள் செய்வதை விட ஓர் உயிரைக் கொன்று தின்னாமல் இருத்தல் மேலான செயலாகும். இவை போன்று பல ஒழுக்கநெறி முறைகளைக் கடைபிடித்து வாழ்பவர் உயர்ந்த வாழ்க்கை வாழ்பவராவார்.

ஊழ்வினையை வெல்லாமல்

அறிவு நூல்கள் பல கற்றுத் தேர்ந்தாலும் ஊழ்வினையின் பலனே மேலோங்கி இருக்கும் என்று எச்சரிக்கின்றார் பொய்யில் புலவர். ஊழ்வினையை விட மிக வலிமையுடையது வேறில்லை. ஊழ்வினையில் இருந்து தப்பிக்க வேறு வழி தேடிச் சென்றாலும் அங்கேயும் நம்மை முந்திக்கொண்டு ஊழ்வினைதான் நிற்கும். ஆனாலும் சிறந்த 'ஆள்வினை உடையவர்' என்பவர், சோர்வின்றி ஒரு காரியத்தைத் தொடர்ந்து மேன்மேலும் முயலுபவர்கள், விதியாகிய ஊழ்வினையையும் வெற்றி கொண்டு, தன் முயற்சியில் வெற்றி வாகை சூடுபவராவர்.

முடிவுரை

திருவள்ளுவர் கொடுத்துள்ள சைவநெறி மிகுந்த வாழ்வியல் வழிகாட்டும் பெட்டகமான திருக்குறளை கற்றுணர்ந்து வாழ்வில் பின் பற்றி மற்றவர்க்கும் வழிகாட்டியாகத் திகழும் ஒருவர் வானுறையும் தெய்வத்திற்கு இணையாக போற்றப்படுபவராவர்.

தமிழர் உணவியலும் பருவங்களும்

முன்னுரை:

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவாகும். ‘நீரின்றி அமையாதுலகு’ என்று திருவள்ளுவர் கூறியதுபோல், ‘உணவின்றி அமையாது உடம்பு’ என்று உணர்ந்த அருட்பிரகாச வள்ளலார் அவர்கள், பசிப் பிணிக்கு ‘உணவே மருந்து’ என்றார். இதையே பன்னெடுங்காலமாக நம் முன்னோர், ‘உணவே மருந்து; மருந்தே உணவு’ என்று உணர்த்தினார், உணவு உடலுக்கு சக்தியை அளிக்கிறது. இதையே தமிழர் யோக நெறியும் உடலை ஐந்து விதமாகப் பாகுபடுத்தியுள்ளனது. இதில் முதலாவதாக, ‘அன்னமய கோசம்’ என்ற உடல் பிரிவு உண்ணும் உணவின் அடிப்படையில் அமைந்ததாகும்.

உணவு முறை :

உணவை உண்ணும் சமயம், பசிப்பிணிக்கு ஏற்ற அருமருந்தாகும் உணவை அகமகிழ்ந்து அருந்த வேண்டும். அவ்வாறில்லாமல் கட்டுப்பாடும் நெறிமுறையும் அற்று வாழ்ந்தால், பின்நாளில் மருந்தை உணவாக உட்கொள்ள நேரிடும் என்ற கருத்தை திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்.

“மறுப்பதினி நோய் வரா திருக்க

மறுப்பது சுவையும் மருந்தென வாகும்”.

உண்ட உணவு செரித்த பின் உண்டால், உடலுக்கு நோய் வராது; எனவே வேறு மருந்து தேவை இருக்காது. இதை திருவள்ளுவர்

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்”. எனக் கூறினார்.

நோய் அணுகா வழி :

நோய் வந்த பின் வருந்துவதை விட, முன்பே விழிப்புணர்வுடன் இருந்தால் தடுக்கலாம். இதையே

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்”. என்று திருக்குறளில் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

தேவையான உணவை அளவுடனும் நேரத்துடனும் உண்டால் நோயினிலிருந்து விடுபட்டு உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழலாம் என்று பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவர் கூறுகிறார்.

இதை, “அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு

பொற்றான் நெடிதுய்க்கு”மாறு என்று கூறியுள்ளார். மேலும் அளவு அறிந்து முறைப்படி உணவை உண்ணும் பழக்கத்தை கொண்டவரிடத்தில்; ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். அளவிற்கும் மீறி உண்பவனிடத்தில் நோய் நிலைத் திருக்கும் என்றார்.

“அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல

துய்க்க துவரப் பசித்து”. அதாவது உண்ட உணவு உடலுக்கு ஏற்புடையதா என்று தெரிந்து, அதன் பின் ஆழ்ந்த பசியெடுத்தபின் உணவை உண்பது சிறந்ததாகும்.

காலத்திற்கேற்ற உணவு முறைகள் :

உணவை முறைப்படி அருந்துதல் அவசியமானதாகும். ஒவ்வொருவரும் அவரவர் உடல் தன்மை, வயது, உழைப்பு இவற்றைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றார்போல் உணவு முறையை அமைத்துக் கொள்ளல் அவசியமாகும். பருவகாலங்களுக்கேற்ப உணவை நாம் சேர்ந்து எடுத்து உண்ணல் வேண்டும். பொதுவாக பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட ஓர் ஆண்டை ஆறுவகைக் காலங்களாக பிரித்துள்ளனர். அவையாவன, இளவேனில், முதுவேனில், கார் காலம், கதிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம் என்பன.

நமது உணவானது ஆறு சுவைகள் அடங்கியது. காலங்களும் ஆறுவகையாகும். இத்தகைய நிலையில் நாம் உண்பதற்கும் பருவ நிலைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. அதாவது பருவத்திற்கேற்ப உணவின் சுவையில் மாற்றமானது அமைய வேண்டும்.

இளவேனில் காலம் :

சித்திரை, வைகாசி மாதங்கள் : இப்பருவத்தில் கசப்பு, காரம், துவர்ப்பு முதலிய சுவைகள் அவசியமானதாகும். பாகற்காய், சுண்டைக்காய் வற்றல், அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, கத்திரிக்காய், மணத்தக்காளி, கம்பு முதலியன கசப்பு சுவையுடையன. இஞ்சி, சுக்கு, மிளகு, பொரிகடலை, அரைக்கீரை, கருணை (சேனை)க்கு கிழங்கு முதலியன காரப்பு உணவுகள். வாழைப்பூ, வாழை பிஞ்சு, மாம் பிஞ்சு, அத்திக்காய், கடுக்காய் முதலியன துவர்ப்பு சுவை உடையன. இவை செரிமானத்தை அதிகரிப்பவையாகும். பசியை தூண்டுபவை. மேலும் மலச்சிக்கலை நீக்கி, கழிவுகளை நீக்கி ஆரோக்கியம் தருபவை.

முதுவேனில் காலம் :

ஆனி, ஆடி மாதங்கள் : இப்பருவத்தில் இனிப்பு சுவையுடைய உணவுகளை முக்கியமாக உட்கொள்ளுதல் மிகவும் அவசியமானது.

கார்காலம் :

ஆவணி, புரட்டாசி மாதங்கள் : இக்காலத்தில் உண்ணக் கூடிய உணவில் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு சுவை இருத்தல் அவசியமானது. கருப்பட்டி (வெல்லம்), நாட்டு சர்க்கரை, பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலிய இயற்கை பாரம்பரிய இனிப்புப் பொருள்களை முக்கியமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்றும் பழ வகைகள் குறிப்பாக மாம்பழம் சிறந்தது.

மாவுப் பொருள்கள் புளிப்பு சுவை உடையவாகும். இவை கொழுப்பை உடலில் ஏற்படுத்துகிறது. இதனால் உடல் பலம் பெற்று குளிரைத் தாங்கும் ஆற்றலைத் தரவல்லது.

உவர்ப்பு சுவையுடைய கடல் உப்பு, பாறை உப்பு இவை உணவில் தாது உப்புகளாக நின்று உடலைப் பாதுகாப்பவை.

கதிர் காலம் :

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் : இக்காலம் குளிர் காலமாகும். இக்காலத்தில் இனிப்பு மற்றும் கசப்பு சுவையுடைய உணவுகளை உண்பதால், உடலை குளிராமல் தோல், தசை முதலியவற்றை காக்கிறது. கசப்பு சுவை நரம்பை வலுப்படுத்தி, செரிப்புத் திறனை தூண்டி நல்ல முறையில் பசியை ஏற்படுத்துகிறது.

முன்பனி காலம் :

மார்கழி, தை மாதங்கள் : இக்காலத்தில் இனிப்பு, புளிப்பு மற்றும் உவர்ப்பு முதலியன தேவையாகும். வெள்ளரிக்காய், பூசணி, முள்ளங்கி, வாழைத்தண்டு, கீரைத்தண்டு முதலிய நீர்ச்சத்துள்ள காய்கறிகள் உவர்ப்பு சுவை உடையது.

பின்பனிக் காலம் :

மாசி, பங்குனி மாதங்கள். இக்காலத்தில் இனிப்பு மற்றும் புளிப்புச் சுவையுடைய பழங்கள், பயிறு (பருப்பு) வகைகள், கிழங்கு வகைகள், அரிசி உணவு முதலியன புளிப்பு வகை உணவுகளாகும்.

முடிவுரை :

“நொறுங்க தின்றால், நூறாண்டு வாழலாம்” என்ற முதுமொழி உணவை நன்றாக மென்று உமிழ் நீருடன் கலந்து அருந்துதலைக் கூறுகிறது. மேலும் உணவின் இடையில் நீர் அருந்துதல், செரிமானத்தை தடுக்கும் மலச்சிக்கலை உருவாக்கும். எனவே முறை தன்மை காலம் அறிந்து சுவை பொருந்திய உணவை உண்பது பண்டைய தமிழர் வழக்கு. ஒரு வேளை உண்பவர் யோகி! இருவேளை உண்பவர் போகி!! மூன்று வேளை உணவு உண்பவர் (து)ரோகி!!!

✣ ✣ ✣

மலேசியாவில் இந்து சமயக்கல்வி

சுப்பிரமணி சோணையா
maamandram mhdm.hq@gmail.com

மலேசியாவில் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஏறக்குறைய 2500 இந்து கோயில்கள் உள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது (SEDIC, *Prime Ministers Department*, 2018). பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி முதல் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களாக இங்குச் சிறுகச் சிறுகப் புலம் பெயர்ந்த இந்துக்கள் தாங்கள் பூர்வீக கிராமங்களில் வழிபட்ட தெய்வங்களுக்கே இங்கும் அதிகமாக கோயில்களை நிறுவி வழிபடத் தொடங்கியுள்ளனர் என்பது இதன்வழி புலப்படுகிறது. இக்கோயில்களுள் பெரும்பாலானவை இன்றும் பழைய ரப்பர் தோட்டங்கள் இருந்த இடங்களிலேயே இருப்பதே இதற்குச் சான்றாகும்.

மலேசியாவில் கோயில்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும் பெரும்பாலானவை கிரியைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் வழிபாட்டுத் தலங்களாகவே செயல்படுவதை இன்றளவும் காண முடிகிறது. இந்நாட்டில் இஸ்லாம் சமயம் அதிகாரப் பூர்வமான சமயமாக விளங்கினாலும் மற்ற சமய வழிபாட்டிற்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் தேசியகோட்பாடாக “இறைவன்மீது நம்பிக்கை வைத்தல்” எனும் தாரக மந்திரம் முன்னிறுத்தப்படுகிறது. ஆகவே, இறை நம்பிக்கைக்கு அடித்தளமாக விளங்கும் இந்து சமயக் கல்வியை இந்து குழந்தைகளுக்கு முறையாக வழங்குவதற்குக் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி பல்வேறு சமய அமைப்புகளும் கோயில்களும் தனி நபர்களும் பல்வேறு வகைகளில் முயன்று வருகின்றன. இல்லையேல் சிறுபான்மையினராக இருக்கும் இந்துக்கள்

காலவோட்டத்தில் கரைந்து போய்விடுவர் என்பது திண்ணம்.

மலேசியா இந்துதர்ம மாமன்றம் *1982*ஆம் ஆண்டில் சங்கரதாசர் அருட்செல்வர் கரு. சாத்தையா அவர்களால் காஞ்சி காமக்கோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியோடு மலேசியாவில் நிறுவப்பட்ட ஓர் இந்து இயக்கமாகும். இவ்வியக்கத்தில் தலையாயத் திட்டங்களுள் ஒன்றாக விளங்குவது சமயக் கல்வியாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் *1999*ஆம் ஆண்டு ஷண்மதத்தின் அடிப்படையில் முறையான பாடத்திட்டம் *(Syllabus)* உருவாக்கப்பட்டது. பின்னர் இப்பாடத்திட்டம் காஞ்சி காமக்கோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அங்கீகாரத்தையும் பெற்று மலேசியாவில் அமலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாடல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்து சமயத்தைப் பற்றிய புரிதலை அதிகரிக்க பாடத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு தலைப்புக்கும் ஏற்ப விரிவான கருத்து விளக்கங்கள் அடங்கிய ஆசிரியர் கையேடு *(Teachers resource Book)* தயாரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களால் எளிமையாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதற்கு ஏற்புடைய திருமுறைப் பாடல்கள், பஜனைப்பாடல்கள், எளிய மந்திரங்கள், திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, உலகநீதி, வெற்றி வேற்கை, நன்னெறி ஆகியவை அடங்கிய பிரார்த்தனைக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பள்ளி மாணவர்களின் வயதைக் கருத்தில் கொண்டு முதலாம் ஆண்டு (ஏழு வயது) முதல் ஆறாம் ஆண்டு (பன்னிரண்டு வயது) வரையில் உள்ள மாணவர்களுக்கு, அவர்களின் கற்றல் மற்றும் புரிதல் ஆற்றலுக்கு ஏற்ப ஆறு பாடநூல்கள் *(Text Books)* தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட நூலிலும் மாணவர்களின் படிநிலை வளர்ச்சிக்கேற்ப முறையாகத் திட்டமிட்டப்பட்டு எளிமையிலிருந்து கடினத்திற்கு இட்டுச்செல்லும் இருபது பாடங்கள் *(Well-Structured Lessons)* உள்ளடக்கங்களாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட உள்ளடக்கத்திலும் இந்து சமயக் கோட்பாடுகளுக்கும் தத்துவங்களுக்கும் உரிய எளிய விளக்கங்கள், அத்தத்துவங்களை விளக்கும் கதைகள், தொடர்புடைய திருமுறைப்பாடல்கள், மந்திரங்கள், திருக்குறள், நீதிச் செய்யுள்கள் ஆகியவையும், அப்பாட உள்ளடக்கத்தோடு தொடர்புடைய எளிய பயிற்சிகள், வண்ணம் தீட்டுவதற்கான பாடங்கள் முதலியவை அடங்கி இருக்கும்.

மாணவர்களை ஈர்க்கும் வகையில் பாடங்களில் இடம்பெற்றுள்ள படங்கள், ஓவியங்கள் அனைத்தும் வண்ணத்தில் *(Multy Colours)* அச்சடிக்கப்பட்டுள்ளன. இந்நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பக் காலச் சூழலுக்கு ஏற்ப மாணவர்கள் கூடுதலான தகவல்களைப் பெறவும் பாடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் *QR* ஒருங்குக் குறியீடு *(QR code)* வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், திறன்பேசிகளைப் *(Smart Phones)* பயன்படுத்தி மாணவர்கள் சமயத்தை பற்றி சுயமாகக் *(Self-access and self-directed learning)* கற்பதற்கும் ஏதுவாகிறது.

இது மட்டுமின்றி ஒவ்வொரு பாட நூலையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எளிமையாக கற்பிக்கும் வகையில் அப்பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் பயிற்றிகளும் *(teaching modules)* தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்புடைய கற்பித்தல் கற்றல் நடவடிக்கைகள் பாடக்குறிப்புகளாக *(Lesson plan)* வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் பின்னிணைப்பில் ஒவ்வொரு பாடக் குறிப்புக்கும் ஏற்ப, மாணவர்களின் கற்றலை மகிழ்வூட்டும் ஒன்றாக அமைக்கச் சமய விளையாட்டுகள் பிரித்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை நடத்தும் முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. இவையே அன்றி பாடநூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மற்றும் கதைகளின் தொகுப்பும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளதால் ஆசிரியர்களின் விரைவு தேடலுக்கு *(Quick reference)* வசதியாக அமையும் என்பது திண்ணம்.

கடந்த *1999*ஆண்டு முதல் இதுவரையில் *1200*க்கும் கூடுதலான ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பாட நூல்களைப் பயன்படுத்தி *2019*ஆம் ஆண்டு முதல், மலேசியாவில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில், வாரந்தோறும் சராசரி *30,000* மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*****

தமிழரின் எளிய வீட்டு வைத்தியங்கள்

டாக்டர் அ. சத்திய நாராயணன்,
M.A., PGDICP., M.S., M.Phil., M.Ed., Ph.D
மனநல ஆலோசகர்

தமிழ் கலாச்சாரமும் பாரம்பரியமும் அரிய பொக்கிஷங்கள். பல்வேறு துறைகளில் பல்கிப் பெருகியிருக்கும் தமிழர் அறிவு மருத்துவத்தையும் விட்டு வைக்கவில்லை. தமிழ் பாரம்பரியத்தில் பொதுவான உடல் உபாதைகளுக்கு நமது வீட்டில் இருக்கும் மூலிகை பொருட்களைக் கொண்டே தீர்வு கண்டனர். இதோ சில அரிய மற்றும் எளிய பாட்டி வைத்தியக் குறிப்புகள்.

நமது சமையலறைப் பொருட்களில் பலவும் இயற்கையாகவே ஆயுர்வேத குணங்கள் அமைந்தவை. இதனால்தான் தமிழர் நீண்ட ஆரோக்கியத்தோடு வாழ்ந்தனர். வீட்டில் அன்றாடம் சமையலுக்கு உபயோகிக்கும் பல பொருட்கள் பல உபாதைகளை போக்கி, உடல் ஆரோக்கியத்தை அதிகப்படுத்தும் வல்லமை வாய்ந்தவை. அத்தகைய சில பொருட்களைப் பற்றி இந்தக் கட்டுரையில் காண்போம்.

பசியின்மை, வயிற்று உப்புசம்:

சீரகத்தைப் பொன் நிறமாக வறுத்து தூளாக்கி நீரில் கலந்து சூடாக்கி குடித்தால் சீரணத்தை விரைவுபடுத்தி பசியைத் தூண்டுவதுடன் உணவுப்பாதையையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

கால் ஆணி:

மருதாணி இலைகள், சிறிதளவு வசம்பு, ஒரு சிறிய மஞ்சள் துண்டு இவை மூன்றையும் நன்றாக அரைத்து ஒரு வெற்றிலையில் மூடி மடித்து கால் ஆணி இருக்கும் இடத்தில் வைத்து ஒரு துணியால் கட்டி வரவேண்டும். இதை ஒரு வாரத்திற்கு செய்தால் கால் ஆணி முற்றிலும் குணமாகிவிடும்.

தொண்டைக்கட்டு:

அதிமதுரத்தை வாங்கி வந்து அதனை இடித்து சலிக்கவும். ஒரு வேளைக்கு அரை ஸ்பூன் என்ற வகையில் இந்தத் தூளை எடுத்து தேனோடு கலந்து குழைத்து சாப்பிட்டு வந்தால் தொண்டைக்கட்டு விரைவில் சரியாகும்.

தலைவலி:

ஒரு ஸ்பூன் கிராம்பையும் (இலவங்கம்) மற்றும் ஒரு சிட்டிகை கல் உப்பு இவற்றை ஒன்றாக அரைத்து பற்று போட்டால் தலைவலி வெகு விரைவில் குணமாகும்.

அஜீரணம்:

அரை ஸ்பூன் இஞ்சி சாறு, அரை ஸ்பூன் எலுமிச்சை சாறு, அரை ஸ்பூன் தேன் இவற்றை ஒன்றாகக் கலந்து சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகள் குணமாகும்.

மலச்சிக்கல்:

அடிக்கடி மலசிக்கல் இருந்தால் வெங்காயத்தையும் முள்ளங்கியையும் அவ்வப்போது சமையலில் சேர்த்துக்கொள்ளவும். அதிமதுரம், ரோஜா மொக்கு, சோம்பு இவற்றை சம பங்கில் எடுத்து தூளாக்கி ஒரு ஸ்பூன் அளவிற்கு எடுத்து தேனில் குழைத்து சாப்பிடவும்.

கெட்ட கொலஸ்ட்ராலை குறைக்க

வெந்தயம் உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலை குறைப்பதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. அதிலும் காலையில் தினமும் வெறும் வயிற்றில் வெந்தய பொடியை நீரில் கலந்து குடித்தால், இன்னும் நல்ல பலன் தெரியும்.

சமையலில் சேர்க்கும் பொருட்கள் சில பொருட்களுக்கு இயற்கையாகவே கொழுப்பை கரைக்கும் தன்மை கொண்டிருக்கின்றன. மிளகு, மஞ்சள், இஞ்சி, பூண்டு போன்றவை இவற்றில் அடங்குபவை ஆகும்.

இளநரை

விட்டமின் கே சத்து இல்லாமல் இருந்தால் இளநரை வரலாம். இந்த சத்தைப் பெறத்தான் பலரும் கறிவேப்பிலையை தினமும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளச் சொல்வார்கள்.

முடி கொட்டுதல்

வாரம் ஒருமுறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோல் தொடர்ந்து மூன்று மாதகாலம் செய்து வந்தால், எந்த காரணத்தால் முடி கொட்டினாலும் நின்றுவிடும்.

எலும்புகளின் தேய்மானத்தை தடுக்க

எலும்புகளின் தேய்மானத்தை தடுக்க கால்சியம் அதிகம் உள்ள உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். அகத்திகீரை, முருங்கைக்கீரை, அரைக்கீரை, பசலைக்கீரை, கறிவேப்பிலை, தண்டுக்கீரை, குப்பைமேனி மற்றும் வெற்றிலையில் அதிகம் கால்சியம் உள்ளது.

உடல் எடை குறைய

வாழைக்காயை உணவில் சேர்த்துக் கொள்வதினால், உடல் எடை குறையும். பருமனாய் இருப்பவர்கள் குஷிப்படுங்கள். ஏனெனில் இது குடலை சுத்தப்படுத்தி, அதிலுள்ள கொழுப்பு செல்களை அழிக்கிறது. உடல் எடையைக் குறைக்கிறது.

வயிற்றுவலி, வாதம், பித்தம், கபம்

வால்மிளகினால் வயிற்றுவலி, வாதம், பித்தம், கபம், இவற்றினால் ஏற்படும் நோய்கள் மற்றும் வெட்டை ஆகியவை தீரும்.

மலட்டுத்தன்மை

முருங்கைக்காயில் துத்தநாகச்சத்து அதிகம் உள்ளதால் மலட்டுத்தன்மை, விந்து வேகமாக வெளியேறுதல் போன்ற பிரச்சனைகளை சரி செய்கிறது.

நான் யார்? என்னுடைய அடையாளங்கள் எவை?

இல. சின்னையா,
Email: sinniah41@hotmail.com

1. என் தாய்நாடு மலேசியா. எனவே நான் ஒரு மலேசியன்.

நான் மலேசிய மண்ணில் பிறந்தவன்.
இந்த மண்ணின் உப்பைத் தின்று வளர்ந்தவன்.
இங்கேயே படித்தவன். என் உயிரும் உடலும் இந்த மண்ணுக்கே!
ஏனென்றால் இது என் நாடு. எனக்குச் சொந்தமான நாடு. என் தாய் தந்தையர் வியர்வையில் மிதந்து, இரத்தம் சிந்தி,
உழைப்பைத் தந்து இந்த நாட்டை வளர்த்தனர்.
நானும் என் நாட்டுக்காக உழைப்பேன்.

2. என் மூதாதையர் வாழ்ந்த நாடு இந்தியா. அந்த வம்சாவழிப்படி நான் ஒரு இந்தியன்.

என்னுடைய பரம்பரை, பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு, சமயம் அனைத்தும் இந்தியாவில்தான் தோன்றின; வளர்ந்தன.
அவைதான் என்னை ஒரு மனிதனாக உருவாக்கின. எனவே நான் ஓர் இந்தியன்.

3. என் இனம் தமிழினம். எனவே நான் ஒரு தமிழன்.

இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில்தான் தமிழ் இனம் உருவானது. என் உடம்பில் ஓடும் இரத்தம் தமிழ் இன இரத்தம். எனவே தமிழன் என்பது என்னுடைய இன்னொரு அடையாளமாகும்.

4. என்னுடைய தாய்மொழி தமிழ். எனவே நான் ஒரு தமிழன்.

தமிழ் மொழி தமிழ்நாட்டில் தோன்றி வளர்ந்தது. என்னுடைய மலேசிய மண்ணில் வளர்ந்தும் வருகின்றது. என்னுடைய தாய்மொழியை வளர்ப்பது என்னுடைய கடமை. அம்மொழியைப் படிப்பதும் பேசுவதும் என்னுடைய உரிமை. ஏனென்றால் என் தமிழ்மொழி என் தாய்க்குச் சமம். தாய்மொழியை மறந்தவன் பிணத்துக்குச் சமம் அல்லவா!

5. என் மதம் இந்து மதம். எனவே, நான் ஒரு இந்து.

இலட்சக்கணக்கான வருடங்களாக என் முன்னோர்கள் இந்துக்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப்போலவே நானும் என்றும் இந்துவாகவே இருப்பேன். என் குறிக்கோள் :
நான் இந்துவாகப் பிறந்தேன் ; இந்துவாகவே வாழ்வேன் ;
இந்துவாகவே இறப்பேன்.

6. என் மார்க்கம் ஷண்மதம். எனவே நான் ஒரு ஸ்மார்த்தன்.

கடவுள் ஒருவரே! வடிவங்கள் பல. இதில் நான் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன். அதனால் நான் எல்லாத் தெய்வத் திருவுருவங்களையும் வணங்குவேன். ஓர் உருவத்தை என் இஷ்ட தெய்வமாக வணங்கி வருவேன். இது இந்து மதம் எனக்குக் கொடுக்கும் சுதந்திரம்: எனக்குக் காட்டிய பாதை. அந்த வழியிலேயே செல்வேன்.

7. என் கலாச்சாரம் {கலை+ஆசாரம்} இந்து கலாச்சாரம் (Kebudayaan Hindu / Hindu Culture) ஏனென்றால், நான் ஒரு இந்து.

நான் உடுக்கும் பாரம்பரிய ஆடைகள், ஆடும் நடனங்கள், நான் உண்ணும் பாரம்பரிய உணவுகள், திருநீறு, பொட்டு போன்று நான் இட்டுக்கொள்ளும் அடையாளங்கள், நான் கடவுளை வணங்கும் முறை, நான் கொண்டாடும் பண்டிகைகள் எல்லாமே இந்து சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. எனவே எனது கலாச்சாரம் இந்து கலாச்சாரமே.

8. எனது பண்பாடு தமிழ்ப் பண்பாடு. ஏனென்றால், நான் ஒரு தமிழன்.

நான் பேசும் முறை, வாழும் முறை, என் ஒழுங்கு முறை , என் ஒழுக்க வாழ்வு, பிறரிடம் நடந்து கொள்ளும் முறை, எனது சிந்தனைப் போக்கு போன்றவை எல்லாம் எனது தமிழ்ப் பண்புகளைக் காட்டும். எனவே, எனது பண்பாடு தமிழ்ப் பண்பாடே!



9. நான் கடவுளின் குழந்தை.

நான் கடவுளிடமிருந்து வந்தவன். கடவுள் பெரும் நெருப்பு என்றால், அதிலிருந்து தோன்றிய ஒரு சிறு பொறி நான்.

நான் ஒரு ஜீவாத்மா.
என்னைப் படைத்த கடவுள் பரமாத்மா.
அவருடைய குழந்தையான நான் ஜீவாத்மா.

நான் ஓர் ஆன்மா. நான் அழிவற்றவன்.
என் உடம்புதான் அழியும். என் ஆன்மா அழிவதில்லை. எனவே, நான் அழிவற்றவன்.

10. நான் ஆற்றல் மிக்கவன்.

என்னுள் கடவுள் உறைகிறார். அவரிடமுள்ள எல்லா ஆற்றல்களும் என்னிடமும் உள்ளன.
எனவே, கடவுள் துணையுடன் என்னால் அனைத்தையும் சாதிக்க முடியும்.

தமிழனென்று
சொல்லடா
தலை நிமிர்ந்து
நில்லடா.

தமிழர்கள் இந்து என்பதில் பெருமை கொள்வோம்

இந்து மதம் என்பது சரியான பெயர் "ஸநாதன தர்மம்" என்பது ஆகும். ஸநாதன தர்மம் என்பது பொருள் நிலைத்து நிற்பதுவும், எக்காலத்திற்கும் ஏற்புடையதுவும்மே. இந்து மதம் வேதங்களைக் அடிப்படையாகக் கொண்டது. உலகில் உள்ள அனைத்து மதங்களைக் காட்டிலும் முதன்மையானது இந்து மதம் ஒன்று தான்.

பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் நிறுவப்பட்ட மதங்களேயாகும். அந்த மதங்களைத் தோற்றுவித்தவர்கள் பெயர்கள் நமக்கு தெரியும். அவை தோன்றிய காலமும் நமக்கு தெரியும். ஆனால் தோற்றுவித்த மகானையோ, தோன்றிய காலத்தையோ உணர இயலாததுதான் இந்து மதத்திற்கு தலையாய பெருமையாகும்.

மக்களுக்கு வழிபாட்டு முறையில் அதிக சுதந்திரம் கொடுத்திருப்பதே நமது இந்து மதம் ஒன்றில் தான் உண்டு. பல பெயர்கள் கொண்டு வழிபட்டாலும், இறைவன் ஒருவனே இதைத்தான் திருமூலர் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற இந்து மதத்தின் அடிப்படை கொள்கையை எடுத்து உரைத்தார்.

உலகில் இறைவன் கோடானுகோடி ஜீவராசிகளை படைத்துள்ளார். ஒரு படைப்புக்கும் மற்றொரு படைப்புக்கும் வேறுபாடு இருந்தாலும் அடிப்படையில் எல்லா ஜீவராசிகளின் ஆன்மாவும் ஒன்று என இந்து தர்மம் கூறியது. அதாவது "உனக்குள்ளிருக்கும் ஆன்மாவும் எனக்குள்ளிருக்கும் ஆன்மாவும் அந்த அமீபாவிற்குள்ளிருக்கும் ஆன்மாவும், எல்லாற்றிற்கும் மேலாக இறைவனாகிய பரம்பொருளின் ஆன்மாவும் ஒன்றே" என்று சுவாமி விவேகானந்தர் உலக சர்வசமய மாநாட்டில் இந்து மதத்தின் பெருமையை உரத்த குரலில் முழங்கினார்.

ஒவ்வொரு விலங்கையும் மரத்தையும் தெய்வத்துடன் சம்பந்தப்படுத்தியவர்கள் நம் முன்னோர்கள். இதைத் தான் பாரதியார்,

காக்கைச் சிறகினிலே நந்தலாலா – நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா – நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா – என பாடினார்

பாரதியின் இச்சிந்தனையில் இறைவன் எல்லா உயிர்களிலும் கலந்து உள்ளான் என்பதை இந்து மதம் காட்டுகிறது.

உலகிலேயே எறும்புக்கும் உணவு கொடுத்த சமுதாயம் நம்முடைய இந்து தமிழர் சமுதாயம் இதனால் “யாவருக்குமாம் உண்ணும்போது ஒரு கைபிடி” என்று திருமூலர் சகல ஜீவ ராசிகளையும் நேசிப்பதை வெளிப்படுத்துகிறார். பிறருக்கும் தானம் கொடுக்கும்போது தான் ஒருவன் பிறவிப் பயனை அடைகிறான் என கருணையுடன் இந்து தர்மம் எடுத்துரைக்கிறது.

“வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று கூறிய வள்ளலாரும், ஒரு கொடி படர தன் தேரையே தந்த பாரிவள்ளலும், தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவிற்காக தன் தொடையை அறுத்து கொடுத்த சிபி சக்கரவர்த்தி ஆகியோரை கொண்ட, மனித நேயமிக்க மதம் நம்முடைய இந்து மதமாகும்.

“ஓ ஸர்வே பவந்து ஸுகின”; என்கின்ற உபநிடத்தின் வரிகள் அனைவரும் சுகமாக வாழட்டும் என்ற பரந்த மனப்பான்மையை காட்டுகிறது. “எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே” என கூறிய தாயுமானவர் ஒரு இந்து. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என உலகிற்கு உரைத்த கணியன்பூங்குன்றனாரும் ஒரு இந்து. உலக மக்களுக்கு வாழ்வியல் கருத்தை அள்ளிதந்த உலக பொதுமறையாம் திருக்குறளை தந்த திருவள்ளுவரும் ஒரு இந்துவே. இப்படிப்பட்ட எண்ணற்ற பரந்த மனப்பான்மையுள்ள இந்துக்களை உருவாக்கியது நம் இந்து தேசமே.

பரந்த மனப்பான்மையும் மனிதநேயத்தையும் கொண்ட இந்து மதத்தை, பிற வெளிநாட்டு மதங்கள் அழிக்க முற்படுகின்றன. எனவே நம்முடைய இந்து தர்மம், இந்து கலாசாரம் மற்றும் இந்து பண்பாட்டைக் காப்பது ஒவ்வொரு இந்துவின் கடமை ஆகும்.

இலக்கியச் சான்றுகள்

தென்னாடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மெய்ஞான வாசகர் அருமையாகப் பாடியுள்ளார். விஸ்வேஸ்வரன், சர்வேஸ்வரன் என்ற திருப்பெயர்களும் ஈசன்

உலகத்துக்கெல்லாம் இறைவனாக எல்லோருக்கும் கடவுளாக இருந்ததை வலியுறுத்துகின்றன. பாரத நாடு ஜம்புத் தீவின் ஒரு பகுதி என்று வடமொழி சுலோகம் உரைக்கிறது. ஜம்புத் தீவினை நாவலம் தீவு என்று தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அதாவது இன்றைய ஆசியாவும் ஐரோப்பாவும் சேர்ந்த பகுதியே (யூரேஷியா) அன்றைய ஜம்புத் தீவாக விளங்கியது. அரபு நாடான குவைத் என்ற ஊரில் பலப்பல சிவாலயங்கள் பெருகியிருந்தன. குவைத் நாட்டில் இருந்த திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்த பரப்பிரும்மத்தை

குவைப்பதி மலிந்த கோவே போற்றி

என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்கவாசகர் போற்றுகின்றார். உலகமக்கள் அனைவரும் தோற்றமும் முடிவும் ஊரும் பேரும் இல்லாத பரமேஸ்வரனை வழிபடுகின்ற தூய நெறியில் நின்று மகாதேவன் ஒருவனையே வழிபட்டு வந்தனர் என்பதை ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் ஆகியோர்களின் நண்பரான திருமூலமுனிவர் தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்று வடமொழி சுலோகமும் உரைக்கின்றது. உலகிலுள்ள மனித இனம் மட்டுமன்று பறவை மிருகம் தேவர் அசுரர் பாம்பு என எல்லாவிதமான ஜீவ ராசிகளும் காசிபர் என்ற தந்தைக்கு வெவ்வேறு தாயின் மூலம் பிறந்தவர்கள் என்று விளக்குகின்ற புராணங்களும் உலகம் முழுவதும் ஒரே குலமே என்பதை வலியுறுத்துகின்றன. அகஸ்தியர் ஆலயா என்பது இன்று ஆஸ்திரேலியா என்று வழங்கப்படுகின்றது. மக்கீஸ்வரம், மத்தீஸ்வரம் என்பவை முறையே மக்கா மதினா என்று வழங்கப்படுகின்றன. அயனீஸ்வரம் என்னும் திருத்தலம் அயர்லாந்தாக மாறியுள்ளது. உலகப் புகழ் பெற்று இருந்த இந்த ஈஸ்வரத் திருக்கோயில்களையெல்லாம்.

குக்குடேச்சுரம் மக்கீச்சுரம் கூறுங்கால்
ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம்
மத்தீச்சுரம் சித்தீச்சுரம் தண்காணல்
ஈடு திரை இராமேச்சுரம் என்று என்று ஏத்தி
இறைவன் உறை சுரம் பலவும் இயம்புவோமே

என்று ஈசன் அருளால் செந்தமிழிசை பாடும் ஞானம் பெற்ற திருநாவுக்கரசர் போற்றியுள்ளார். மக்கீ என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு ஈ என்று பொருள், தமிழ்நாட்டில் ஈங்கோய்மலை திருக்கோயில் போன்று சௌதி அரேபியாவில் மக்கீஸ்வரம் புகழ்பெற்ற சிவாலயமாக சிறப்படைந்து இருந்தது. இன்றும் கூட மக்காவிற்குச் செல்லும் முகம்மதியர்கள் அங்கு உள்ள ஏழடி உயரமான லிங்கம் பரம்பொருளையே சைத்தான் என்று சொல்லி கல்லெறிந்து விட்டு

வருகின்றனர். முகம்மது நபி காலத்தில் மக்கீஸ்வரம் கோயில் இடிக்கப்பட்டு மசூதியாக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள ஊரான திருமால்பேறு போன்று அமெரிக்காவிலுள்ள பேறு என்ற இடம் திருமால் சிவபூஜை செய்து மயிலாபுரி போன்று நரசிம்மர் சிவபூஜை செய்த இடம் சிங்கபுரி. இத்தலங்கள் ஆங்கில வழங்கில் மயிலாப்பூர் சிங்கப்பூர் என்று சிதைந்துள்ளன.

கங்கை யமுனை சரசுவதி சிந்து நர்மதை கோதாவரி காவிரி என்ற ஏழு புண்ணிய நதிகளின் கரைகளில் பலப்பல சிவாலயங்கள் உள்ளன். ஏழு நதிகளும் சிவாலயங்களை வலம் வருவதை

காவிரி நல்யமுனை கங்கை சரசுவதி
பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவியொடு
குமரி வரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தைக்
கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே

என்று தமிழர்த் திருநெறியை செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர் போற்றுகின்றார். இலங்கைக்கு அப்பால் கன்னி, குமரி, காவிரி போன்ற ஒன்பது நதிகளும் ஏழு மலைகளும் கொண்ட மகேந்திரமலை என்ற திருத்தலத்தில் வேதங்களும் ஆகமங்களும் தோன்றி வளர்ந்து சிவமணம் கமழ்ந்து இருந்தன. ஈசன் அருளிச் செய்த புண்ணிய வேத ஆகமங்கள் தோன்றிய தென்னகம் உலகிலேயே மிகவும் புனிதமான திசை என்று வடநாட்டிலிருந்து வந்து தமிழ்த்தொண்டு புரிந்த திருமூலர் போற்றியுள்ளார்.

வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்கு உள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே (திருமந்திரம்)

மன்னு மாமலை மகேந்திர அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் (திருவாசகம்)

என்று தெய்வத் திருமுறைகள் தென்னாட்டு வேதங்களையும் ஆகமங்களையும் போற்றுகின்றன. திருக்கேதீஸ்வரம், திருகோணமலை ஆகிய இலங்கைத் திருக்கோயில்களை தேவாரப் பதிகங்கள் துதி செய்கின்றன. ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்ற ஆரிய மொழி வேதங்களை சோநகரை (ரஷ்யா) வடகரையில் கொண்டிருந்த சரஸ்வதி நதிக்கரையிலும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற மலைத்தலத்திலும் சர்வேஸ்வரன் அருளிச் செய்ததைத் தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் உரைக்கின்றன.

முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கு (கல்லாடம்)
சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
பண்டு நால்வர்க்கு அறம் உரைத்தருளி
பண்டு இருக்கு நீர் ஒரு நால்வர்க்கு உரை செய்ததே (சம்பந்தர்)
அருமுறையொடு அங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் (அப்பர்)

என்று தெய்வத் திருஅருளாளர்கள் போற்றியுள்ளனர்.

ஆமூர், வாய்மூர் போன்ற தமிழ்நாட்டுத் திருத்தலங்களைப் போன்றே தைமூர் என்றதலம் ரஷ்யாவில் இருந்ததை இன்றும் வழங்குகின்ற இப்பெயர் எடுத்துக்காட்டுகின்றது. உக்கிர பாண்டியனுக்கும் உத்திரப்பிரதேசத்திலுள்ள கல்யாணபுரத்து இளவரசிக்கும் நடைபெற்ற திருமணத்தில் சீனா, சோவியத் ஆகிய நாடுகளிலிருந்தும் அரசர்கள் வந்ததைத் திருவிளையாடற்புராணங்கள் தெரிவிக்கின்றன. ஜாவா, சிங்கப்பூர், மலேசியா, கம்போடியா (காம்போதி) மற்றும் பிற கிழக்கு தீவுகளில் சிவ வழிபாடு சிறப்பாக விளங்கியது, ஜாவக நாட்டு மக்கள் தமிழ்நாட்டு அடியார் பெருமக்களைப் போற்றி வணங்கியதை மதுரைக் காஞ்சி என்ற சங்க காலத்துத் தனிப்பாடல் தெரிவிக்கின்றது, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் பரமசிவனைப் பிரம்மன் விஷ்ணு ருத்திரன் ஆகிய மூன்று தெய்வங்களும் ஒன்றாக வந்து பூஜை

செய்து தத்தமக்கு உரிய உலகங்களையும் வாழ்க்கையையும் பதவியையும் பெற்றுக் கொண்ட திருத்தலம் திரியம்பகேஸ்வரம். இவ்வாறு மூன்று மூர்த்திகளும் ஒன்றாக வந்து மும்மூர்த்தி நாயகனைப்பூஜை செய்த திருத்தலம் அமெரிக்காவில் உள்ள திரிநாடு (த்ரிநாட்). இவ்வாறு இலக்கியச் சான்றுகளைப் போன்றே உலகம் முழுவதும் நமக்கு கிடைத்துள்ள புதை பொருட்சான்றுகளும் நாடுகளின் பெயர்களும் உலக நாடுகள் அனைத்தும் சிவபரம்பொருளை வழிபட்டு வந்ததை உரைக்கின்றன.

புதைபொருட் சான்றுகள்

வடஅமெரிக்காவில் கொலரடா என்ற ஆற்றங்கரையின் அருகேயுள்ள குன்றின் மீது பத்தாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த சிவாலயம் கண்டறியப்பட்டுள்ளது. இத்தாலியில் ஐயாயிரம் ஆண்டுகள் தொன்மையான சிவலிங்கம் கண்டு எடுக்கப்பட்டு அங்கு உள்ள பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அலெக்சாண்டிரியாவில் நூற்று இருபத்தொன்பது அடி உள்ள லிங்கப் பரம்பொருள் உள்ளது. கிரேக்க நாட்டில் லிங்கப் பரம்பொருள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. ஸ்காட்லாந்து அயர்லாந்து (அயனீச்சுரம்) ஆகிய இடங்களிலும் சிவாலயங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கிழக்கு பாரதத்தில் உள்ள நாகளேச்சுரம் நாகாலாந்து என்று பெயர் மாற்றப்பட்டவாறே அயனீச்சுரம் என்பது அயர்லாண்டு என்று ஆக்கப்பட்டது. பாபிலோனியாவிலுள்ள களிமண் பட்டயங்களில் சிவன் என்ற திருநாமம் காணப்படுகின்றது. சிவன் என்ற இந்தத் தமிழ்ப்பெயர் ஒரு மாதத்தின் பெயராகவும் இருந்தது. சிவநாமங்களில் எல்சடை என்ற பெயர் இங்கு புகழ்பெற்று விளங்கியது. எல் என்ற தமிழ்ச்சொல்லுக்கு இருள் என்று பொருள். சடை என்பது ஜடா என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ்வடிவம். எல்சடை என்றால் கரியசடையுடையவன் என்று பொருள். எகிப்து நகரத்தில் லிங்கம், நந்தி, பாம்பு, புலி, சிங்கம் ஆகியவற்றுடன் கூடிய சிவாலயம் புகழ்பெற்று இருந்ததால் அந்த நகரம் சிவன் என்றே அழைக்கப்பட்டது. சிறிய ஆசியாவிலும் சிவன் என்ற பெயரில் ஒரு நகரம் உள்ளது. அழிந்து போன இந்த நகரத்தின் எஞ்சியுள்ள பகுதிகள் லிங்கப் பரம்பொருளும் நந்தியும் இங்கு வழிபடப்பட்டதைக் காட்டுகின்றன. சிரியா நாட்டின் ஒரு நாணயத்தில் சிவவடிவம் உள்ளது. ஜப்பானில் சந்திகளிலும் சதுக்கங்களிலும் சிவாலயங்களை நிர்மாணித்து வழிபட்டு வந்துள்ளனர். திபெத், சீனா, பூட்டான், மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளிலும் சிவ வழிபாடு சிறந்து விளங்கியுள்ளது. போர்னியா நாட்டுக் குகைகளிலிருந்து ஈசன் திருவருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுமத்திராவில் பெரிய அளவிலான லிங்கப்பரம் பொருளும் அர்த்தநாரீஸ்வர வடிவமும் கிடைத்துள்ளன. ஓசையொலிக்கும் இயக்கத்திற்கும் மூலகாரணமான நடராஜர் திருவுருவும் மலேசியாவில் கிடைத்துள்ளது. சேரம் என்ற ஊரில் ஆடல்



நாயகனும் தங்கத்தாலான லிங்கப்பரம்பொருளும் கிடைத்துள்ளன. தங்க லிங்கங்களை அரசர்கள் வழிபடுவர் என்று திருமந்திர ஆகமம் கூறுகின்றது. ஹரப்பா மொகஞ்சோதரா பகுதிகளில் சிறியனவும் பெரியனவுமாக எண்ணற்ற லிங்கப்பரம்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிறிய லிங்கங்கள் வீட்டில் வைத்துப் பூசை செய்யப்படும் கிரியை வழிபாட்டிற்கு உரியவை. பெரிய லிங்கங்கள் சரியை எனப்படும் கோயில் வழிபாட்டிற்கு உரியவையாக விளங்கின. இவை மட்டுமின்றி வலதுகால் தூக்கி நின்றாடும் பொன்னம்பலேசர் திருவுருவமும் இடது கால் தூக்கியாடும் மதுரை வெள்ளியம்பலவாணர் திருவுருவங்களும் நந்தியும் திருவிழாக்களைக் காட்டும் முத்திரைகளும் பல்வேறு காணிக்கைப் பொருட்களும் வேள்விச் சாலைகளும் புரோகிதர் மண்டபங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 'முகம் அஞ்ச ஓதரன்' அதாவது ஐந்து முகங்களால் ஓதுபவன் என்பதே மொகஞ்சோதரா என்று ஆயிற்று. ஐந்து தொழில் புரியும் ஐந்தெழுத்து நாயகன் முகங்களால் ஆகமங்கள் ஓதி அருளினார்.

மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்று அவை தன்னை மகேந்திரத்து இருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித்து அருளியும்

என்று பழம்பெரும் திருவாசகம் ஆகமங்களை ஓதிய மொகஞ்சோதரனைப் போற்றுகின்றது. ஹர என்ற வடமொழிச் சொல்லும் அப்பா என்று தமிழ்ச்சொல்லும் சேர்ந்து ஹரப்பா என்றாயிற்று. வேத ஆகமங்களை ஓதியருளியதால் விஸ்வேஸ்வரனுக்கு ஓதீஸ்வரர் என்று பெயர். இம்முறையில் உலகம் எங்கும் கிடைத்துள்ள புதைபொருட் சான்றுகள் மட்டுமன்று உலக நாடுகளின் பெயர்களும்கூட தென்னாட்டுச் சிவபெருமான் எல்லா நாட்டவர்களுக்கும் இறைவனாக விளங்கியதை எடுத்துரைக்கின்றன.

மொழிச்சான்றுகள்

உலக நாடுகளின் பெயர்கள் எல்லாம் ஆரியம், தமிழ் என்ற இரண்டு மொழிகளின் சிதைந்தப்பட்ட சொற்களாகவே உள்ளன. ஒரு காலத்தில் உலகம் முழுவதும் சமஸ்கிருதம் தமிழ் என்ற இரண்டு மொழிகள் மட்டுமே பேசப்பட்டு வந்தன என்பதையும் இவை எடுத்துக் காட்டுகின்றன, ஹரப்பா, மொகஞ்சோதரா என்ற இரண்டு இடங்களின் பெயர்களும் சமஸ்கிருதம் தமிழ் இரண்டு மொழிச் சொற்களின் சேர்க்கையாகும். கனடா என்பது மேலை நாட்டு ஊர். இது தென்னிந்தியா இசையின் ஒரு ராகப்பெயர். அமெரிக்காவில் உள்ள உருகுவே என்ற ஊரின் பெயர் ஒரு தமிழ்ச்சொல், ஈரான் என்பது இரட்டைப் பசு என்று பொருள் தரும் செந்தமிழ்ச் சொல். இவ்வாறே ஈராக் என்பதற்கு (ஈராக்கை) இரப்பையுடல் என்று பொருள். பஞ்சாக்கை (பஞ்சாப்) என்ற சிவத்தலத்தை அப்பர் தேவாரம் போற்றியுள்ளது. பஞ்சாக்கை போன்ற ஈராக்கை என்பதும் ஒரு

சிவத்தலமாக விளங்கியது. சூரிநாம், சகாரா, ருமேனியா, யமன், மங்கோலியா ஆகியவையெல்லாம் ஆரிய மொழிச் சொற்களாகும். அமெரிக்காவில் உள்ள பேறு என்பதும் ற்றிப்ளிகேன் ஆனது போன்றே பிள்ளைப்பண் என்பதும், பிலிப்பைன்ஸ் ஆயிற்று, ஓமன் என்பது ஓங்காரேஸ்வரனை குறிக்கும் தமிழ்ச்சொல். ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஜலால்கோட் பாக்கிஸ்தானத்தில் உள்ள ஜெயில் கோட் ஆகிய பெயர்கள் எல்லாம் மூல உச்சரிப்பே தெரியாத வகையில் சிதைத்து வழங்கப்படுவது இன்றும் கண்கூடு. தூத்துக்குடி கோழிக்கோடு போன்றவையெல்லாம். டுட்டகுரின், காலிகட் என்றெல்லாம் மாற்றப்பட்டு வழங்கப்படுவதை யாவரும் அறிவர், இவ்வாறே உலகத்தின் பல பகுதிகளிலும் நிலவி வந்த தமிழ் மற்றும் சமஸ்கிருதப் பெயர்கள் எல்லாம் மூல வடிவமே தெரியாத வகையில் சிதைத்து வழங்கப்படுகின்றன. ஆப்கானஸ்தானத்தின் பழைய பெயர் காந்தாரம். இன்றும் இதிலுள்ள ஸ்தானம் என்பது சமஸ்கிருதச் சொல். காந்தாரம் நாட்டு இளவரசியே காந்தாரி. காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம் ஆகியவையெல்லாம் தேவாரத் திருமுறைப் பண்களின் ராகங்களின் பெயர்களாகும். பிரம்மா என்பது பேச்சுவழக்கில் பர்மா என்றாயிற்று. இது தற்காலத்தில் மியான்மார் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பன்னிரு திருமுறைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ள சிவத்தலங்களைப் போற்றுகின்றன. கயிலைமலை, சந்திர தீபம் (தீபெத்) நேபாளப் பசுபதீஸ்வரம், மேரு, மந்தாரம், இந்திர நீலம், ஹேம கூடம், வாரனாசி, குருக்ஷேத்திரம் (ஹரியானா), விராடபுரம், காம்பீலி, ருத்திரகோடி, குவைப்பதி (குவைத்), மக்கீஸ்வரம் (மக்கா), மத்தீஸ்வரம் (மதினா) அயனீஸ்வரம் (அயர்லாந்து) அகத்தீஸ்வரம் (ஆஸ்திரேலியா), சோமீஸ்வரம் (குஜராத்), நாகனேஸ்வரம் (நாகாலாந்து), உஞ்சேனை மாகாளம் (உஜ்ஜயினி), சித்தீஸ்வரம் (ஒரிஸ்ஸா), விந்திய மலை (ஓங்காரேஸ்வரம்), கொண்டீஸ்வரம் (கோவா), திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம் ஆந்திரம்), நந்தீஸ்வரம் (கர்நாடகம்), திருவஞ்சைக்களம் (கேரளம்), நாகேஸ்வரம் (மகாராஷ்ட்டிரம்), கந்தமாதனம் (திருச்செந்தூருக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த முழுகிப்போனதலம்), மகேந்திரமலை (இலங்கைக்கு அப்பால் இருந்த முழுகிப் போனதலம்), திருக்கேதீஸ்வரம் (இலங்கை) போன்று உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள சிவத்தலங்கள் தேவாரத் திருவாசகம் முதல் பெரிய புராணம் வரையிலாள பன்னிரண்டு திருமுறைகளில் போற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு அப்பால் உலக நாடுகள் எங்கும் இருந்த அடியார்களையே.

அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்

என்று பரமேஸ்வரனைத் தோழனாகப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றினார். தெய்வங்கள் முதல் தாவரம் வரை எல்லா வழிபாடுகளையும்

தன்னுள் கொண்டுள்ள சிவவழிபாடு மட்டுமே உலகத்தில் இருந்தபோது அதற்கு என்று பெயர் எதுவும் இல்லை. கலியுகத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மனித வழிபாட்டு மதங்கள் தோன்றியபோது இன்னது என்று சுட்டிக் குறிக்க முடியாத பரம்பொருளை வழிபடுகின்ற இயற்கையான செம்மையான நெறி சைவம் என்று அழைக்கப்பட்டது. சிவபெருமான் செந்நெறியப்பராக உள்ளார்.

வடநாட்டிலும் வெளிநாட்டிலும் உண்டான தனி மனித வழிபாடு மதங்கள் எல்லாம் மன்னர்களை மாற்றி மக்கள் மேல் தங்கள் மதத்தை வலுக்கட்டாயமாகத் திணிப்பதையே வழக்காகக் கொண்டிருந்தன. மக்கள் கத்தி முனையில் மதம் மாற்றப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்டன, மறைக்கப்பட்டன புத்த விகாரங்களாகவும் சமணப் பள்ளிகளாகவும் மசூதிகளாகவும் சர்ச்சுகளாகவும் மாற்றப்பட்டன. அடியார்கள் கொல்லப்பட்டனர். நாடுகடத்தப்பட்டனர். ஊர்களின் பெயர்களும் தலங்களின் பெயர்களும் மாற்றப்பட்டன. வேத ஆகமங்கள் அழிக்கப்பட்டன. இதனால் உலகில் பல பகுதிகளிலும் கடவுள் வழிபாடு அழிந்து போயிற்று.

எங்கெல்லாம் எப்போதெல்லாம் கடவுள் வழிபாடும் பக்தியும் அழிந்து தனிமனிதனின் புகழ் பரப்பும் வெறி மிகுந்து தீய பண்புகளும் கொடுமைகளும் தலைவிரித்தாடுகின்றனவோ அங்கெல்லாம் அப்போதெல்லாம் நாடு துண்டாக்கப்பட்டு மக்கள் துன்பத்திற்கு உள்ளாகின்றனர். ஆங்கிலப் பழக்க வழக்கங்களில் மூழ்கித் திளைத்து உலகத்தின் மிகப் புனிதமான திருத்தலமான திருக்கயிலாயமலை கூட பக்தியில்லாதவர்களினால் மாசுப்படுத்தப்படுகிறது.

எவ்வளவோ படையெடுப்புகளையும் துன்பங்களையும் துயரங்களையும் கண்ட பின்பும் பாரதத் திருநாடு இயற்கை நெறிபால் நின்று மெய்ப்பொருளை வழிபடுகின்ற நாடாகவும் புண்ணிய பூமியாகவும் புகழ் பெற்று தொடர்ந்து தெய்வீகத்தில் சிறந்து விளங்குகின்றது.

RSS-HSS
BLOOD DONORS BUREAU
சார்பாக
இரத்த தான கொடையாளர்கள் விவரம் சேகரிப்பு
தமிழகமெங்கும் நடைபெற்ற வருகிறது. இரத்த தானம் செய்ய விரும்புவோரும் இரத்த தானிகளை பெற விரும்புவோரும் கீழ்கண்ட எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.
A. பாலா - 94458 42020

ஞான யோகம்

ஞான யோகம் என்பதற்கு ஞானமும் யோகமும் ஒன்று சேருவதே ஆகும். ஞானம் எனும் சொல்லுக்கு தன்னைப் பற்றிய அறிவை அடையும் சாதனையாகும். யோகம் எனும் சொல்லுக்கு, சாதனம் அல்லது கருவி என்று பொருள். எனவே ஞானம் எனும் சாதனை அடைய யோகம் எனும் சாதனம் (கருவி) அவசியம்.

இந்த ஞான சாதனம் எந்த இலக்குவை அடைய முயற்சி செய்வது எனில் தன்னைப் பற்றிய ஞானம் அடைவதே. தன்னைப் பற்றிய ஞானம் அடைவது எனில் தன்னில் நிலைபெற்ற ஆத்மாவை பற்றிய ஞானத்தை அடைதலே ஆத்ம ஞானம் ஆகும். இந்த ஜீவாத்மா ஆத்ம ஞானத்தை அடைய ஞானயோகம் சிறந்த வழியாகும்.

ஆத்ம ஞானத்தை அடையும் வழிகள் :-

இந்த ஆத்ம ஞானத்தை அடையும் வழிமுறைகளில் இரண்டு வழிகள் கூறப்பட்டுள்ளது. ஒன்று ஞான சாதனை. இரண்டாவது யோக சாதனை. ஞானத்திற்கான சாதனை அடைய இரண்டு வழிகள் உள்ளது. ஒன்று, வேதாந்த சாத்திரங்களை கேட்டல், கேட்டவைகளை அறிவினால் விசாரித்து ஆராய்ந்து சிந்தித்து தெளிவடைவதே ஞானம்.

ஆத்ம ஞானம் என்பது "நான்" என்ற என்ற சொல்லினை விசாரித்து அறிந்து கொள்வதே 'ஞானம்' என்பர்.

ஞானத்தை அடைய படிநிலைகள் :-

1. விவேக புத்தி: ஒன்றின் பொருளைப் பிரித்து அறிந்து கொள்ளும் தன்மையே அறிவே. எடுத்துக்காட்டாக, இது தர்மம் - இது அதர்மம், இது உண்மை - இது பொய், இது நல்லது -இது கெட்டது, இது நன்மை - இது இன்பம், இது அழிவற்றது - இது நிலையானது என்று அறிவினால் பிரித்துப் பார்த்து தெரிந்து கொள்வதே ஞானம் ஆகும். இதனை விவேக புத்தி என்பர்.

2. வினிச்சய புத்தி: ஒன்றை நன்கு பிரித்துப் பார்க்கும் விவேக புத்தி இருந்தும், அந்த அறிவில் உறுதி இல்லை எனில் அதற்கு வினிர்ச்சய புத்தி என்பர்.

3. விசுத்த புத்தி: மனத்தூய்மை, கபடமற்ற குணம் மற்றவர்களை ஏமாற்றாத மனம் உடையவர்களை விசுத்த புத்தி உடையவர்கள் என்பர்.

4. விசால புத்தி: பரந்த மனதை உடையவர்கள், பிறர் பொருளில் ஆசை கொள்ளாதிருத்தல்; அதே நேரத்தில் நமது பொருளை பிறருடன் பகிர்ந்து கொள்வது விசால புத்தி (பரந்த மனப்பான்மை) என்பர்.

5. நிச்சல புத்தி: ஒன்றிலேயே நமது மனதை பொருத்திப் பழகும் தன்மையை உறுதியான புத்தி அல்லது நிச்சல புத்தி என்பர்.

6. திட புத்தி: துன்பங்கள், துயரங்கள், நட்டங்கள் வரும் போது அதனை தாங்கிக் கொள்ளும் உறுதியான மனம் தேவை. அத்தகைய மனதிற்கு திட புத்தி என்பர்.

7. ஜாக்கிரத் புத்தி: விழிப்புணர்வுடன் கூடியதாக இருக்கும் மனம் அல்லது அறிவு அல்லது புத்தியை விழிப்புநிலை புத்தி என்பர்.

யோகம் என்பதின் பொருள் :

யோகத்தை மனதின் அமைதி என்றும், மனதை சாத்வீக குணத்திற்கு மாற்றி அமைத்தல்` என்றும், நமது எண்ணங்களின் அமைதியே யோகம் என்றும், அலைபாயும் மனதை நமது மனதின் கட்டுப்பாட்டில் நிலை நிறுத்தும் செயல்களுக்கு யோகம் என்பர்.

சுகம்-துக்கம் போன்ற இருமைகளை சந்திக்கும் போது அதனை தாங்கிக் கொள்ளும் திறன் நமக்குத் தேவை. நமது மனம் சாத்வீக குணத்தில் நிலையில் நிலை நிறுத்த வேண்டும். மனம் நமது கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இப்படிப்பட்ட நற்குணங்களில் நமது மனதை நிலை நிறுத்த செய்தலே யோகம் ஆகும்.

யோகத்தை அடையும் வழிகள் : சத்துவ குணத்தில் மனதை நிலை நிறுத்த வேண்டும். பதஞ்சலி முனிவர் தனது யோக சூத்திரத்தில், தியானம் எனும் தொடர் பயிற்சியாலும், வைராக்கியத்தாலும் மட்டுமே மனதை நம் கட்டுக்குள் கொண்டு வரமுடியும் என வழியுறுத்துகிறார். வைராக்கியம் எனில் உலக இன்பங்களில் ஆசைப்பட்டு அதற்கு அடிமையாக இல்லாமல் இருப்பதே. விவேகம், வைராக்கியத்தை அடைந்து, மன ஒருமுகப்பாடு, மனத்தூய்மை,

புலனடக்கம், மனவடக்கம், அகிம்சை, பொறுமை, தவம், தியாகம் ஆகிய சாதனைகளால் யோகத்தை எளிதாக அடைய முடியும்.

மனம் வைராக்கியம் அடைவதற்கான வழிகள்:–

மனப்பக்குவமே வைராக்கியம் என்பர். தவத்தாலேயே வைராக்கியத்தை அடைய முடியும். அந்த மனதுடன் ஆத்ம ஞானத்தை அறிந்தால் சீவ முக்தி உறுதியாக கிடைக்கும். ஒரு பெருந் துயரத்தை கடக்க சிறிய கஷ்டங்களை தாங்கிக் கொள்ள நம் மனம் பழகிக் கொள்ள வேண்டும். தவத்தின் மூலம் யோகத்தை அடைந்து மனதை நம் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

உடல் அளவில் செய்யும் யோகாசனம் எனும் தவத்தால் சோம்பல் நீக்கப்படுகிறது. மேலும் உடல் தூய்மை, சமூகப் பணி, குரு சேவை ஆகியவற்றாலும் சரணாகதி எனும் பணிவு குணங்களினாலும் நாம் மனதை தூய்மைப்படுத்திக் கொண்டு மன வைராக்கியம் அடையலாம்.

ஞான யோகமும் அதன் பலன்களும் :–

ஞானயோகத்தை அடைவது என்பதும், ஆத்மஞானத்தை அடைவது என்பதும் ஒன்றே. உயிருடன் இருக்கும் போதே ஞானமும் யோகமும் அடைவதே சீவ முக்தி என்பர். ஆத்ம ஞானி என்றால் ஆத்மஞானத்தை அறிந்தவன் என்று பொருள். யோகி எனில் ஸித்தி ' அடைந்தவர் என்று பொருள். சீவ முக்தி எனும் மோட்சத்திற்கு இலக்கு ஆத்ம ஞானம் ஒன்று மட்டுமே. ஞானத்தை அடைவது எளிது என்றும், யோக சித்தியை அடைவது கடினம் என்று கருதுகிறார்கள்.

ஞானத்தை அடைய அதற்கான பிரமாணங்கள் (கருவிகள்) எனும் வேதாந்த சாத்திரங்களை மரபு வழி வந்த குருவின் மூலம் கேட்டு, சிந்தித்து விசாரித்து அறியவேண்டும். சாத்திரங்களை சரியான முறையில் பகுத்தாய்வு (விசாரணை) செய்யாவிட்டால் விபரீத ஞானம் ஏற்படும். மனப்பக்குவம் இல்லாதவர்களுக்கு, அறிவைத் தரும் சரியான கருவிகள் (பிரமாணங்கள்) இருப்பினும் பலனில்லாமல், விபரீத ஞானம் உண்டாகும். இதனை ஞான ஆபாசம் (ஞானம் வந்து விட்டது போல் தோண்றும் உணர்வு) என்பர். எனவே யோகத்தினால் மனதை கட்டுப்படுத்த வேண்டும்.

எனவே ஞான சாத்திரங்களை தொடர்ந்து பயில்பவர்கள், யோகமும் பயில வேண்டும். ஞான சாத்திரங்களை பயில்பவர்களின் வாழ்க்கையை விட யோகம் பயின்றவர்களின் வாழ்க்கை நன்றாக அமையும். பலர் என்னதான் சாத்திரங்கள் பயின்றாலும், அதன்படி ஏன் நடந்து கொள்ள இயலவில்லை எனில் யோகப் பயிற்சி இல்லாத காரணத்தினால்தான். நமது உடல் பல உறுப்புக்களின் சேர்கையாக அமைந்துள்ளது. அறிவு/புத்தி கட்டளை இட்டாலும், சக்தியற்ற உறுப்புக்கள் புத்தியிட்ட கட்டளைகளை நிறைவேற்ற இயலாது. அது போல்

ஞானம் இருந்தும் யோகம் இல்லை எனில் ஞானத்தினால் கிடைக்க வேண்டிய பலன்களான சீவன் முக்தி எனும் மோட்சம் கிடைப்பதரிது.

ஞானம் எனும் அறிவு ஒரு பொருளை கண்ணாடி போன்று உள்ளது உள்ளபடி காட்டும். எனவே ஒரு பொருளை பகுத்தாராய்வு செய்ய நம் மனதில் உள்ள தீய குணங்களை நீக்கி தெய்வீக குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். எனவே ஞானத்தை அடைய யோகம் எனும் சாதனை அவசியமாகும். இந்த ஞான யோகத்தின் மூலம் தத்துவமசி என்ற மகாவாக்கிய ஞானம் மற்றும் அஹம் பிரம்மாஸ்மி போன்ற ஞானம் நம்முள் உண்டாகும்.

ஞான யோக சாரம் :–

உலக விவகார நோக்கில், புருஷன், பிரகிருதி எனப்படும் பார்ப்பவன், பார்க்கப்படும் பொருள் என்ற வேற்றுமை தோண்றுகிறது. ஆனால் அந்தராத்மாவில் பார்க்கும் போது இப்படிப்பட்ட வேற்றுமைகள் கிடையாது. எல்லாம் பரமாத்ம வடிவமே. அதனால், ஒருவனின் இயல்பான குணத்தையோ, அதை ஒட்டிப் போகும் நடவடிககைகளையும் பார்த்து யாரையும் இகழவோ, புகழவோ கூடாது. பிறரின் இயல்புகளையும், செயல்களையும் விமர்சனம் செய்பவன் ஞான நிஷ்டையிலிருந்து நழுவி விடுகிறான்.

ஆத்மாவின் சொரூபம்:–

இவ்வுலகில் பார்க்கப்படும் பொருள்கள், பார்வைக்கு அகப்படாத பொருள்கள் ஆகிய எல்லாமே, பரமாத்மாதான். அவரே உலகத்தை படைக்கிறார், உலகமாகவும் ஆகிறார். உலகத்தைக் காப்பாற்றுகிறார், காப்பற்றப்படுபவராகவும் இருக்கிறார், அவரே உலகத்தை அழிக்கிறார், அழிக்கப்படும் பொருளாகவும் இருக்கிறார். (செய்பவரும், செய்யப்படும் பொருளும் அவரே; ஆத்மாவன்றி வேறோன்றில்லை. விவகார நோக்கில் பார்க்கையில் ஆத்மா, இவ்வுலகிலிருந்து வேறுபட்டது. ஆனால் ஆன்ம நோக்கில் பார்த்தால் அதைத் தவிர வேறு பொருளே இல்லை.

ஆத்ம தத்துவத்தை வாயால் சொல்ல இயலாது (அனிர்வசநீயம்). படைப்பு - நடப்பு - துடைப்பு அல்லது அத்யாத்மம் - அதிதைவம் - அதிபூதம் என்று ஆத்மாவில் கற்பிக்கப்பட்டுள்ள நிலைகள் ஆதாரமற்றவை. இவைகள் இல்லை என்றாலும் இருப்பன போல் தோற்றமளிக்கிறது. இவை சத்துவ குணம், இராட்சத குணம் மற்றும் தாமச குணம் ஆகிய முக்குணங்களால் தோன்றுவன. காண்பவன் - காட்சி - காணப்படும் பொருள் என்று மாயையின் மூன்று வகையான விளையாட்டுகள் இது.

இந்த உலகம் தோற்றம் - அழிவு உடையதாக இருப்பதால், அநித்தியம் - அசத்தியம் என்பதை, பிரதட்சம் - அனுமானம் - வேதாந்த சாத்திரங்கள், ஆப்த வாக்யம், சுய அனுபவம் மற்றும் குரு உபதேசம் எனும் பிரமாணங்களால்

(கருவிகளால்) உறுதியாகிறது. எனவே உலகம் அநித்தியம், அசத்தியம் என்பதை உணர்ந்து, எதனுடன் ஒட்டுதல் இன்றி வாழவேண்டும். (சங்கத்தில் நிஷ்சங்கமாக வாழவேண்டும்).

சோகம், மகிழ்ச்சி, அச்சம், கோபம், லோபம், மோகம், வேட்கை, பிறப்பு-இறப்பு இவையெல்லாம் அகங்காரத்துக்கே அன்றி, ஆத்மாவுக்கு அல்ல. (சான்றாக, அகங்காரமில்லாத ஆழ்ந்த உறக்கத்தில், துயரங்கள் - குழப்பங்கள் ஏற்படுவதில்லை. சுக - துக்கங்கள் ஆத்மா சம்பந்தப்பட்டதாக இருந்தால் உறக்கத்திலும் அவை ஏற்பட வேண்டும். எனவே அவைகள் இந்த உடலின் தர்மங்கள் தவிர ஆத்மாவுடையதல்ல).

ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் பிராணன், மனம் ஆகியவற்றால் நிலைபெற்றுள்ள ஆத்மா, இவைகளில் பற்று கொண்டு, இவைகளே நான் என்று கருதும் போது, சீவன் என்று அழைக்கப்படுகிறது. அதிநுட்பமான ஆத்மாவின் மூர்த்திதான் - குண கர்மங்களான லிங்க சரீரம், அல்லது சூத்ராத்மா, அல்லது மஹத் தத்துவம் என்பர். அவன் காலரூபியான பரமேசுவரனுக்கு அடங்கி சம்சாரச் சக்கரத்தில் சுழல்கிறான்.

விவேகியானவன், நல்ல குருவை அணுகி ஞானோபதேசம் பெறவேண்டும். மிகவும் கூர்மையாக தீட்டப்பட்ட ஞானம் எனும் வாளைக் கொண்டு அக்ஞானம் எனும் அகங்காரத்தை ஆணி வேருடன் வெட்டித்தள்ளி ஏகாத்மபாவம் எனும் உண்மை அடைந்தவன் உலகில் இரண்டற்றவனாக சுற்றித் திரியலாம். அந்த நிலையில் அவனிடம் எவ்வித பற்று-வெறுப்பு இருப்பதில்லை.

எது இந்த உலகத்திற்கு காரணமாக இருக்கிறதோ, எதனால் இந்த உலகம், பிரகாசிக்கிறதோ, அந்த பிரம்ம வடிவாகவே உலகம் உள்ளதோ; உலகம், பிரம்மத்திலிருந்து வேறானதல்ல - என்ற முடிவு, பல்வேறு சாத்திரங்களால் நிலை நிறுத்தப்படுகிறது. இதுவே ஞானம்.

தங்கத்தால் வளையல், கடுக்கன், மோதிரம் போன்ற நகைகள் செய்யப்படுகிறது. ஆபரணமாக ஆவதற்கு முன்னும், அவை உருக்கப்பட்டு ஆபரணத்தின் தன்மையை இழந்துவிட்ட போதும், தங்கம்தான், இடைப்பட்ட

காலத்தில், பெயரும், உருவமும் பலவாக கூறப்படுகிறது. அது போல, உலகத் தொடக்கம் - நடு - முடிவு எல்லாம் இறைவனே.

மனதிற்கு விழிப்பு நிலை - கனவுநிலை - உறக்கநிலை உள்ளது. இந்த மூன்று நிலைகளுக்கும் முறையே சத்வம் - ரஜஸ் - தமஸ் எனும் முக்குணங்கள் காரணங்களாகும்; மேலும் அத்யாத்மம் (புலன்கள்), அதிபூதம் (மண், முதலிய பஞ்சபூதங்கள்), அதிதைவம் (கர்த்தா எனும் செயல் செய்பவன்) என்று மூன்று வகையான வேறுபாடுகள் உள்ளன. மும்மூன்றாக இருப்பனவெல்லாம் எவருடைய இருப்பில் உண்மை போல் காட்சியளிக்கின்றனவோ, சமாதி நிலையில் மூவகை வேறுபாடுகள் இல்லாத போதும் எது எப்போதும் இருந்து கொண்டு இருக்கிறதோ, அந்த நான்காவது தத்துவம் - பிரம்ம தத்துவம் - அதுவே சத்தியம்.

படைப்புக்கு முன் எது இருக்கவில்லையோ, பிரளயத்துக்குப் பின் எது இருக்கப் போவதில்லையோ, அது, அந்த இடைப்பட்ட காலத்திலும் இல்லை - என்றே கருதவேண்டும். ‘ உலகம் இருக்கிறது’ என்பது வெறும் கற்பனையே. ஒரு பொருள் எதனால் ஆக்கப்படுகிறதோ, எதனால் பிரகாசிக்கப்படுகிறதோ, அதுவே - அந்த காரணப் பொருளே - இதன் உண்மையான வடிவம் என்பது உறுதியான உண்மை. இதுவே முடிவான முடிவாகும்.

பற்பல மாறுதல்களை அடையும் பிரபஞ்சம், உண்மையில் இல்லாத போதிலும், இருப்பதாகத் தோற்றமளிக்கிறது. இது சுயம்பிரகாசமான பிரம்மமே ஆனதால், புலன்கள், விஷயங்கள், மனம், பஞ்சபூதங்கள் என பல்வகை நாம-ரூபங்கள் உண்டோ, அவை அத்தனையிலும் பிரம்மமே விளங்குகிறது.

வேதாந்த சாத்திரங்களை மரபு வழியாக வந்த குருவின் மூலம் கேட்டல், (சிரவணம்) கேட்டதில் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளுதல் (மனனம்), கேட்டதை மனதில் அசைபோடுதல் (நிதித்யாசனம்), ஸ்வாநுபூதி, முதலிய சாதனங்கள் வழியாக ஆத்ம ஞானம் எனும் பிரம்ம ஞானத்தை அறிந்து கொள்ளமுடியும். ஆத்ம ஞானம் பெற்ற குருவின் மூலம் ஆத்மவிசாரம் செய்து பழகி, உடல் போன்ற அனாத்மா, ஆத்மாவிற்கு புறம்பாக பொருட்களைப் பற்றிய சந்தேகங்களை நீக்கிவிட வேண்டும். பின்னர் ஆனந்தமேயான ஆத்மாவில் மூழ்கி, பொருட்களில் பற்று இல்லாதவனாக ஆகிவிட வேண்டும்.

இது போன்ற அனாத்மா பொருட்களை எவ்வாறு ஒதுக்குவது எனில், இந்த உடல், உணவின் மாற்று உருவம் என்பதால் அது ஆத்மா இல்லை; புலன்கள், அவைகளின் அதிஷ்டான தேவதைகளான பிராணன், வாயு, நீர், அக்னி, மனம் ஆகிய எதுவும் ஆத்மா அல்ல. ஏன் எனில், இவைகளும் உடலைப் போல உணவின் மூலம் உண்டாகிறது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆகாயம், மண், சப்தம் முதலிய புலனுகர் விஷயங்கள் மற்றும் மூன்று குணங்களின் சாம்ய அவஸ்தையான இயற்கையும் (பிரகிருதி) ஆத்மா அல்ல. (ஆத்மாவிற்கு புறம்பான இந்த அனாத்மா வஸ்துகளை நேதி - நேதி (இதுவல்ல, இதுவல்ல) என்று ஒதுக்கிவிட்டு, ஆத்மா ஒன்று மட்டுமே சத்தியம் (உண்மை) என்று உறுதி கொள்ள வேண்டும்).

ஆத்ம ஞானம் எனும் பிரம்ம ஞானத்தை அடைந்தவன், உலகாயத சுக-துக்கங்கள் பாதிப்பதில்லை. சுகம் வரும் போது அவன் மகிழ்வதில்லை. துயரம் வரும் போது வருந்துவதில்லை. ஆத்மானந்தத்தில் மூழ்கியிருப்பவனுக்கு, உலக விசயங்களினால் உண்டாகும் சுக - துக்கங்களால் பாதிக்கப்படுவதில்லை.

ஆகாயம், வாயுவால் உலர்த்தப்படுவதில்லை; நெருப்பினால் எரிக்க முடியாது; நீரினால் ஈரப்படுத்த முடியாது; பூமி தனது புழுதியால் மாசுபடுத்த இயலாது; காலங்களின் தன்மைகளான வெப்பம் - குளிர் ஆகியவாற்றால் பாதிக்கப்படுவதில்லை. காரணம், இந்தத் தன்மைகள் எல்லாம் சில நேரங்களில் மட்டுமே இருப்பவை. ஆனால் ஆகாயாமோ, இவைகள் எல்லாவற்றிக்கும் ஆதாரமாக இருப்பது. அதுபோலவே, சத்வ-ரஜஸ்-தமஸ் எனும் முக்குணங்களின் செயல்களும் கர்மாவும், அழிவில்லாத ஆத்மாவை தொடக்கூட முடியாது. ஆத்மா இவைகளுக்குக்கெல்லாம் அப்பாற்பட்டது. ஆனால் இவைகளில் அகங்காரம் கொண்டிருப்பவன் (இவைகள்தான் நான் என்று எண்ணிக் கொண்டிருப்பவன்) துயரக்கடலில் சிக்கித் திரிகிறான்.

பகவானிடம் பக்தி செலுத்துவதால் மட்டுமே, மனதின் தோஷமாகிய ரஜோகுணத்தைப் போக்கிக் கொள்ளும் வரை மாயையின் காரியமான குணங்களுடன் சம்பந்தத்தை தவிர்க்க வேண்டும். ஆத்ம ஞானத்தை நன்கு அடையாதவனுக்கு மனதில் ஏற்பட்டுள்ள கர்ம பதிவுகள் அடிக்கடி தலைதூக்கி, அஞ்ஞானம் தலைதூக்கச் செய்து, யோகப்பிரஷ்டனாக்கிவிடும் (ஆத்மவித்தையை அடையாமல் ஒதுக்கி வைக்கப்படுவர்).

ஞானப் பயிற்சி செய்து முன்னேறும் யோகிகளை, உறவினர்கள், நண்பர்கள் பந்த பாசத்தையோ அல்லது கவலையோ ஏற்படுத்தி விடுவார்கள். அதனால் அவர்கள் தன் நிலையில் இருந்து வழுக்கி விழுந்து விடுவார்கள். அப்படிபட்டவர்கள் அடுத்த பிறவியில், முன் பிறப்பில் விட்ட இடத்திலிருந்து ஞான யோகப் பயிற்சியை தொடங்குவார்கள். கர்மாக்களில் பற்று வைக்க மாட்டார்கள்.



ஞான யோகத்தை அடைந்து பண்டிதனாக விளங்குபவன், உலகத்தில் வாழ்ந்து கொண்டே கர்மவினைப்படி செயலாற்றிக் கொண்டிருந்தாலும், மகிழ்ச்சி - வருத்தம் முதலிய மன மாற்றங்களை அடைவதில்லை. ஆத்மாவில் அறிவை நிலைநிறுத்திய ஆத்ம ஞானி, இந்த உடல் செயல்படுகிறது என்பதையே அறிய மாட்டான்.

உடலிலும் உலகிலும் தான் மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஆனால் ஆத்மா எப்போதும் ஒரேவிதமாக மாற்றமின்றி உள்ளது என்ற உண்மையை ஞானி அறிந்து கொள்கிறான்.

பகவானின் சாக்ஷாத்காரம் (உணர்வு) ஏற்பட்டதும், மனிதனின் மனதை மூடியிருந்த அக்ஞானம் விலகி, ஆத்ம சொரூபமாகி விடுகிறான்.

ஆத்மா அது நம்மால் அடையப்பட்ட பொருள்; சுயம்பிரகாசமானது; பிறப்பில்லாதது; அளவிடமுடியாதது; எல்லா அனுபூதிகளும் அதிலே நிகழ்கிறது; எல்லா விபூதிகளையும் (பெருமைகளையும்) தன்னுள் கொண்டது; தனக்குச் சமமான இரண்டாவது வஸ்து (பொருள்) இல்லாத தனிப்பொருள்; மனம் - வாக்குகளுக்கு எட்டாதது; நிர்குணமானது; அருவமானது; வடிவம் அற்றது; குணதோசங்களை கடந்தது.

இரண்டாவதற்ற அகண்ட ஆத்ம தத்துவத்தில், அஞ்ஞானத்தின் காரணமாக வேற்றுமை காண்பது, மனதின் மயக்கமே. சீவன், பிரகிருதியின் தொடர்பால் அகங்காரமடைந்து பேதத்தைக் கற்பிக்கிறது. மன மயக்கத்துக்கும், அக்ஞானத்துகும் (அறியாமை) தனித்துவமான இருப்பு இல்லை. வித்தியாசங்கள் காணப்படுகிறது எனில் அது ஆத்மாவை அதிஷ்டானமாகக் கொண்டுதான் காணப்படுகிறது.

யார் யார் எப்படி பேசுவார்கள் ?

கிரிக்கெட் வீரர் – "ஓவரா" பேசுவார், போட்டோகிராபர் – "டெவலப் பண்ணி" பேசுவார்,
ரவுடி – "அடிச்சுப்" பேசுவார், ஹோட்டல் சர்வர் – "சூப்"பரா பேசுவார், வக்கீல் – "பீஸ்புல்லா" பேசுவார்,
ஃபாஸ்ட் ஃபுட் ஓனர் – "காரசாரமா" பேசுவார், ஐஸ் விக்கிறவர் – "குளிரக் குளிரப்" பேசுவார்,
டெய்லர் – "கட் பண்ணிப்" பேசுவார், பூக்கடைக்காரர் – வார்த்தையை "அளந்து" பேசுவார்,
டயட்டீஷியன் – "உப்பு சப்பில்லாமல்" பேசுவார், பேங்க் மேனேஜர் – "இண்ட்ரஸ்டா" பேசுவார்,
பியூட்டீஷியன் – "அழகாப்" பேசுவார், எலக்ட்ரீசியன் "ஷாக்" அடிச்சமாதிரி பேசுவார்,
கசாப்புக் கடைக்காரர் – "வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு" பேசுவார்,
ஸ்வீட் கடைக்காரர் – "இனிக்க இனிக்கப்" பேசுவார், மீன் வியாபாரி – "நாறடித்து" பேசுவார்
கண்டக்டர் – "நடந்து நடந்து" பேசுவார், டிரைவர் – "நிறுத்தி நிறுத்தி" பேசுவார்.
பால் வியாபாரி – பழம் நழுவி "பாலில்"விழுவதுபோல் பேசுவார், டீ மாஸ்டர் – "சூடா"க பேசுவார்.
கணக்கு வாத்தியார் – "கூட்டி குறைத்து" பேசுவார்.

* * * இதை அத்தனையும் ஒருத்தர் பேசுவார்.... அவர்தான் # அரசியல்வாதி

யோகக் கலை ஓர் அறிமுகம்

யோகா முனுசாமி
யோகா ஆசிரியர்

யோகா என்பது இணைதல் என்ற பொருள் உடையது. அந்த இணைதல் என்பது ஒழுக்கத்தோடு இணைதல் என்ற பொருளைக் குறிக்கும். நாம் நமது மனதைக் கட்டுப்படுத்தி நம் உள்ளே இருக்கின்ற இறை சக்தியை அல்லது இறை தன்மையை அறிய உதவும் பயிற்சி தான் யோக பயிற்சியாகும்.

முறையாக தொடர்ந்து செய்யப்படும் யோகா மூளைக்கு சீரான ரத்த ஓட்டத்தையும், புத்துணர்ச்சியையும் தரக்கூடியது. இதனால் மூளையின் செயல் திறன் அதிகரிக்கின்றது. உடலின் செயல்பாடுகள் சீராகின்றன. இதன் மூலம் ஞாபக சக்தியும் அதிகரிக்கிறது.

தூக்கமின்மை, ஓய்வின்மை, கவனக்குறைவு, குழப்பமான மனநிலை, தேவையற்ற பயம் ஆகியவை மூளையின் செயல்பாட்டிற்கு இடையூறு தரக்கூடியவை.

யோகா இவற்றைப் போக்கி இத்தகைய பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான மனநிலையையும் நல்ல மூளைச் செயல்பாட்டையும் ஞாபக சக்தியையும் தருகின்றது.

உலகளவில் கிட்டத்தட்ட எல்லா வெளிநாடுகளிலும் யோகாவின் நன்மைகள் புரிந்து கொண்டு செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

ஜெர்மனியில் எட்டுப் பேரில் ஒருவர் யோகா பயிற்சி செய்பவராக இருக்கிறார். நார்வே ஸ்வீடன் போன்ற நாடுகளிலும் மக்கள் அதிகமாக யோகா பயிற்சி மேற்கொள்கின்றனர். அங்குள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் உடற்பயிற்சி போல யோகா பயிற்சி அளிக்கப்படுகின்றது.

உலகம் முழுவதும் பரவி இன்று உலக மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ள யோகக் கலையின் பிறப்பிடம் இந்தியா என்பதில் அனைத்து இந்தியர்களும் பெருமைப்படலாம்.

நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ரிஷிகளும், முனிவர்களும் தொடர்ந்து மேற்கொண்ட தவத்தின் பயனாக கிடைத்த பொக்கிஷம் தான் யோகக் கலை. யோகக் கலையின் நோக்கம் மனிதனுக்கு உடல், பிராணசக்தி, மனம், புத்தி, ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படச் செய்து ஆரோக்கியம் நிம்மதி மற்றும் சந்தோஷத்தைக் கொடுப்பதே ஆகும்.

யோகக் கலையின் முக்கியத்துவமே மூச்சுப்பயிற்சியில்தான் அடங்குகின்றது. மூச்சுப்பயிற்சி சீராக சீராக உடலின் இயக்கங்களும் சீராகும். இதனால் உடலின் அனைத்து உறுப்புகளும் வலுப்பெறும்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் நமது மனம் ஆரோக்கியமாக இருக்கும் நமது மனம் ஆரோக்கியமாக இருந்தால் தான் நமது செயல்பாடுகள் ஆரோக்கியமாக இருக்கும், யோகா என்பது நமது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான ஓர் ஒப்பற்ற பயிற்சி முறையாகும் அது நமக்கு மேன்மேலும் பல்வேறு நன்மைகளைத் தரும் விதமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆசனத்தின் உச்சநிலையிலும் குறைந்தது 10-12 முறையாவது மூச்சை உள் வாங்கி வெளியிடுவது அவசியம். உச்சநிலையை அடைந்தவுடன் எத்தனை முறை மூச்சை உள்வாங்கி வெளி விடுகிறோம் என்பது மட்டும்தான் கணக்கு. முன்புறம் குனிந்த நிலையில் உச்ச நிலையில் ஓரிரு எண்ணிக்கைகளை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளலாம்.

யோக சிகிச்சையின் சிறப்பு அம்சங்கள்

யோகா செய்யும் முன் உங்களின் குடும்ப மருத்துவரை சந்தித்து ஆலோசனை கேட்டுக் கொள்ளலாம் மருத்துவம் தெரிந்த யோகாநிபுணர்களை கலந்தாலோசித்து செய்தல் நல்லது. நோய் ஏதும் இல்லாமல் இருக்கும் போதே யோகாசனம் செய்தால் வியாதிகள் வராமல் தடுத்துவிடலாம் நல்ல ஆரோக்கியத்துடனும் வாழலாம் மனமும் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்கும். 30லிருந்து 40 வயதுக்குள் யோகாவை பயின்று செயல்படுத்துவது நல்லது.

யோகா மனித வாழ்வின் ஐந்து "கவச உறைகளை" பற்றி குறிப்பிடுகிறது அவை

1. உடல்,
2. பிராணன் (நாடிகள் வழியே பெருகும் ஜீவசக்தி)
3. மனது, எண்ணங்களும், உணர்ச்சிகளும் உண்டாகுமிடம்
4. ஞானம், அறிவு
5. ஆத்மா, பரமானந்த நிலை

முதல் மூன்று நிலைகள் பாதிக்கப்பட்டால் உடலின் சக்தி உடலெங்கும் சரிவர பரவாது அதன் மூலம் நோய்கள் தோன்றும். நமது துயரங்களுக்கெல்லாம் காரணம் நாம் புலனேந்திரியங்களுக்கு அடிமையாகி நம்மை இழப்பதாகும். கோப, காமக் குரோதங்கள், பணத்தாசை பிடித்து அலைவது போன்ற வேண்டாத உணர்ச்சிகள் நம்மை பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாக்குகிறது.

யோகத்தினால் நாம் நம் உள் உறைந்துள்ள ஆத்மாவை அறிந்து கொண்டால் மன உடல் நோய்கள் யாவும் நீங்கும்.

தமிழுக்கு அமுதென்று பேர்

Lion நெமிலி கு. கிருஷ்ணமூர்த்தி
E-mail : krishnamoorthynemili@gmail.com

உலகில் எத்தனையோ மொழிகள் தோன்றி அவற்றில் பல மொழிகள் வழக்கொழிந்து போய் உள்ளன. காலவெள்ளத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் அழிந்து போன பல்வேறு மொழிகள் பேச்சு வழக்கில் குன்றிப் போய் விட்டன. ஆனால் இன்றுவரை அழியாத மொழியாக, சிதையாத மொழியாக, செம்மொழி அந்தஸ்துடன் வாழும் மொழியாக உயிரோட்டம் குறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மொழி நம் தமிழ் மொழி தான் என்று சொன்னால் மிகையன்று.

உலகின் பழமையான மொழிகளாகிய இலத்தின், எபிரேயம், தமிழ், சீனம், சமஸ்கிருதம், கிரேக்கம் ஆகிய ஆறு மொழிகளில் இன்று இலத்தின், எபிரேயம், கிரேக்கம் வழக்கில் இல்லை. சமஸ்கிருதமும் வழிபாட்டு மொழியாக மட்டுமே உள்ளது. பேச்சு வழக்கில் இல்லை. எஞ்சியிருப்பது தமிழ், சீனம் இரு மொழிகள் மட்டுமே. இந்தப் பழமை வாய்ந்த மொழிகளில் சீனமொழி பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் வாழும் மொழியாக மட்டுமே உள்ளது. அம்மொழியில் போற்றத்தக்க அளவிலான இலக்கணமும் இலக்கியமும் இல்லை. பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி மட்டுமே. வளமான மொழி என்று கூற இயலாது.

ஆனால் அழியாத மொழியாக இலக்கண இலக்கிய வளங்களுடன் செழுமையான ஆளுமைமிக்க மொழியாக விளங்கி வருவது தமிழ் மொழி மட்டுமே.

“உலகவழக்கு அழிந்து, ஒழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.”

என்று அன்னைத் தமிழின் மாறாக் கன்னித் தன்மையை நினைந்து வியந்து போற்றுகிறார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்.

தமிழ் மொழியை செம்மொழியாக அடையாளப்படுத்திய பழமையான தொல்காப்பியம் இலக்கண அமைப்பில் புதுமை படைத்தது என்று சொன்னால் மிகையன்று. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள்என்று மூன்று அதிகாரங்களாகதமிழுக்கு இலக்கணம் வகுத்தார். தொல்காப்பியம் அகத்திணையியலும், நம்பியகப் பொருளும். “அகப்பொருள்” இலக்கணம் கூறும் அருள் தமிழ் களஞ்சியங்கள். தொல்காப்பியம் புறத்திணையியலும் புறப்பொருள் வெண்பா மாலை புறப்பொருள் இலக்கணம் கூறும் பைந்தமிழ் பெட்டகங்கள்.

காதல் வாழ்வுக்கு அகப்பொருளும், வீர வாழ்விற்கு புறப்பொருளும் என வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை இவ்வையகத்தில் எம் தமிழ் மட்டுமே. இது வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பாகும். வேற்று மொழிகளில் காதலும், வீரமும் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் இலக்கண அடிப்படையில் கூறப்பட்டு இருக்காது. இலக்கண அடிப்படையில் வாழ்வியலை ஆழ்ந்து நோக்கிய பெருமைக்குரிய மொழி தமிழ் மொழி மட்டுமே. ஐம்பெரும் காப்பியங்கள், இருபெரும் இதிகாசங்கள், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் எனத் தமிழின் பெருமை மிக்க பல்வேறு படைப்புகள் தமிழ் மொழியின் இலக்கிய வளத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

அழியாதமொழியாகஇளமைகுன்றாத இனிமையான மொழியாக அன்று முதல் இன்று வரை ஒரே நிலையில் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மொழி நம் தமிழ் மொழி மட்டுமே அதனால் தான் இன்றும் தமிழர்தம் இல்லத்தின் மொழியாக இனிமை மிக்க மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது.

ஆம் தம்+இல்+மொழி தமிழ் மொழி (தம்முடைய இல்லத்து மொழி) என்பது பாவாணர் கருத்தாகும்.

“யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்.”

என்று தமிழின் மாண்பினை மாநிலம் அறியப்படுகிறார் பன்மொழிப் புலவர் பாரதியார்.

எழுத்துக்களை “உயிர்” என்றும் “மெய்” என்றும் இரண்டும் இணைந்தால் “உயிர்மெய்” என்றும் வகுத்த சிறப்பு தமிழ் மொழிக்கு மட்டுமே உரியது. வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூவகை இனத்தின் மொத்த உருவே “தமிழ்” என்ற சொல்.

த - வல்லினம்
மி - மெல்லினம்
ழ் - இடையினம்

தமிழ் என்ற சொல் மட்டுமா தமிழ் மொழியில் உள்ள அத்தனை சொற்களுமே முத்துக்கள் தான்.

“சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே
அதைத் தொழுது படித்திடடி பாப்பா”

என்ற பாரதியின் அமுத வாக்கில் தமிழ் சொல்லின் பெருமை அறியலாம் பண்டைத் தமிழர் தாம் பேசும் தமிழ் மொழியை மூவகை தமிழ் என உணர்ந்து முத்தமிழ் எனவும் வழங்கினர். இயல், இசை, நாடகம் எனப் பகுத்து இலக்கியமாக ஏட்டில் இருக்கும்போது “இயற்றமிழ்” எனவும் அதுவே இனிய பாடலாகப் பாடும் போது “இசைத்தமிழ்” எனவும் நாடக நடிகர்களின் நாவலில் வரும் போது “நாடகத்தமிழ்” எனவும் உருவாகிறது.

இத்தனைசிறப்புகளோடுதமிழ்மொழி விளங்குவதால் தான் மதத்தைப் பரப்ப வந்த மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் ஜி.யு.போப், கால்டுவெல் போன்றோர் தமிழின்பால் மாறாக் காதல் கொண்டு தமிழின்பம் வாழ்ந்தனர் என்பது வரலாறு தமிழ் மொழியின் சிறப்பு பெருமை அறிந்ததால் தான் பாதிரியார் தனது கல்லறையின் மீது “தமிழ் மாணவன்” என பெயர் குறிப்பிட வேண்டும் என்று வேண்டிய வண்ணம் இன்றும் அவ்வாறே குறிக்கப் பட்டிருப்பது வரலாற்றுச் சின்னம் வெளி நாட்டில் மட்டுமின்றி வெளி மாநிலத்து அறிஞர் பெருமக்களும் தமிழ் மொழியினை மொழி என்ற நிலையில் உயர்வின் உச்சத்தை அடைந்துள்ள ஒரே மொழி என்று பாராட்டுகின்றார்.

இவ்வாறு வெளிநாட்டினர், வெளிமாநிலத்தவர் போற்றிப் புகழும் செம்மொழியாம் தமிழ் மொழியை இருபத்தோராம் நூற்றாண்டின் சிறப்பு மொழியாக வளர்த்தெடுக்க வேண்டியது நமது பொறுப்பாகும். மெய்ஞானம் நிறைந்த மொழி விஞ்ஞானம் போதிக்கும் நவீன அறிவியல் மொழி என வளர்ந்து இருக்கும் தமிழ் மொழியின் சிறப்புகளை பேணி காத்திட வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



அமிழ்தத்தைக் கடைந்தால் அதிலிருந்து கிடைக்கும் சொல்லே ‘தமிழ்’ என்று போற்றுவார் நாடக கவிஞர் பெருமகனார்.

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்”

தமிழ் விடு தூது ஆசிரியர்.

“தென்னாற்று தமிழமுதின் சுவைகண்டார், இங்கமரர் சிறப்புக் கண்டார்” என தமிழை அமுதமாக சுவைத்தார் பாரதியார்.

“தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்” என்றார் தமிழை அமுதமாகவும், உயிராகவும் மதித்த பாரதிதாசனார். மொழிகளின் இனிய தமிழ் மொழியை என்றும் நினைவில் கொள்வோம் நமது நாடும் உயிரோடு கலந்ததமிழைத் “தமிழ் எங்கள் உயிர்” என்று உணர்வோடு வாழ்வோம், வளர்ப்போம் நம் தாய் மொழியாம் தமிழ் மொழி காப்போம். உயிர் இன்றேல் உடல் இல்லை. தமிழ் இன்றேல் நாம் இல்லை. தமிழ் நம் வழி

போற்றுவோம் தமிழ் அன்னையை !

வெல்க தமிழ் !

ஆத்திசூடி

எழுத்து வர்க்க முறையிலே, ஔவைப் பிராட்டியாரால் அருளிச் செய்யப்பட்டது ஆத்திசூடி என்னும் அற்புதமான நூல்.

ஆத்திசூடிக்கு வழிகாட்டியாக அமைந்தது அப்பர் தேவாரம் எனலாம். அப்பர் பெருமான் அருளிய ஐந்தாம் திருமுறை என்னும் திருக்குறுந்தொகையில், “சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை” என்று ஒரு திருப்பதிகம் அமைந்துள்ளது. இதில் வரும் முப்பது பாடல்களும், அகர வரிசையில் அமைந்தவை ஆகும். இப் பகுதியில் ல,வ,ற என்னும் மூன்று எழுத்துக்களுக்கு உரிய பாடல்கள் நாம் அறியக் கிடைக்கவில்லை. இது போலவே, மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில், இடையில் சில பாடல்கள் இல்லை. அவை பின்னாளில் மறைந்து போய் இருக்கலாம். இத் திருப்பதிகமே, பின்னாளில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற அகர வரிசையில் அமைந்த நீதிநூல்கள் தோன்றக் காரணமாக அமைந்திருக்கலாம்.

பின்னாளில் பாம்பன் அடிகளார் அருளிய “சண்முக கவசம்” என்னும் நூலும் இப்படியே அகர வரிசையில் அமைந்தது.

ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகியவை முன்னாளில் தொடக்கக் கல்வியில் மாணவர்கள், முறையாக ஓதி, மனப்பாடம் செய்து வருவது வழக்கமாக இருந்தது. மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், மனித குலத்திற்கே வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தவை ஔவையார் அருளிய ஆத்திசூடி முதலான நூல்கள்.

புருஷார்த்தங்கள் என்று சொல்லப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைவதே நூலின் பயன் ஆகும் என்பதால், “அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே” என்றது நன்னூல் சூத்திரம். “புருஷர் வடிவானதே அன்றி புருஷார்த்தம் ஏதும் இல்லேன்” என்று தாயுமான அடிகளார் இரங்கி வழிபட்டு உள்ளார்.

ஔவைக் கிழவி, நம் கிழவி,
அமுதின் இனிய சொற்கிழவி,

செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி,

கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி, அவள் உரையை

வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம், மறவோம், மறவோமே.

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போற்றிப் புகழ்ந்துள்ளதில் இருந்து ஆத்திசூடி அருளிய ஔவைப் பிராட்டியின் அருமை விளங்கும்.

கடவுள் வாழ்த்தாக அமைந்த செய்யுள், ஆத்திசூடி என்று தொடங்குவதால், இந்நூலுக்கு, "ஆத்திசூடி" என்று பெயர் எழுந்தது எனலாம்.

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"

என்பது இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல்.

"ஆத்திமலரால் ஆனமாலையைத் திருமுடியில் தரித்துள்ள சிவபெருமானை மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் வணங்கித் தொழுவோம்" என்பது இதன் பொருள்.

ஆத்திசூடி என்னும் இந்த அறநூலானது, அறத்தைக் கேட்பதற்கும், கேட்டவாறு ஒழுகி அறத்தைச் செய்வதற்கும், விருப்பம் கொள்ளுபவர்க்கு இன்றியமையாது வேண்டிய சிறப்பு என்பது, அறத்தைச் செய்வதில் கொள்ளும் விருப்பமே என்பதால், "அறம் செய விரும்பு" என்று தொடங்கியது. நீ அறத்தைச் செய்ய வேண்டுமானால், அதில் அன்பு (விருப்பம்) வைப்பாயாக என்பது இதன் பொருள். "விரும்பு" என்னும் சொல்லுக்கு, "அன்பு வைத்தல்" என்னும் பொருள் எப்படி வந்தது? என்னும் ஐயம் எழலாம். "விருப்பு அறாச் சுற்றம்" என்று திருவள்ளுவ நாயனார் அருளியதற்கு, "அன்பு அறாத சுற்றம்" என்று பரிமேலழகர் பொருள் கண்டார். ஒருவர் மீது மனமார்ந்த விருப்பம் இருந்தால், அன்பு தன்னால் உண்டாகும்.

"அறம் செய விரும்பு" என்று ஏன் முதலிலேயே அறிவுறுத்தினார் ஔவையார் என்றால், அறமே ஒருவனுக்கு ஆக்கத்தைத் தருவது. ஆக்கம் என்பது உலகியல் ஆக்கமும், அருளியல் ஆக்கமாகிய வீடுபேறும். அறத்தைக் காட்டிலும் ஆக்கத்தைத் தருவது வேறு இல்லை என்பதால், "அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை" என்றும், அந்த அறத்தைச் செய்ய மறத்தலைக் காட்டிலும் அழிவைத் தருவதும் வேறு இல்லை என்பதால், "அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு" என்று திருவள்ளுவ நாயனார் அருளி இருப்பது காண்க.

அறம் என்றதுமே தன்னிடத்தில் உள்ள பொருளைப் பிறருக்கு அள்ளிக் கொடுப்பது முதலான காரியங்கள் என்று கொள்ளவேண்டுவது இல்லை. அறச் செயல்கள் பலவாறாக விரியும். ஆனால், அறத்திற்கு இழுக்கைத் தருவன, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய நான்குமே. இழுக்கைத் தரும் இந்த நான்கு தீயவைகளும் உள்ளத்தளவில் இல்லாது நீங்குமானால், அதுவே அறத்தைச் செய்ய விரும்புகின்ற ஒருவனுக்கு இலக்கணமாக அமையும். எனவே, மனத்தில் மாசு இல்லாமல் இருப்பதே உண்மையான அறம் ஆகும்.

அறம் என்பது, மனம் வாக்கு காயங்களால் புரியப்படுகின்ற நல்ல எண்ணமும், நல்ல சொல்லும், நல்ல செயலுமே ஆகும். "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்கின்றது புறநானூற்றுப் பாடல்.

"அச்சமே கீழ்களது ஆசாரம்" என்று திருவள்ளுவ நாயனார் அருளி இருப்பதை எண்ண, அறிவில் தெளிவு இல்லாத கீழ்மக்கள் தெய்வத்தாலும், அரசாலும், உயர்ந்தோராலும், பிறராலும் உண்டாகும் அச்சம் காரணமாகவும், இதைச் செய்தால், அதைப் பெறலாம் என்னும் பொருளாசை காரணமாகவும், வேறு சிலர் புகழ் காரணமாகவும் அறச் செயல்களைப் புரிவதால், அதன் மறுமைப் பயனாகிய வீடுபேற்றை எய்தமாட்டார். எனவே,

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்,
ஆகுல நீர பிற.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

எனத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்துள்ள திருக்குறட்பாக்களை எண்ணுதல் நலம். எனவே, ஔவைப் பிராட்டி, மனத்தளவில் தூயவனாக விளங்கும் உண்மை அறத்தினை விரும்பி ஒருவன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தவே, "அறம் செய விரும்பு" என்றார் என்பதை அறிந்து தெளிதல் நலம். மனத்தில் அழுக்காறு முதலிய குற்றங்கள் தோன்றாமல் காத்துக் கொள்பவனுக்கு, தன்னிடத்தில் உள்ள பொருளைத் தானே துய்க்கவேண்டும் என்னும் ஆசையும் அதன் காரணமாகப் பற்றும், அதன் காரணமாக உலோபத்தனமும் உண்டாகாது. அறச் செயல்களில் செலவிட்டு, தன்னிடத்தில் உள்ளபொருளை, போகின்ற வழிக்குத் துணையான அருளாக மாற்றிக் கொண்டு வாழ்வான். பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்கும் கேடு கெட்ட மனிதனாக வாழமாட்டான்.

தமிழில் இணையதள சொற்கள்

1. QR CODE = விரைவுக்குறி
2. 3D = முத்திரட்சி
3. BLUETOOTH = ஊடலை
4. BROAD BAND = ஆலலை
5. CCTV = மறைக்காணி
6. CHARGER = மின்னூக்கி
7. CYBER = மின்வெளி
8. DIGITAL = எண்மின்
9. GPS = தடங்காட்டி
10. HARD DISK = வன்தட்டு
11. HOTSPOT = பகிரலை
12. INKJET = மைவீச்சு
13. INSTAGRAM = படவரி
14. LASER = சீரொளி
15. LED = ஒளிர்விமுனை
16. MEME = போன்மி
17. MESSANGER = பற்றியம்
18. OCR = எழுத்துணரி
19. OFFLINE = முடக்கலை
20. ONLINE = இயங்கலை
21. PRINT SCREEN = திரைப்பிடிப்பு
22. PRINTER= அச்சுப்பொறி
23. PROJECTOR = ஒளிவீச்சி
24. ROUTER = திசைவி
25. SCANNER = வருடி
26. SELFIE = சுயமி
27. SIMCARD = செறிவட்டை
28. SKYPE = காயலை
29. SMART PHONE = திறன்பேசி
30. TELEGRAM = தொலைவரி
31. THUMBDRIVE = விரலி
32. THUMBNAIL = சிறுபடம்
33. TWITTER = கீச்சகம்
34. WECHAT = அளாவி
35. WHATSAPP = புலனம்
36. WIFI = அருகலை
37. YOUTUBE = வலையொளி
38. GALLERY = களரி
39. GADGET = பொறிகை
40. GAME = ஆட்டம்

64 கலைகள் இருப்பதாக நாம் அறிவோம். அவைகளை விளக்கமாக காண்போம்

1) **எழுத்திலக்கணம்**

மொழியை வரி வடிவம் செய்தல்-

அ, இ, உ, எ, ஒ, ஔ இதுவே உயிரின் வரி வடிவம்.

2) **இயாப்பு இலக்கணம்**

எழுதும் போது காற்புள்ளி,அரைபுள்ளி, கேள்விக் குறி, ஆச்சரிய குறி இட்டு எழுதுவது.

3) **கணிதம்**

கணித்தல் (கூட்டல் ,கழித்தல், பெருக்கல்....)

மொழியை அளத்தல்(மாத்திரை)

1	2	3	4	5	6	7	8	9	10
௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	௰
11	12	13	14	15	16	17	18	19	20
௧௧	௧௨	௧௩	௧௪	௧௫	௧௬	௧௭	௧௮	௧௯	௨௰
21	22	23	24	25	26	27	28	29	30
௨௧	௨௨	௨௩	௨௪	௨௫	௨௬	௨௭	௨௮	௨௯	௩௰
31	32	33	34	35	36	37	38	39	40
௩௧	௩௨	௩௩	௩௪	௩௫	௩௬	௩௭	௩௮	௩௯	௪௰
								49	50
								௪௯	௫௰
								59	60
								௫௯	௬௰
								69	70
								௬௯	௭௰

4) **மறை**

ஐந்து வகை மறைகள். உயிர், மெய், உயிர்மெய், ஆயுதம், பிரணவம்(குருவின் மூலம் அறிதல்)

5) **புராணம்**

புராணம் - வரலாறு. இது பதினெட்டு வகைப்படும். அவைகள்

சைவம்,வைணவம்,பிரம்மம்,பதுமம்,பாகவதம்,நாரதீயம்,மார்கண்டேயம், ஆக்னேயம், பவிடியம், வராகம், கூர்மம், வாவியம் காருடம், வாமணம், இலிங்கம், மச்சம், காந்தம், பிரம்மம் ,வர்த்தம் என்பன.

6) **வியாகரணம்**

மொழி இலக்கணம் (பேசுவது)

7) **சோதிடம்**

சூரியனை மையப்படுத்தி கோள்களை கணித்தல்

8) **நீதி சாத்திரம்**

உண்மையை பேசுவது

9) **இயோக சாத்திரம்**

இறைவனை சிந்திக்க கூறும் வழிபாடுகள்.

10) **தர்ம சாத்திரம்**

சன் மார்க்கம், தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம் என்னும் தர்மங்களை கூறுவது.

11) **மந்திர சாத்திரம்**

ஒலிகளை அறிதலும், அறிவித்தலும்

12) **சிற்ப சாத்திரம்**

உருவங்களை அமைக்க நீள, அகல, உயர, கணம் இவற்றின் அளவுகளை கூறுதல்.

13) **உருவ சாத்திரம்**

ஒர் உருவத்தின் குணங்களை கூறுவது. இவை சாமுத்திரிகா இலட்சணம் என்பர்.

14) **சகுன சாத்திரம்**

நன்மை/தீமைகளை அறிதல்

15) **காவியம்**

சீவனின் எட்டு குணங்களை கூறுவது.

16) **அலங்காரம்**

மொழி, யாப்பு இலக்கணம், உடை, ஆபரணம் இவற்றை அழகு பட கூறுவது.

17) **மதுரம்**

இனிமை(மொழி, கவி, குரல்) இவைப் பற்றிய கலை

18) **நாடகம்**

கூத்தாடுதல் (இசைக்கு ஏற்ப ஆடும் கலை)

19) **சத்தப் பிரமம்**

பல வகையான ஒலிகளை வாத்திய கருவிகளில் ஏற்படுத்தி ஒலிக்க செய்வது. (யாழ், குழல், வீணை)

20) **வீணை**

யாழிசை, நரம்பு கொண்டு இசைப்பது. யாழ்பாணன் (இலங்கேசுவரன்) ஏற்படுத்தியது.

21) **நிருத்தம்**

யாழ் இசைக்கேற்ப நடனம் புரிதல்

22) **தாளம்**

இசைக்கருவிகளின் ஒலி அளவை முறைப்படுத்துதல்.

23) **வேணு**

துளைக் கருவிகளை வாசித்தல் (புல்லாங்குழல், தாரை, நாதசுரம் போன்றவை)

24) **மிருதங்கம்**

மிருகங்களின் தோலில் செய்யும் கருவிகளை வாசித்தல்

25) **இரத பரிட்சை**

தேர் ஓட்டும் கலை. (இக்காலத்தில் வாகனங்களை இயக்கும் கலை)

26) **கச பரிட்சை**

யானையின் குண நலம், அடக்கும் முறை, போருக்கு பயன்படுத்தல் போன்றவற்றை விளக்கும் கலை

27) **கனக பரிட்சை**

உலோகங்களை சோதித்து தரம் நிர்ணயிக்கும் கலை.

28) **அசுவ பரிட்சை**

குதிரைகளின் குணநலம், பயன்பாடுகள் கூறும் கலை

29) **இரத்தின பரிட்சை**

9 இரத்தினங்களின் தரம், குணம், ஒளித் தன்மை முதலியவற்றை கூறும் கலை

30) **அத்திரம் பரிட்சை**

வில் ஏவும் கலை. (இக்காலத்தில் துப்பாக்கி, பீரங்கி இயக்குதல்)

31) **படை இலக்கணம்**

படைகளை (முப்படைகள்) வழி நடத்தும் கலை.

32) **இரச வாதம்**

பாதரசத்தைக் கொண்டு தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகமாக மாற்றும் கலை.

33) **பூமி பரிட்சை**

பூமியில் உள்ள வளங்களை கண்டறியும் கலை.

34) **வசீகரம்**

மற்றவர்களை தன் பால் ஈர்க்கும் கலை.

35) **மோகனம்**

ஒருவரை மற்றவர் மீது மோகம் செய்விக்கும் கலை

36) **ஆக்ருனம்**

தன் குணத்தை மற்றவர் ஏற்று கொள்ள செய்யும் கலை

37) **உச்சாடனம்**

பிறரை ஒரிடத்திலிருந்து விரட்டும் கலை.

38) **மதனம்**

சிற்றின்பம் நுகரும் கலை

39) **மல்யுத்தம்**

ஆயுதம் இல்லாமல் யுத்தம் செய்யும் கலை

40) **வித்துவேதனம்**

மற்றவர்களுக்கு நன்மை/தீமைகள் செய்தல் (நோயும் பரிகாரமும்).

41) **முட்டி**

ஆயுதம் இல்லாமல் தீமைகள் தடுத்துக் கொள்ளும் கலை

42) **நட்டம்**

நடனக்கலையின் தன்மைகளை கூறும் கலை.

43) **காருடம்**

நஞ்சை(விடம்) முறிக்கும் கலை.

44) **கவுத்துவம்**

பிறரை ஊமையாக்கும் கலை.

45) **பைபீலம்**

பறவை, மிருகம், ஊர்வன இவற்றை மயங்க செய்யும் கலை.

46) **காந்தருவம்**

பல வாத்தியக்கருவிகளை சிறப்பாக இயக்கும் கலை.

47) **கமனம்**

அந்தரத்தில் நடக்கும் கலை.

48) **பிரவேசம்**

வேரோர் உடம்பில் புகும் கலை.

49) **ஆகாயப் பிரவேசம்**

ஆகாயத்தில் மறையும் கலை.

50) **அதிரிசயம்**

தானும், மற்ற பொருள்களையும் தோன்றி மறைக்கும் கலை.

பெண்களின் கால் அணிகலன்கள்

0–12 வயது(பேதை) கால் காப்பு
12–24 வயது(பெதும்பை) நூபுரம்–கல்வளை
24–36 வயது (மங்கை) கொலுசு
36–48 வயது (மடந்தை) சிலம்பு
48–60 வயது (அரிவை) தண்டை
60–72 வயது (தெரிவை) காலாழி
72 க்கு மேல் (அவ்வை) கழல் கடகம்

51) **இந்திர சாலம்**

காணாத பொருளை காட்டும் கலை.

52) **மகேந்திர சாலம்**

வானத்தில் அதிசயம் செய்யும் கலை.

53) **அக்கினி தம்பம்**

நெருப்பை வசம் செய்யும் கலை.

54) **சலதம்பம்**

நீரில் நடக்கும் கலை.

55) **வாயு தம்பம்**

காற்றில் மிதக்கும் கலை.

56) **நிட்டி தம்பம்**

கண் மூலம் ஆயுதங்களை வலுவிழக்க செய்யும் கலை.

57) **வாக்கு தம்பம்**

தன் வாக்குக்கு (சொற்களுக்கு) எதிர் வாதம் இல்லாமல் செய்யும் கலை.

58) சுக்கிலத் தம்பம்

விந்துவை நிறுத்தி நீண்ட கலவி செய்யும் கலை.

59) கன்னத்தம்பம்

மறைந்தவைகளை/நடந்து முடிந்த கடந்த கால நிகழ்வை கூறும் கலை.

60) கட்க தம்பம்

கூர் ஆயுதத்தை வலுவிழக்கச் செய்யும் கலை.

61) தாது வாதம்

உலோகங்கள்/ தாதுக்களையும் பயன்படுத்தும் கலை.

62) இதிகாசம்

சிவ ரகசியம்(51) அச்சரத்தை இயக்கும் உன்னத கலை.

63) வைத்தியம் (சித்த வைத்தியம் / ஆயுள் வேதம்)

சித்த வைத்தியம் - சித்தர்கள் கூறியது

ஆயுள் வேதம் - இலங்கேசுவரன் கூறியது

ஔடதங்கள் - உடலைக் காத்து நாதம் விந்து கலைகளை கூட்டி கல்ப தேகம் பெறுவது.

64) சாகாக்கலை

மரணமில்லா பெரு வாழ்வு ஆதி என்னும் சோதியில் இந்த உடலைக் கலக்கச் செய்யும் கலை.

புறநானூற்றில் பாரததேசம்

- மு. பழனிவாசன்
திரைப்பட வசன கர்த்தா - இயக்குநர்
semayyanar@gmail.com

பாரதம் எனப்படும் இந்தியதேசம் இன்று தனது பெருமைகளை முன்னெப்போதையும் விட பன்மடங்கு பாரினில் பரப்பி வருகிறது. ஆயினும், இதற்கான விதையூன்றப்பட்டது சங்கத்தமிழ்காலத்தில் என்பது திண்ணம்.

“சங்க இலக்கியங்கள்” என பகுக்கப்பட்டு, இன்று நம்மிடையே உலா வரும் இலக்கியப் பொக்கிஷங்கள் அனைத்தும் “கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு இடைப் பட்டவையாகக்” கருதப்படுகிறது. ஆயினும் சமீப கால தொல்லியல் ஆய்வுகளின்படி இந்த காலத்தின் தொடக்கம் மேலும் முன்னோக்கிச் செல்கிறது. (இதுகுறித்து மேலும் நிரூபணப்படுத்தும் தகவல்கள் கிடைத்திடக்கூடுமென நம்பகிறோம்).

சரி... இதனை இப்போது கணக்கிடுவது எதற்காக ?

காரணம் இருக்கிறது. வாருங்கள் பயணிப்போம்.

பொதுவாக பாரததேசத்தின் வரலாற்றினை குறிப்பிடும்போது ”ஒருதலைபட்சமான’ வரலாற்று எழுத்தாளர்கள், பன்னெடுங்காலமாக நமது புராண, இதிகாச காவியங்கள் தரும் அளப்பரிய செய்திகளை புறந்தள்ளி விட்டு, அவைகூறும் நிலக்குறிப்புகள், பெயர்கள், அறிவியல் செய்திகள், இலக்கியக் கூறுகள், கலாச்சார, பண்பாட்டியல் மற்றும் மொழிவளம் ஆகிய அனைத்தையும் “கட்டுக்கதைகள்” எனும் பேழையிலே வைத்துப் பூட்டிவிட்டு, அந்நியச் செய்திகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து எழுதி வருகின்றனர். இதன் மூலம் நம்மைப்பற்றிய நமது புராதனச் செய்திகளை நம் தலைமுறையினர் அறிந்துகொள்ள வாய்ப்பே இல்லாமல் செய்து வருகின்றனர்.

இப்படித்தான்பின்வரும்கூற்று ஒன்று, சித்தரிக்கப்படுகிறது. அதாவது, பாரத தேசத்தின் எல்லைகளாக நாம் குறிப்பதை, ''இந்தியா என்பது சுதந்திரத்திற்குப் பின் கட்டாயத்தால் கட்டமைக்கப்பட்ட நாடு. இது ஒருங்கிணைந்து எப்போதும் இருந்ததில்லை. இதன் ஒரு பகுதி மக்களுக்கும் மற்றொரு பகுதி மக்களுக்கும் தொடர்பே இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின்னரே இந்தியா என்பது வடிவமைக்கப்பட்டது'' என்பர். ஆனால், இதில் எள் முனை அளவும் உண்மையில்லை என்பது அறிவார்ந்த பெருமக்களுக்கு நன்கு புரியும்.

நம் பாரததேசம் தொன்று தொட்டு பல்வேறு மொழிகளால், பல்வேறு பேரரசுகளால் பிரிந்திருந்தபோதும், சனாதன தர்மமென்னும் புராதன கலாச்சாரத்தால், வாழ்வியலால், கருத்தாக்கங்களால் ஒன்றுபட்டே இருந்து வந்துள்ளது. தற்போது மாநிலங்கள் என நாம் கொண்டாடுவதைப்போன்றே, அன்றும் பேரரசுகள், சிற்றரரசுகள் என கொண்டாடப்பட்டுள்ளது. பெண்கொடுத்து, பென்ணெடுக்கும் வழக்கமும் இருந்துவந்துள்ளது. இதன் மூலம் ஆங்காங்கே சமாதனம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

மகாபாரதப்போருக்கும் முன்னர் அர்ஜுனனுக்கு மதுரையிலிருந்து பெண்கொடுக்கப்பட்டுள்ளார். மதுரை பாண்டியப்பேரரசின் சார்பில் மகாபாரதப் போருக்கு அர்ஜுனனுக்கு ஆதரவாக படை அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்புகளைக் காண்கிறோம். மேலும் தெற்கே சாளுக்கிய, கலிங்க, பல்லவ, சேர, சோழ, பாண்டியர் வம்சங்களிலும் இத்தகைய நிகழ்வுகள் தென்படுகின்றன. இவையெல்லாம் ஒரே கலாச்சாரமான சனாதன தர்மமென்னும் அடிப்படையிலேயும், அதன் தர்மநெறிகளுக்கு உட்பட்டே நிகழ்ந்துள்ளன.

இன்றைய பாரதத்தின் வடக்கெல்லையில் விளங்கும் இமயத்தில், ''கயிலை'' எனப்படும் "கைலாச மலை" உள்ளது. இந்த இமயத்தைக் குறிக்கும் பல்வேறு செய்திகள் தமிழ் இலக்கியங்களில் பல்கிப் பரவியுள்ளன. இமயத்தில் கால்பதிப்பது, இமயத்தினை வெல்வது, இமயத்திலிருந்து மண், கல் எடுத்து வருதல் ஆகிய அனைத்தும் பெருமைப்படத்தக்க அம்சங்களாக கருதப்பட்டு வந்துள்ளது. அது இன்றும் தொடர்கிறது.

தமிழ் சைவசித்தாந்த இலக்கியங்களில், முழுமுதற்கடவுளான "சிவபெருமான்" குடிகொண்டிருக்கும் கயிலை மலையினையே முக்கியத்துவம் தந்து போற்றுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் "கயிலையைப் பாடாதோர்" என எவருமிலர். அவர்களில் காரைக்கால் அம்மையார் குறிப்பிடத் தகுந்தவர். இவர் கயிலையில் காலதனைப் பதிக்காமல் தலைகீழாய் செல்ல எத்தனித்தபோது, இறைவனால் "அம்மையே" என விளிக்கப்பட்டவர்.

சற்று எண்ணிப்பாருங்கள். இன்றைக்கும் சவாலாக இருக்கும் இமயத்தின் சூழ்நிலை, பன்னெடுங்காலத்திற்கும் முன்னர் எப்படியெல்லாம் இருந்திருக்கும் என எண்ணிப்பாருங்கள். அத்தகையப் பகுதிக்கு, சர்வசாதாரணமாக எங்ஙனம் சென்றிருப்பர்? எப்படி படைகளை வழிநடத்தியிருப்பர்? ஆனால், அவர்களுக்கு எல்லாம் சாத்தியப்பட்டிருக்கிறது. அதனால்தான் நமது இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகள் கூட இமயத்தினை மிகவும் போற்றுதலோடு, வருணிக்கின்றன.

அவ்வகையில், பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி குறித்து காரிகிழார் என்னும் புலவர் வாழ்த்தியலாகப் பாடிய, புறநானூற்றுப் பாடலொன்று (பாடல் 06) அரிய செய்தினை வழங்குகிறது. அதில்,

வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,

குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,

கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்

நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது

ஆனிலை உலகத் தானும், ஆனாது,

உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்

தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்

பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க!

…………………………………………………

எனத்தொடர்கிறது அப்பாடல். .

அதாவது பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் புகழ் எப்படியெல்லாம் பரவ வேண்டுமென புலவர் ஆசைப்படுகிறார் தெரியுமா?

"வடக்கே உள்ள இமயமலையைத் தாண்டியும், தெற்கே குமரிமுனை தாண்டியும், கிழக்கில் தோண்டப்பட்டுள்ள கடலைத் தாண்டியும்,, மேற்கே பழமையான கடலைத்தாண்டியும்'' (தாண்டியும்: ''அதற்கு அப்பால்'' என பொருள் கொள்க.)

மிகப்பழமையான புறநானூற்றுப்பாடலில், இன்றைய பாரதத்தின் தற்போதைய எல்லைகள் தெளிவாக குறிப்பிடப்படுவது எங்ஙனம்?

இது குறித்து தமிழ்தேசியம் பேசும் ஒருவரிடம் பேசியபோது, "ம்...அது... வந்து.... இந்தியா முழுக்க ஒருகாலத்தில் தமிழர்கள் மட்டுமே இருந்தார்கள். பிறரின் படையெடுப்புகளால், நாம் தெற்கே விரட்டப்பட்டோம்" என விவரிக்கத் தொடங்கினார். அப்படியெனில் "கால்டுவெல்" கூற்றான "திராவிட மொழிக்குடும்பம்" என்பதன்படி, தமிழல்லாத பிற மொழிகள் தமிழிலிருந்து திரிபு ஆனவை என்கிறீர்கள். அப்படியெனில் "திராவிடக்கூற்று பொய்தானே?" என வினவியபோது, அவரிடம் பதிலில்லை.

இதேபோல்தான், பாரத தேசத்தின் எல்லைகளை புலவர் காரிகிழார் குறிப்பிடுகையில், மிகச்சரியாகதற்போதைய எல்லைகளைத்தானேகூறியுள்ளார். எங்கேயும், அவர் திராவிடம் என்று குறிக்கவில்லை. ஒரு இடத்திலேனும் அந்நிய தேச எல்லைகள் என குறிக்கவில்லை.

தற்கால விஞ்ஞான வசதிகளை எட்டாமலிருந்த போதே, பண்பாட்டால், கலாச்சாரத்தால், உவமான, உவமேயங்ககளால், உருவகப்படுத்தும் செய்திகளால், வணங்கிய கடவுளர்களால், வழிபாட்டு முறைகளால், வெற்றி-தோல்விகளால், உறவு முறைகளால், தர்மநெறி கோட்பாடுகளால் பாரதம் என்பது ஒன்றுபட்டே இருந்திருக்கிறது. இங்கே போர்கள் இருந்திருக்கலாம். ஆனால், ஒரு பரந்துபட்ட நிலப்பரப்பில் நாமும் ஒரு அங்கம் என்னும் ஆத்மார்த்தமான சிந்தனை இங்கே உயிர்ப்புடன் இருந்திருக்கிறது. அதன் உச்சத்தில் சென்று பாடியக் கருத்துதான் புலவர் காரிகிழாரின் கருத்து.

தமிழ்கூறும் நல்லுலகம் மென்மேலும் இலக்கிய, புராண, இதிகாச செய்திகளை வெறும் மொழிவளமையை ஆய்வுசெய்வதற்காகவோ பக்திமார்க்கத்திற்காகவோ மட்டுமின்றி, புதிய சிந்தனை, புதிய முயற்சிகள் அடிப்படையில் யுகங்களைக் கடந்தும் "பாரதம்" சிறந்த தேசம், எப்போதும் ஒன்றாகவே "ஒரே தேசம்" என்றே விளங்கி வருகிறது என்பதை மேன்மேலும் நிறுவ வேண்டும்.

இதற்கு வழியமைத்து தந்திருக்கும் புறநானூற்று தமிழ்ப்புலவர் "காரிகிழார்" என்னும் ஞானக்கிழவனுக்கு நன்றி கூறுகிறேன்.

வாழிய செந்தமிழ் ! வாழிய பாரதம் !



OUR 3RD CONFERENCE INVITATIONS

OUR 3RD CONFERENCE BANNERS

Tamil Fliers 1 to 4 pages

அகண்ட தமிழ் உலகம்

மூன்றாவது மாநாடு
(இணையதள வழி)

மார்ச் 26,27-28, 2021

ஒருங்கிணைப்பு

CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES

Web: www.tamilulagam.org | **E**: info@tamilulagam.org

பேரன்புடையீர்,

உலகளாவிய பார்வைக்கான சென்னை மையம் (Chennai Centre for Global Studies) அகண்ட தமிழ் உலகின் மூன்றாவது மாநாட்டிற்கு தங்களை அழைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறது.

தமிழர்கள் உலகளாவிப் பரவி இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மியான்மர், ஃபிஜி, தென் ஆப்ரிக்கா, செய்செல்ஸ், ரீ-யூனியன் தீவுகள், டிரினிடாட், டொபாகோ, கயானா, சூரினாம், வளைகுடா நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கிறார்கள்.

இவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக குடிபெயர்ந்தார்கள். அவர்களில் பலர் அந்தந்த நாடுகளின் கலாச்சாரம் வாழ்வியல் சார்ந்து நிரந்தர அங்கத்தினராக வாழ்ந்து வருகின்றனர். அதேசமயம் நமது வேர்களை மறக்காமல் தாங்கள் வசிக்கும் இடத்தில் சூழ்நிலைகளை சமாளித்து தாங்கள் தாய்மொழியையும்

எனினும் இன்றைய தலைமுறையினர் பல்வேறு சமுதாய கலாச்சார அழுத்தத்திற்கு உட்பட்டு வேர்களை மறந்து தங்களது தமிழ் அடையாளத்தை இழந்து வருகிறார்கள். அவர்களிடையே நம் பெருமைமிகு தமிழ் கலாச்சாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மேற்கண்ட பணியை முன்னெடுக்கும் முகமாக உலகளவில் பரந்துபட்ட தமிழர்களை ஒன்று கூட்டி அவர்கள் உணரும் விதமாக நமது மொழி கலாச்சாரம் மரபைக் குறித்து பேசியும் அவர்கள் சந்திக்கும் சவால்கள் சூழ்நிலைகள் வாய்ப்புகள் அவற்றை பயன் கொள்ளும் வழிவகைகள் குறித்தும் ஆராய்ந்து வரும் சந்ததியினருக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க CCGS முயல்கிறது.

குறிக்கோள்கள்

✓ புலம்பெயர்ந்த, வேர்களை மறந்த தமிழர்கள் தாங்கள் இழந்த மொழி சமயம் கலாச்சார மரபுகளின் அருமை பெருமைகளை உணரச் செய்ய வேண்டும்.

✓ பாரம்பரியம் மிக்க தமிழ் மொழி, சாத்வீகம் நிறைந்த நம் இந்து சமயம் நமது பண்பாட்டின் அடிப்படை அவற்றைப் கற்பித்து இளம்தலைமுறையினரை நல்வழிப்படுத்தி வீட்டிலும் சமூகத்திலும் அந்தப் பண்பாடு பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்.

✓ மதம் மாற்றங்களுக்கான காரணங்களையும் தமிழர்கள் தாங்கள் சமூகத்திற்கு உள்ளிருந்தும் & வெளியிலிருந்தும் தற்சமயத்தில் சந்திக்கும் பிரச்சனைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்காலத்தில் வரக்கூடுமான சவால்களையும் இனங்காண வேண்டும் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை கண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அணுகுமுறை

✓ அந்தந்த நாட்டில் உள்ள நம் இனத் தலைவர்களையும், அறிஞர்களையும் ஒன்று கூட்டி கலந்துரையாடி சவால்களை அறிந்துகொள்ளுதல்.

✓ அரசு துறைகளிலிருந்தும் அரசு சாரா இந்து அமைப்புகளிலிருந்தும் தலைவர்களையும் பல நாடுகளிலிருந்து வரும் இந்து தலைவர்களை சந்திக்க வைத்து பல்வேறு விஷயங்களை பற்றியும் கருத்து பரிமாறி விவாதித்து தீர்வு எட்டச்செய்தல். உதாரணமாக தமிழர்கள் மிகுந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி தமிழ் வளர்ச்சிக்கு உதவுதல்.

✓ தமிழ் இந்துக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், வாய்ப்புகள் குறித்த கலந்துரையாடலை ஆவணப் படுத்தி வெளியிடல்.

குறிப்பிட்ட சில நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் பலதுறைகளிலும் பெற்ற வெற்றிகள் நம்மை பெருமை கொள்ள வைத்தாலும் இச்சமுதாயத்தின் சில கூறுகள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பது வேதனைக்குரியது. அவர்களோடு உடன் நின்று அவர்கள் முன்னேற்றத்திற்கு ஆவன செய்யவும் திட்டமிடுதல் இன்றியமையாதது. இந்த ஒருங்கிணைப்பை அதற்கான களத்தை அமைத்துக் கொடுக்க CCGS முன்வருகிறது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தாங்களும் தங்களின் பங்களிப்பை செய்ய உளமாற வரவேற்கிறோம்.

கடந்த நிகழ்வுகளின் காட்சிகள்

Registration

www.tamilulagam.org
info@tamilulagam.org

English Fliers 1 to 4 pages

Akhanda Tamil Ulagam

3rd

Conference
(Virtual Meet)

March, 26, 27-28th, 2021

organised by

Web: www.tamilulagam.org | **E**: info@tamilulagam.org

We at Chennai Centre for Global Studies take great pleasure in inviting you for the **third conference** of Akhanda Tamil Ulagam

Tamil people are spread across the globe. They constitute significant population of the Tamil hindu in **Malaysia, Myanmar, Srilanka, Singapore, South Africa, Seychelles, Re-Union islands, Fiji, Trinidad, Tobago, Guyana, Suriname, Gulf Countries, Australia, New Zealand, USA, Canada, UK** and **European countries.**

The Tamils left the home at different times due to several pull and push factors. Though they were "birds of passage" in the beginning, they gradually took roots in the host countries and had become a permanent feature of the demographic profile of those countries. They try to retain Tamil traditions, while, at the same time, adapt to new surroundings.

Whatever may be the number of Tamil populations and situations prevailing in those countries where they migrated, the Diaspora elders won over the challenges, provided their best leadership to preserve our language and culture. Recently there are many forces that influence the new generation and distract it from our culture which resulted in few countries' Tamil Diaspora losing their identity by forgetting their roots. There arises a dire need to inculcate the pride of our tradition and language among the young generation.

Chennai Centre for Global Studies (CCGS) has taken the initiative to bring the entire Tamil Hindu Diaspora spread across the world to have a dialogue for practicing our culture, tradition, and values. This will provide an opportunity to share their wisdom, knowledge, and leadership in dealing with the issues faced by the Tamil Hindu community.

Objective of the conference

- Provide an interactive platform for Tamil speaking Hindus across the globe to share cherish, preserve, and practice Tamil Culture and Tradition
- Transform this rich culture and knowledge to our next generation both in home and in community.
- Identify and understand the current and potential challenges which are faced by the Tamil Hindus Diaspora from within the community and from outside.
- Tamil language forms the bedrock for Tamil culture and tradition. As such teaching the spoken and written Tamil among the Diaspora is an imperative for preservation of culture. This platform will serve as a center to integrate and reflect our proud culture and values so that the Tamil Hindus Diaspora across the globe will imbibe the richness of our culture

Approach and methodology

- Obtain the guidance of the experts and academicians on various issues
- Set-up a periodical meeting between the leaders from the government, Hindu NGO's and Tamil Hindu leaders from abroad to have meaningful dialogue for various issues e.g., setting up of Tamil chairs in Universities of countries where large Tamil populations live.
- Panel discussions on various challenges faced by the Tamil Diaspora.
- Strategy to arrive post conference activities

We can be proud of the rise of the Tamil Diaspora in certain countries in all walks of life like trade & business, science & technology, culture and film industry, agriculture & medicine, etc. However, there is some part of the Diaspora that languishes in underdevelopment, poverty & illiteracy. **AKHTU** will like the Diaspora to take note of them, does hand-holding with them and help build their lives in an self-reliant way.

Glimpses of Past Events

Registration

www.tamilulagam.org
info@tamilulagam.org

OUR 3RD CONFERENCE POSTERS

OUR 3RD CONFERENCE POSTERS

மூன்றாவது அகண்ட தமிழ் உலக மாநாட்டின்
தீர்மானங்கள்

தீர்மானம் 1 : தமிழர்கள் அன்றாட வாழ்வில், தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரிகம் ஆகியவற்றோடு, ஒத்திசைவாக வாழ்வை அமைத்து கொள்ள, உலக அளவில் பல்வேறு நாடுகளில் இயங்கி வரும், தமிழர் அமைப்புகள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 2 : இறைவனே தலைவனாய் அமர்ந்து, தமிழ் சங்கம் நடத்திய பெருமை உடையது தமிழ்மொழி. இறையுடன் இரண்டற கலந்த, தமிழ்மொழியின் இலக்கிய படைப்புகள். இளந்தளிராம், வளரும் தலைமுறைக்கு சென்றடைய ஆவன செய்தல் வேண்டும்.

தீர்மானம் 3 : தமிழரின் விஞ்ஞானத்தை பறைசாற்றும் வகையில், கட்டிடக்கலையை நம் கோவில்கள் எடுத்துக்காட்டுகின்றன. சித்தமருத்துவம், தமிழரின் மருத்துவ சாதனைகளை எடுத்து இயம்புகிறது. விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும், முழுமையாக தன்னுள் கொண்டுள்ள தமிழ்மொழியில் உள்ள கருத்துகளை உலகின் ஏனைய நாகரீகங்களுக்கு, தமிழர்கள் கொண்டு செல்ல வேண்டும்.

தீர்மானம் 4 : ஆயக்கலைகள் 64யும் இளைய தலைமுறைக்கு எடுத்து செல்வதற்கான முன்முயற்சிகளை முழுமையாக செயல்படுத்த வேண்டுமென்று, தமிழர் நலன் விரும்பும் இயக்கங்களுக்கு அகண்ட தமிழுலகம் வேண்டுகோள் விடுக்கிறது.

CHENNAI CENTRE FOR GLOBAL STUDIES

Chennai Centre For Global Studies

Registered Trust (No-352/2016/BK4)

Akhanda Tamil Ulagam 3rd Conference's
RESOLUTIONS

Resolution 1 : To facilitate Tamil people to organize their life according to the Tamil customs and traditions, it is requested from various Tamil organizations functioning across the World their help and support.

Resolution 2 : Tamil language has the unique characteristic of the God himself presiding over the Tamil Sangam. Various steps must be taken to present the various spiritual Tamil literary texts to the budding younger generation.

Resolution 3 : Our temples exhibit the marvelous architectural genius of Tamil people. Siddha school of medicine exemplifies the achievements of Tamil people in the field of medicine. All the other civilizations or parts of the World must be made aware of these stupendous facts in the Tamil language which encompasses both science and spirituality.

Resolution 4 : The Tamil fraternity requests the various Tamil organizations that 'Aaya Kalaigal 64' or Coordinating Arts must reach the present day younger generation.

136, 7th Floor, West Wing, ShyamalaTowers,ArcotRoad,Virugambakkam, Chennai – 600092.

72004 30845; 72004 88351 info@chennaicgs.org www.chennaicgs.org

EVENT SCHEDULE OF AKHANDA TAMIL ULAGAM – 3RD VIRTUAL CONFERENCE

Zone 1 : Australia & Asia - 27 & 28 March 2021 - Time 10.30 pm to 1.30 pm IST

EVENT SCHEDULE IN INDIAN TIME

From	To	Program / Topic	Speaker - Country
		27 March 2021 - Zone 1	
10:30	11:05	**Inaugural Session**	
10:30	10:32	Lighting of Lamp	Thirumathi Sintamani, Indonesia
10:32	10:33	Prayer	Thirumathi Sangita Rajahmuni - Malaysia
10:33	10:36	Welcome Address	Thiru Swami Ramaji - Malaysia
10:37	10:39	Introducing the Dignitaries	Thiru Raju Kuppan - Malaysia
10:39	10:44	Benediction	Balayogi Swamigal - Malaysia
10:44	10:49	WORDS OF WISDOM	HIS HOLINESS SRI SRI RAVISHANKAR
10:49	11:05	Inaugural Address	Thiru Krishna Jagannathan
11:05	12:10	**Lectures on Tamil Diaspora's Historic & Traditional Contribution**	
11:05	11:08	Guest Introduction and overview	Thiru Ramthas - Singapore
11:13	11:23	Sri Lanka	Thiru V.Santhakumar
11:23	11:33	Malaysia (2 speakers)	Thiru Suba Narayanan, Thiru Ramesh Kumar
11:33	11:38	Singapore	Thiru Arunachalam
11:38	11:45	Mynmar	Thiru S.Murugan
11:45	11:50	Australia, New Zealand	THIRU Venkat Jagan (Aust) Thiru Sit Sabesan (NZ)
11:50	11:55	Hong Kong (2 speakers)	Thiru Thirupathi /Tmt Jayashri Suresh
11:55	12:15	Indonesia, Thailand & Conclusion	Thiru Ravi Kumar
12:15	13:30	**Nurturing Future Generation on Tamil Language & Culture**	
12:15	12:20	Intro of Guest	Anchor Sutha M
12:20	12:25	Brief Talk Selvi. Kanmani Sabapathi Singapore	Selvi. Kanmani Sabapathi
12:25	12:30	Salutation to Dr Maravanpulavu K.Sachithananthan, Srilanka	Anchor Sutha M
12:30	12:50	Science behind our Tradition & Culture	Dr. DK Hari
12:50	13:10	Need of our Culture in today's contemporary world	Prof Dr Kunichivendan
13:10	13:30	Nurturing next generation & Family Values	Thiru RBVS Manian
		28 March 2021 - Zone 1	
10:30	12:00	**Challenges faced by Tamil diaspora and wayout**	
10:30	10:31	Prayer	Tmt.Sangita
10:31	10:36	Benediction	**Perur Aadheenam Srila Sri Marudhachala Adigalar**
10:41	10:48	Guest Intro and Topic overview	Thiru Vesuanathan
10:48	10:55	Speaker 1 Sri Lanka	Thiru A.Ravendran
10:55	11:02	Speaker 2 Malaysia	Thiru Gunasekaran, Thiru. A.Gunanathan
11:02	11:09	Speaker 3 Singapore	Thirumathi Sumathi Durai
11:09	11:16	Speaker 4 Australia	Thiru Abirami
11:16	11:23	Speaker 5 Myanmar	Thiru V.Sekhar
11:23	11:30	Speaker 6 Malaysia	Dr.Balatharmalingam
11:30	11:37	Speaker 7 Hong Kong	Thiru Srinivasan Prasad Thiru Ram (Venkaraman KS)
11:42	12:00	Final Summary	Thiru Srilanka Jayaraj
12:10	12:55	**Discussions on Post Conference Action Items**	
12:10	12:14	Guest Intro	Thiru R.Parthiban (Mal)

From	To	Program / Topic	Speaker - Country
12:14	12:18	Sri Lanka	Thiru M.Nadesananthan
12:18	12:22	Malaysia	Thiru Raju Kuppan
12:22	12:26	Singapore	Thiru Ramachandran
12:26	12:30	Indonesia	Thirumathi Sintamani
12:30	12:34	Myanmar	Thiru Mu Ka Muniandy
12:34	12:38	Australia	Thiru Shanmugapriyan Rajaram
12:38	12:42	Hong Kong	Thiru Thirupathi
12:42	12:46	Philippines	Thiru Nalakumar
12:46	12:49	New Zealand	Dr.Magesh Babu Puroshotraman
12:49	12:55	Final Summary Overview	Thiru Sadagopan
12:55	13:30	**Valedictory Function**	
12:55	12:58	Malar Release	Thiru CR Rajendran
13:03	13:08	Conference Summery	Thiru Ramathas
13:08	13:11	Resolution Declaration	Sri Krishna Kumar
13:11	13:31	Valedictory Address	Dr. R Vannia Rajan
13:31	13:33	Vote of Thanks	Thiru Veusuanathan
13:33	13:35	Shanti Mantra	Tmt. Sangita

Zone 2 : Middle East Countries - 26 March 2021 - Time 11.00 to 2.00 pm & 4.00 to 7.00 pm

EVENT SCHEDULE IN INDIAN TIME

From	To	Topic	Speaker
11:00	11:40	**Inaugural Session**	
		Lighting of Lamp	Hon Tmt Dr. Tamilisai Soundarrajan, Tmt Geetha Rajasekar Dr Mala,
		Prayer	Tmt Geetha Rajasekar Tmt. Jayashree Chandramouli
		National Anthem	
		Welcome Address	Sri Sadagopan
		Introducing of Sri Dr. R Seetharaman	MC Tmt Saranya
		Guest Speech	Dr. R Seethraman
		Introduction of Sri S Lakshmanan	MC Tmt Saranya
		Guest Speech	Thiru S Lakshmanan
		Introduction of Hon Governor	MC Tmt Saranya
		Address by Speaker	Hon Tmt Dr. Tamilisai Soundarrajan
		Thanks to Governor	MC Tmt Saranya
		National Anthem	
11:40	11:55	**Benediction by HH Jagatguru Sankaracharya**	
		HH Jagatguru Kanchi Sankarachariya swamigal	HH Jagatguru Kanchi Sankarachariya swamigal
11:55	12:40	**Session on Family & Family Deity**	
		Country Reporting 1 -Bahrain	Tmt Vidya Satyan
		Introduction of speaker	MC Tmt Saranya
		குடும்பமும் குலதெய்வமும்	Thiru Krishna Jagannathan
12:40	13:10	**Session on Heritage & Significance of Tamils**	
		Country reporting 2 - Qatar	Thiru Nagaraj
		Introduction of speaker	MC Tmt Saranya
		தமிழரின் தொன்மையும், சிறப்பும்	Thiru V Shanmuganathan
13:10	14:15	**Session on Tamil & Missing Vision of Tamil People**	
		Country reporting 3 - UAE	Tmt Sudha Radha
		Discussion & Summary	
		Topic and speaker introduction	MC Tmt Saranya

From	To	Topic	Speaker
		Speaker 1	Thiru Ramachandran
		Speaker 2	Tmt Swarna Sabarikumar
		Speaker 3	Thiru Vijay Anand
		Speaker 4	Thiru Karthikeyan
		Speaker 5	Tmt Rajarajeshwari
		Speaker 6	Thiru Sadagopan
		தமிழும் தொலைந்த நம் தொலைநோக்குப் பார்வையும்	Prof Dr Vanangamudi
16:00	16:05	**Benediction**	
16:05	16:45	**Session on Daily Life in Spiritual Way**	
		Country reporting 4 - Oman	Tmt Meena Manikantan
		Country reporting 5 - Kuwait	Thiru Kapilan
		Speaker Introduction	MC Tmt Saranya
		அன்றாட வாழ்க்கையில் ஆன்மீகம்	Pujya Thiru Swami Omkarananda
16:45	17:10		
		Country reporting 6 - Saudi	Thiru Venkatesh
		Speaker introduction	MC Tmt Saranya
		இலக்கியமும் வாழ்வியலும்	Thiru Kalyasundaram
17:10	18:00	**Session on Post Conference Action Plan**	
		Topic and Speaker introcution	MC Tmt Saranya
		Speaker 1	Thiru Manikantan
		Speaker 2	Thiru Sai Murugan
		Speaker 3	Thiru Ram Prasath
		Speaker 4	Selvi. Sarayu Raghavan
		Speaker 5	Thiru Sivaprasath
		Speaker 6	Thiru Sampath Kumar
		Post Conference Action Plan	Thiru Ambalavanan
18:00	18:20	**Session on Gulf Kids & Ever Young Tamil Language**	
		Topic and Speaker introcution	Thiru Shyam Sundar
		வளைகுடா குழந்தைகளும் வளர்தமிழும்	Tmt Bharati Bhaskar
18:20	19:15	**Valedictory Function**	
		Guests Introduction	MC Tmt Saranya
		Souvenir release	Thiru CR Rajendran
		Resolution presentation and its adaption	Thiru Venkatesh
		Summary of the conference	Thiru Sundara Kaleeshwaran
		Vote of Thanks	Thiru Marimuthu
		Veledictory Address	Thiru Ila. Ganesan
		Shanti Mantra	MC Tmt Saranya

Zone 3 : Africa & Europe - 27 & 28 March 2021 - Time 3.30 pm to 6.30 pm IST

EVENT SCHEDULE IN INDIAN TIME

From	To	Program	Topic	Speaker	Country
			27 March 2021 - Zone 3		
15:30	16:00	**Inaugural Session**			
15:30	15:33	Lighting of Lamp		CCGS Conference Base	India
15:33	15:36	Prayer		Shanjivkkumar Ramasamy	Zambia
15:36	15.41	Welcome Address	Welcome Address	Thiru Taniga ji	France
15.41	15:46	Benediction	Sri Sri Ravishankar Guruji	Sri Sri Ravishankar Guruji	India
15:46	15:49	Introducing the Dignitaries	Introducing the Dignitaries	Thiru Chelliah	UK
15:49	15:54	President Address		Thiru S Rajendran	India
15:54	16:00	Inaugural Address	Mauritius Ex President	Thiru Paramasivum Pillay Vyapoory	Mauritius
16:05	16:30	**Session on Significance of Tamil Language for Youths**			
16:05	16:08	Country Reporting UK		Thiru Mahalingam	UK
16:08	16:10	Introduction of speaker		Latha	UK
16:10		Session 1	Significance of Tamil Language for Youths	Thiru Krishna Jagannathan	India
			Summary in English	Pravin	
16:35	17:05	**Session on Significance of Tamil Heritage for Youths**			
16:35	16:38	Country reporting Sweden		Thiru Vijay	Sweden
16:38	16:40	Introduction of speaker		Latha	UK
16:40		Session 2	Significance of Tamil Heritage for Youths	Thiru Ravikumar	India
			Summary in English	Pravin	
17:15	17:40	**Session on Family Diety**			
17:15	17:18	Country reporting Uganda		Thiru Suresh Babu	Uganda
17:18	17:20	Introduction of speaker		Tmt Menaga	Zambia
17:20		Session 3	குடும்பமும் குலதெய்வமும்	Thiru Dr Andal P Chokkalingam	India
			Summary in English	Pravin	
17:45	18:10	**Session on Tamil Traditional Arts**			
17:45	17:47	Introduction of speaker		Tmt Menaga	Zambia
17:47		Session 4	Tamil Arts, Fine Arts & Martial Art	Thiru Dr. Kurinjivendhan	India
			Summary in English	Pravin	
18:15	18:35	**Session on Tamil Traditional Medicine**			
18:15	18:18	Country reporting Finland		Thiru Sri	Finland
18:18	18:20	Speaker introduction		Tmt Menaga	Zambia
18:20		Session 5	சித்த மருத்துவம்	Thiru Dr Ramasamy	India
			Summary in English	Pravin	
			28 March 2021 - Zone 3		
15:30	15:50	**Session on Challenges for Tamil Youth**			
15:30	15:32	Speaker introduction		Sree	UK
15:32	16:10	Session 6	Challenges Semitic Religions & Conversion & Counter Narratives to Separate Tamils from Sanatana Dharma	Thiru RBVS Manian	India
			Summary in English	Pravin	
16:10	16:25	Q&A		Sree	UK
16:25	16:35	Tamils in Mauritius		Prof Arasan, Prof Deywarajan	Mauritius
16:45	17:35	**Session on Post Conference Action Plan**			
16:45	16:48	Topic and Speaker introcution		Anjana	UK
16:48	16:53	Speaker 1 UK		Thiru Dr Sudarshan	UK
16:53	16:58	Speaker 2 France		Tmt Dr Rajeswari	France
16:58	17:03	Speaker 3 Northen Europe		Thiru Sri	Finland
17:03	17:13	Speaker 4 Mauritius		Thiru Menon	Mauritius
17:13	17:18	Speaker 5 East Africa		Thiru Sridhar	Kenya
17:18	17:23	Speaker 6 Reunion		Thiru Shanmugam	Reunion
17:23		Conclusion & Summary session 7	Post Conference Action Plan	Thiru Dhandapani	India
17:35	18:40	**Valedictory Function**			
17:35	17:37	Guests Introduction		Rama	UK
17:37	17:40	Souvenir release		Thiru C R Rajendran	India
17:40	17:45	Presidential Address		Thiru Dr Varadarajan	UK
17:45	17:50	Special Guest Address		Thiru Dr Basumani	UK / India
17:50	17:53	Resolution presentation and its adaption		Thiru Krishna Kumar	India
17:53	17:55	Vote of Thanks		Sathish	UK
17:55	18:25	Concluding session	Valedictory Address	Thiru Dattareya Hosabale	India
18:25	18:26	Shanti Mantra		Mahalingam	UK

Zone 4 : US & CANADA - 27 March 2021

EVENTS SCHEDULE IN US TIME

From	To	Program / Topic	Speakers / Participants	MC
09:00	9.02	Lighting the lamp and welcome	Smt. Syamala Raghuram	
09:02	09:04	Prayer song	Selvi. Vaishnavi	Syamala
09:04	09:06	Welcome speech	Shri. Raj C	
09:06	09:08	Walk through of Event Schedule / Participants	Shri. Raj C	
09:08	09:11	Blessings	[Sundar to play video]	
			Shri. Sachithanandham	Raj
09:11	09:15	Inaugural Speech		
09:20	09:45	**Key Speech: Tamil Diaspora's Contribution to the World and success story**	Shri. Krishna Jaganathan	
09:45	09:55	Q & A		
			Mukhil Narayanan & Venil	Raj
			Narayanan	
10:00	10:02	Prayer song		
			Moderator: Shri. Renga Sankara	
10:02	10:32	Panel Discussion: **Challenges faced by Tamil diaspora and way out**	Shri. Ilanthai S. Ramasamy Dr. Chithambaram Egappan Shri. V. Sundaresh Selvi. Anu Panneerselvam Shri. Sriram Raghavan Shri. Suganth Srichandramohan	Raj
10:32	10:37	Q&A		
10:37	10:57	Key Speech: **Challenges faced by Tamil diaspora and way out**	Shri. Jataayu Bangalore	
11:00	11:02	Prayer Song	Selvi. Tejaswi Hariharan	Sundar
11:02	11:07	Conference "Malar" release	Shri. CR Rajendran	
11:07	11:10	Resolutions Declaration	Shri. KK	
11:13	11:17	Special Guest – Sri Srinivasa	Shri. Sri Srinivasa	
11:18	11:20	Special Guest Introduction	Shri. Sanjay Ganapathy	
11:20	11:48	Key Speech: **Nurturing Future Generations on Tamil Language & Cultural Heritage**	Shri. S. Gurumoorthy	
11:48	11:53	Vote of Thanks	Sundar	
11:53	11:55	Shanti Mantra	Selva. Tejaswi Hariharan	
11:55	12:00	Q&A		Raj / Sundar

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

OUR 3RD CONFERENCE PHOTO GALLERY



OUR 3RD CONFERENCE PHOTO GALLERY

SHREEKARII'S Bhojanam

Prosperity and Wellness

The best place to Find Homely Food

PURE VEGETARIAN RESTAURANT

BREAKFAST
LUNCH
SNACKS
DINNER

Catering Specialists

Office / Marriage / Party Orders

Cell : 9940 313 385

No. 26, Sastha Nagar, 1st Street, Valasaravakkam,
Chennai - 600 087. (Near Kalyani Kalyana Mandapam)
E-mail : info@shreekarii.com Web : www.shreekarii.com

QUALITY CARE
FOR PROSPEROUS LIVING

Manushyaa Blossom®

People benefitted by Manushyaa Blossom Treatment from different locations

India | USA | UK | Canada | South Africa | Africa | Kenya | Saudi Arabia Middle East UAE | Myanmar | Thailand | Hong Kong | Indonesia Malaysia Singapore | Australia | New Zealand

Manushyaa Blossom Pharma Care



Manushyaa Blossom Private Limited is a bio nano technology pharma company (GMP) located at Chennai, Tamilnadu, India, precisely following the scientific process defined by 18+ Siddhas (Scientific community of Medivalian ages) in their 100's of Tamil classical medical literatures for the synthesis of Siddha nano bio formulations and herbo minerals formulations .

We care for the prosperity of the entire mankind and assist you in protecting your health and strengthen the immune system through the scientifically proven siddha nano products portfolio.

MANUSHYAA BLOSSOM MULTI SPECIALITY SIDDHA CLINIC

MANUSHYAA BLOSSOM PRIVATE LIMITED

No. 5 (old No. 20),E - Block, 2nd Street Anna Nagar East, Chennai - 600 102 Tamilnadu, India

Ph:+91 44 26210606 | Mob: +91-8939 722 033

www.manushyaablossom.com | info@manushyaablossom.com